# தமிழ் இலக்கிய

## வினா விடை

## ஆண்டு 10 – 11

1987 ஆம் ஆண்டு கல்வியமைச்சு வெளியிட்ட தமிழ் இலக்கியம் நூற்பாடங்களை விளக்கும் வழிகாட்டியாகவும், 1988 ஆம் ஆண்டு முதல் க. பொ. த. ப. (சா. த) ப் பரீட்சைக்குத் தமிழ் மொழியின் இலக்கிய வினாக்களுக்கு ஆயத்தம் செய்ய உதவும் துணை நூலாகவும் அமைந்தது.

க. சொக்கலிங்கம் M. A.
(சொக்கன்)

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 55/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

# இலக்கிய

## வினா விடை

**ஆண்டு 10 – 11**

1987 ஆம் ஆண்டு கல்வியமைச்சு வெளியிட்ட 'தமிழ் இலக்கியம்' நூற்பாடங்களை விளக்கும் வழிகாட்டியாகவும், 1988 ஆம் ஆண்டுமுதல் க. பொ. த. ப. (சா. த) ப் பரீட்ச்சைக்குத் தமிழ் மொழியின் இலக்கிய வினாக்களுக்கு ஆயத்தம் செய்ய உதவும் துணை நூலாகவும் அமைந்தது.

**க. சொக்கலிங்கம்** M. A.

**(சொக்கன்)**

**வெளியீடு:**

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**

235, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

விலை: ரூபா **55/=**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் பதிப்பு - ஜுலை 1995

உரிமை ஆக்கியோனுக்கு

வெளியீடு :
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு:
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,
63, B. A. தம்பி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 10ஆம், 11ஆம் ஆண்டு மாணவர்களுக்கென வெளியிட்டுள்ள 'தமிழ் இலக்கியம்' என்ற பாட நூலைக் கற்போருக்கு உதவுமுகமாக 150 வினா – விடைகள் கொண்டு எழுதப்பட்ட நூல் இது.

முற்காலத்தில் 'தமிழ் இலக்கியம்' என்ற தனிப் பாடமே இருந்து வந்த நிலை இன்று மாறி, தமிழ் மொழியின் ஒரு கூறாகவே அது அமைந்துள்ளமையால் அதனைக் கற்கும் முறையும் கற்பிக்கும் முறையும் பெரிதும் வேறுபடுவது இயல்பேயாகும்.

செய்யுள், வசனம் என்ற இரு பகுப்புக்களுள் காலத்தாலும் சூழ்நிலையாலும் வெவ்வேறான பாடற் பகுதிகளும், வெவ்வேறான நடைகொண்ட உரைப்பகுதிகளும் (கட்டுரைகளும்) இந்நூலிலே அடங்கியுள்ளன.

இலக்கிய நயம், பொருள் விளக்கம், சொற்களஞ்சியத் தேட்டம், அறிவு விருத்தி ஆகிய நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் இந் நூலின் பாடல்களும் கட்டுரைகளும் கற்கவும் கற்பிக்கவும் வேண்டியனவாயுள்ளன. மொழியறிவு விருத்திக்கு இலக்கண அறிவின் அடிப்படைத் தேவையும் உணரப்பட்டுள்ளமையால், இந்நூலின் விளக்கக்குறிப்புகளிலே ஆங்காங்கு இலக்கண விளக்கங்களும் தரப்பட்டுள்ளன என்பதையும் கற்போர் உள்ளங்கொள்ளக்கடவர்.

மேற்குறித்த தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இவ்வினா விடை நூல் ஆக்கப்பட்டுள்ளமையால் மாணவர்க்குச் சிறப்பாகவும் ஆசிரியர்க்குப் பொதுவாகவும் இது பயன்படும் என்று நம்புகிறேன்.

இந்நூலைக் காலத்தின் தேவைநோக்கி வெளியிடமுன்வந்து என்னை எழுத ஊக்கிய ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை அதிபருக்குஇஸ்லாம் தொடர்பான ஐயங்களைப் போக்கி விளக்கம் அளித்து உதவிய ஜனாப் எம். எஸ் ஏ. றஹீம் **B. A. Dip-in-Ed.** அவர்களுக்கும், சரவை பார்த்துதவிய நண்பர் மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்களுக்கும் நன்றியுடையேன்.

இந் நூல்களை வாங்கி ஆதரவு தந்து ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் எமது நன்றி உரியதாகும்.

'வாணி'
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

க. சொக்கலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பராமாயணக் காட்சிகள்.

இலக்கிய கலாநிதி. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

## அ. அவையடக்கம்

### *1. அவையடக்கமாவது யாது? அது எத்தனை வகைப்படும்? விளக்குக.*

நூல் ஒன்றினை இயற்றப் புகும் ஆசிரியரோ, அறிஞர் நிறைந்த அவையிலே (சபையிலே) உரையாற்றப் புகும் பேச்சாளரோ, தமது தகுதியைக் குறைத்தும், எழுதவோ பேசவோ, புகுந்த பொருளின் தகுதியை உயர்த்தியும் தமது எழுத்திலோ, பேச்சிலோ குற்றங் காணிற் பொறுக்குமாறு வேண்டியும் உரைப்பது அவையடக்கமாகும்.

இந்த அவையடக்கத்தினை இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிபிள்ளை.
அ. சபைக்கு அடங்கும் முகம்
ஆ. சபையை (ஒருவாறு)' அடக்கும் முகம்
என இரண்டாக வகைப்படுததியுள்ளார்.

அவையடக்கத்திலே, கம்பர் தமக்கு முன்பு இராமாயணம் பாடிய வால்மீகியைச் சிறப்பாகவும் வசிட்டர், போதாயனர் ஆகியோரைப் பொதுவாகவும் புகழ்ந்து, அவர்கள் தகுதிக்குத் தம் தகுதி மிகவும் தாழ்ந்தது எனத் தம்மை இழித்து அடக்கமாகக் கூறுகிறார்.

மேலும் அவர் தமிழ் இராமாயணப் பண்பாட்டில் யாதும் குற்றம் நிகழுமாயின் அது என் குற்றமன்று வால்மீகியின் குற்றமே என்கிறார். இதன்மூலம் எவரும் தம்மிலே குற்றம் காணலாகாது என்று கம்பர் அவையினை அடக்குவதாகப் பண்டிதமணி குறிப்பிடுகிறார்.

### **2. கம்பர், இராமாயுணத்தில் வால்மீகிக்கும் தமக்கும் ஒப்புமைகாட்டும் வகையினை விளக்குக.**

அ. இராமாயணம் ஓசையால் உயர்ந்ததும் முழக்கோடு அலை புரள்வதுமான பாற்கடலுக்கு உவமிக்கப்படுகிறது. அதனைத் தமிழிலே கூறமுற்பட்ட கம்பர் தம்மைப் பாற்கடலுட் புகுந்து ஆசையால் அதனை முழுமையாக நக்கிக் குடிக்க முற்படும் பூனைக்கு ஒப்பிடுகிறார்.

ஆ. வால்மீகி தமது தீஞ்சுவைக் கவிதைகள் என்னும் அமுதத்தினைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களும் பருகுமாறு அளித்த வள்ளலுக்குக் கம்பரால் உவமிக்கப்படுகின்றார். கம்பர் தம்மை இராமன் மீது கொண்ட அன்பு என்னும் கள்ளருந்திய ஊமைக்கு ஒப்பிடுகின்றார். ஊமை பேச முற்பட்டால் பொருள் விளங்காத உளறலாகவே இருக்கும். அது போலத் தமது பாடல்களும் பொருளற்ற உளறல்களே என்றும் கம்பர் அடக்கமாகக் கூறுகிறார்.

### 3. *மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் முறையே 'மறைவில் வந்த வாக்கு' (மறைவாக்கு) 'மறைவில் வந்த சம்பவம்'. எனக் குறிக்கப்படுவன எவை? விளக்குக.*

அ. மகாபாரதத்தில் அருச்சுனன் மச்சயந்திரத்தினை வீழ்த்திப் போட்டியில் வென்று பாஞ்சாலியைத் தனக்கு உரியவளாய் அடைந்தான். அவனும் தமையனாகிய தருமன் உள்ளிட்ட பாண்டவரும் பாஞ்சாலியோடு தமது இல்லம் திரும்பியபோது தருமன். தலைவாயிலில் நின்று 'அம்மா! நாம் ஓர் அருங்கனி கொண்டுவந்துள்ளோம்' என்றான் அதற்கு விடையாகக் குந்தி 'பிள்ளைகாள்! நீவீர் பெற்ற அருங்கனியை ஐவீரும் ஒருவீராய்ப் பகிர்ந்து நுகர்மின்' என்றாள். இங்குத் தருமன் அருங்கனி என்றது பாஞ்சாலியையே. எனினும் தாயாகிய குந்தியின் மறைவிலிருந்து வந்த வாக்கை மறை வாக்கு வேதவாக்கு – (இதை மீறுதல் இயலாது) எனக் கொண்டு பாண்டவர் ஐவரும் பாஞ்சாலியை மணந்து கொண்டனர்.

ஆ. வாலியை அவன் தம்பி சுக்கிரீவனுக்காக இராமன் மறைவிலிருந்து அம்பு எய்து கொன்றான். வாலி இறக்கும் வேளையில் இராமனது செயல் மனுவகுத்த நீதிக்கு மாறானது எனக் கருதி முதலில் இராமனை ஏசினான். உலகமும் இராமன் செயல் கண்டு திகைத்தது. ஆனால் இறுதியில் பெரும் அறிஞனான (அறிவுக்கடலான) வாலி, இராமனின் அம்பு நுனியில் தருமம் குடியிருந்து நீதியை உணர்த்தியதை அறிந்து கொண்டு இராமனது தருமத்தைப் புகழ்ந்தான்.

இவ்விரு நிகழ்வுகளும் வேதம் விதித்த தருமம் இத்தகையது என்பதை எமக்கு நன்கு விளக்குவனவாகும்.

### 4. *கம்பர் 'என் அறியாமை இருந்தபடி என்னை?' என்று வருந்துவது ஏன்?*

வால்மீகி முனிவரின் (இராமாயண) வாக்குகள் நின்று நிலவுகின்ற பாரத தேசத்திலே. நொய்மையிலும் மிக நொய்ம்மையான கம்பராமாயணமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பராமாயணமாகிய நூலை நூற்கத் தொடங்கிய தமது அறியாமைக்காகவே கம்பர் வருந்துகின்றார்.

**5. 'புரமெல்லாம் எரிசெய்தோன்' எனத் தொடங்கும் பாடலின் பொருளை உமது உரை நடையிலே தருக .**

முப்புரங்கள் யாவற்றையும் எரித்த சிவபெருமான் முதலியோர் அருளிய ஒப்பில்லாத வரங்களைப் பெற்றவன் நான். இராமா! உனது அம்பானது அந்த வரங்களையும் உருவி இழிவே அறியாத வலிமைமிக்க எனது மார்பையும் உருவி என் உயிரையும் உண்கின்றதே! இந்த அம்பினை விட வேறு தருமமும் உள்ளதோ?

## அரும்பத விளக்கம்

பூசை-பூனை. மோகரித்து- சினந்து ஆர்ப்பரித்து. புரம்-முப்புரம். பொருஇலா- ஒப்பு இல்லாத உரம்-மார்பு, வலிமை நுகரும்-உண்ணும் (அனுபவிக்கும்) சரம்- அம்பு, நொய்து- மிகமெலிவு, வைத- ஏசிய, மூங்கை - ஊமை, நறவம்-கள், தீங்கவி - இனியபாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ. சிறப்புப்பாயிரம்

*, சிறப்புப்பாயிரம் என்றால் என்ன ?*

ஒருவரின் நூலுக்கு அவரின் ஆசிரியரோ. சகபாடியோ. நண்பரோ வேறு அறிஞரோ எழுதும் முன்னுரையே சிறப்புப் பாயிரம் எனப்படும் சிறப்புபபாயிரத்திலே நூலின் வரலாறு, ஆசிரியர் வரலாறு என்பன எடுத்துக் கூறப்படும் அணிந்துரை, அறிமுகவுரை முதலாகச் சிறப்புப்பாயிரத்திற்கு வேறு பல பெயர்களும் உள்ளன.

***7. வான்மீகி இராமாயணத்திற்கு இன்றுள்ள மொழி பெயர்ப்பில் இராமன் காடேகும் நிகழ்ச்சி எவ்வாறு காட்டப்பட்டுள்ளது? இதில் பண்டிதமணி காணும் குறை யாது?***

கைகேயி, தசரதனிடம் தான் பெற்ற வரங்களை இராமனுக்குத் தெரிவித்து அவனைக் காடு செல்லுமாறு கட்டளை இடுகின்றாள். இராமன், அவள் கட்டளையை மறுத்து 'நீ சொல்லி நான் போவதில்லை' என்றும் 'உன் வஞ்சங்களை இன்று நேற்று அன்று. நெடுங் காலமாக அறிவேன்' என்றும் கூறிக் கைகேயியின் இருதயமாகிய மராமரங்களைத் தன் சொல்லம்புகளாலே துளைக்கின்றான். இவ்வாறு அவன் கொடிய வார்த்தைகளைக் கூறுவது அவனது மகிமைக்கு இழுக்காகும். தந்தையின் கட்டளை என்று ஒரு சிறிய தாய் கூற அதனைக் கண்ணுக்கு நேரே மறுக்கின்ற ஒரு இராமனுக்கு ஒரு இராமாயணம் அதுவும் ஆதி காவியம்– ஒப்பற்ற ஒரு முனிவர் பெருமானால் செய்யத்தான் வேண்டுமா? என்பது பண்டிதமணியின் கேள்வி இராமனின் பாத்திரப் பண்பு இவ்வாறு குறைக்கப்படுவதே பண்டிதமணி காணும் குறை.

***8. சிலப்பதிகாரத்தில் தம்பியின் இராசலக்ஷணத்தைப் பொறாதே சீறுகின்ற ஒரு தமையன் யாவன்? அவ்வரலாற்றைச் சுருங்கத் தருக.***

சேரநாட்டரசன் சேரலாதனுக்கு மூத்த மகனான சேரன் செங்குட்டுவனே தம்பியாகிய இளங்கோவின் இராசலக்ஷணத்தைப் பொறாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறுகின்ற ஒரு தமையன்.

ஒரு நாள் சேரலாதனது அவைக்களத்துக்கு நிமித்திகன் (சோதிடன்) ஒருவன் வந்தான். சேரலாலனுக்கு இருமருங்கிலும் அமர்ந்திருந்த செங்குட்டுவனையும் அவன் தம்பியாகிய இளங்கோவையும் அவன் உற்று நோக்கிய பின் 'இவர்களுள் இளங்கோவுக்கே இராசலக்ஷணம' உள்ளது. அவனே சேரலாதனுக்குப் பின் அரசனாவான்' என்றான். இது கேட்ட செங்குட்டுவன், பொறாமை கொண்டு வெகுண்டெழுந்தான். அதுகாலை இளங்கோ என் அண்ணனுக்காக இன்றே என்அரசு உரிமைகளைக் கைவிட்டுத் துறவியாகின்றேன்' என்று சபதம் செய்து அவ்வாறே சமணத்துறவியாகி, இளங்கோவடிகள் எனப் பெயர் பெற்றார். இவரே சிலப்பதிகாரம்' என்ற முதலாவது தமிழ்க் காவியத்தை இயற்றிய பெருங்கவிஞர்.

## 9. *கம்பர், கைகேயியின் கட்டளையைக் கேட்ட இராமனை எவ்வாறு சித்திரிக்கின்றார்? விளக்குக.*

சுமந்திரன் மூலம் சிற்றன்னையாகிய கைகேயி தன்னை அழைப்பதைக் கேள்வியுற்ற இராமன் அவள் இருந்த இடத்தை நோக்கிச் சென்றான் 'என் நாயகர் தமது வாயால் அதனை உரைக்கமாட்டார் நானே உரைக்கின்றேன்' என்று கூறியவண்ணம் தனக்கு எதிரில் வந்த கைகேயியைத் தாய் என்று நினைக்கின்றான் இராமன். அவளோ யமன் போன்று அவனுக்கு முன்னால் வருகின்றாள். அவனைக் கண்டபொழுது மாலைக் காலம் அணுகிய வேளையில் வந்தடைந்த தாய்ப் பசுவைக் கண்ட கன்று போல இராமன் குதூகலிக்கிறான்- அவளோ அவனைக் காடு செல்ல ஏவுகின்றாள். அந்த ஏவலைக் கேட்ட இராமனின் முகம் அப்பொழுதுதான் மலர்ந்த செந்தாமரையையும் தனது மலர்ச்சியால் வென்று விடுகின்றது. 'எமது அரசரின் கட்டளையாக இல்லாது உமது கட்டளையாயிருப்பினும் அதனை நான் மறுப்பேனோ? என் தம்பிக்குக் கிடைத்த செல்வம் நான் பெற்ற செல்வம் அன்றோ?' என்று பதில் கூறுகின்றான் அவன்.

*கம்பர் செய்த வம்பு (புதுமை) இராமன் இவன்!*

## 10. *கம்பர் வால்மீகியின் இராமாயணத்தினின்றும் ஓர் அக்ஷரங் (எழுத்து) கூடத் தவறவில்லை என்பதைப் பண்டிதமணி எவ்வாறு நியாயப்படுத்துகின்றார்?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மொழியாகிய சமஸ்கிருதத்தில் வால்மீகியால் எழுதப்பட்ட இராமாயணம் காலம் தோறும் மூலக் கதையிலிருந்து மாறுபட்டுச் சென்றது ஆனால் கம்பரோ சமஸ்கிருத மொழியை நன்கு அறிந்த அந்தணர்களை வைத்துக் கொண்டு. இரவு முழுவதும் வால்மீகி இராமாயணத்தை ஆராய்ந்து அதன் மெய்ம்மைகளைத் தெரிந்து இடையிற் கலந்த பொய்ம்மைகளைத் தள்ளிப்பகலிலே நாள் தோறும் எழுநூறு பாடல்களாகப் பாடியதே கம்பராமாயணம். வால்மீகி கண்ட கதையைக் கதாபாத்திரங்களைச் சந்தர்ப்பங்களைக் கற்பனை செய்து கண்டதுதான் கம்பன் செய்த வம்பு (புதுமை) என்பது பண்டிதமணியின் கூற்று.

### *11. 'முந்திய நாவினார்' என்பது யாரை ? எவ்வாறு ?*

இராமாயணத்தை வட மொழியில் ஆக்கிய வான்மீகி, வசிட்டர், போதாயனர் என்போருள் முதலில் இராமாயணம் செய்தவர் வால்மீகி. எனவே அவரே 'முந்திய நாவினார்' இதனாலேயே அவர் செய்த இராமாயணம் 'ஆதிகாவியம்' எனவும் சிறப்புப் பெயர் பெறலாயிற்று.

அரும்பத விளக்கம்

மறலி–யமன். வைவு–ஏச்சு. இராசலக்ஷணம்– அரசனுக்குரிய பண்பு. பகர்வன்–சொல்வேன். பணி–கட்டளை பின்னவன்–பின்தோன்றியவன்(தம்பி) க்ஷணம்–கணம்(ஒரு நொடிப்பொழுது) கழுந்தர்–வைரமான மனத்தினர் அவிநவகவி நாதன்– மிகப்புதுமையான கவிதை செய்யும்(கவித்தலைவன்)

இ. கம்பன் அபர பிரமன்

### *12. சங்கத்து சான்றோர் யாவ்ர் ? அவர்கள் பாடிய அகப்பாடல்கள் எத்தகையன?*

முற்காலத்திலே சங்கமாகக் கூடியிருந்து தமிழை ஆராய்ந்து பாடல்கள் இயற்றப்பட்டன என்பர். சங்கத்தில் அமர்ந்து பாடல் இயற்றிய புலவர்களே சங்கத்துச் சான்றோர்.

இவர்கள் இயற்றிய பாடல்கள் இருவகைப்படும். ஒன்று அகப்பாடல். மற்றது புறப்பாடல் அகம் என்பது உள்ளம். உள்ளத்திலே எழும் உணர்வுகளிலே தலைசிறந்ததும் இவ்வாறு இருந்தது என்று பிறருக்கு எடுத்துக்கூற முடியாததும் காதல் உணர்வேயாகும். இக் காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வைச் சங்கத்துச் சான்றோர்கள் ஆழ்ந்து சிந்தித்து. தூய்மையாகவும். அருமை யாகவும் பாடிய பாடல்களே அகப்பாடல்கள் (புறப்பாடல்களிலே வாழ்க்கையின் மற்றைய பல அம்சங்களும் இடம் பெற்றாலும் வீரமும் போருமே முதன்மையாகக் கொள்ளப்பட்டன.

### 13. *கம்பனுக்குக் கொடையும் தனியுரிமையுமாவது எது ?*

ஒரு பொருளைப் பாடவேண்டும் என்று எண்ணி அதைக் கம்பன் எடுத்துக் கொண்டால் அந்தப் பொருள் எவ்வாறு சிறப்பாக அமைய வேண்டுமோ அவ்வாறே சிறப்பாக அமைந்துவிடும். அதுவே கம்பனுக்கு கொடை பிறப்புரிமை. 'சிறப்புப்பொருந்திய வெண்மையான முத்து அதனை அணிந்து கொள்பவர்களுக்கேயன்றித் தான் பிறக்கும் கடல் நீருக்கு என்ன பயன் தரும? என்ற கலித்தொகை (சங்கநூல்) அடிகளின் பொருளுக்குப் பொருத்தமாகச் சிறந்த பொருளாகிய முத்தின் பெறுமதியை அறிந்து தன் பாட்டுக்கு அதனை அணியாக்குபவன் கம்பனே.

### 14. *திருவள்ளுவரிலே (திருக்குறளிலே) கம்பன் பெற்ற 'வீர சிகர வெண்முத்தம்' (வீரத்தின் உச்சி எனத்தகும் வெள்ளை முத்து) யாது ?*

பகைவர்மேல் இரக்கம் காட்டாது அவரைத் தாக்கி அழிப்பதே பெரிய ஆண்மை என்று அறிந்தோர் உரைப்பர் ஆனால் அந்தப் பகைவர்களுக்கு ஒரு தாழ்வு உண்டானால் கருணை காட்டி உபகாரம் செய்வதே பெரிய ஆண்மை என்ற ஆயுதத்தின் கூர்மை யாகும். அஃதாவது தோற்று வெறுங்கையோடு நிற்பவர் மீது இரங்கித் தொடர்ந்து போர்செய்யாதுவிடல் புறப்பாடால் இலக்கணத்திலே இதற்குத் 'தழிஞ்சி' என்பது பெயர் தழிஞ்சி–தழுவுதல்.

### 15. *'மாமியார் பக்கத்திற் சென்ற மருமகன்' என்று இராவணனை உவமிப்பதன் பொருளை விளக்குக. அவ்வாறு நின்றவனுக்கு இராமன் கூறியது யாது?*

மாமியார் பக்கத்திலே மருமகன் செல்லக் கூசுவான். வெட்கம் அவனை ஆட்கொள்ளும். இராமனின் அம்புகளிலே தேர், படைக்கலம், படை, வாள், வீரம், மானம் யாவும் இழந்து கூச்சமும் நாணமும் அடைந்த இராவணனும், இராமனாகிய மாமியார் முன்பு தலைகுனிந்து கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல்களாலே தரையிற் கீறியவண்ணம் நிற்கின்றானாம.

அவனைக் கருணையோடு நோக்கிய இராமன் 'உனக்கு உதவியாய் அமைந்த படையாவும் சூறாவளியில் அகப்பட்ட துரும்பாய்ப் பறந்து போய்விட்டதை நீகண்டாய். ஆதலால் இன்று நீ திரும்பிப் போய் நாளை (சகல ஆயத்தங்களுடனும்) போருக்கு வா' என்றான்.
திருவளளுவர் குறித்த வீரத்தின் உச்சியை இராமன் என்ற பொருத்தமான பாத்திரத்திலே பொருத்தமான சந்தர்ப்பம் நோக்கிக் கையாண்டதே கம்பனின் சிறப்பு.

## *16. 'அருண வெங்கதிர் ஆயிரத்தவன்' எனத்தொடங்கும் பாடலின் பொருளை உரைநடையில் தருக.*

சிவந்த வெம்மையான ஆயிரம் கதிர்களை உடையவனாகிய சூரியன், அன்பு கொண்டு பெற்றவன் கர்ணன், அவன் கரிய நிறத்தவரான (கண்ணர் – கிருஷ்ணர், கரியர்) கிருஷ்ணன், அருச்சுனன் ஆகியோரின் மார்புகளிலே சில அம்புகளை விட்டான். நிறத்தினாலும் அந்நிறம் காரணமாக அமையும் பெயரினாலும் இவர்கள் வேறானவரல்லர். இவர்கள் மனங்களும் ஒன்றையே சிந்திக்கும் என்று அவன் உரைத்து, இளமையின் ஒளிநிலவு எறிக்கும் வண்ணம் நகை செய்து அப்பாற் சென்றான்.

## *17. போர்க்களத்திலே அருச்சுனன், கர்ணனை நோக்கி 'இன்று போயினி நாளைவா' என்று கூறியதிலே பண்டிதமணி காணும் குறை என்ன?*

இராவணன் இராமனின் முன்பு நிராயுதபாணியாய்க் கூசி நின்றது போலக் கர்ணன் அருச்சுனன் முன்பு நிற்கவில்லை. எனவே கர்ணனாகிய பகைவனுக்குத் தாழ்வு ஏற்படாத இடத்தில், அருச்சுனன் அவனுக்கு ஊராண்மை (உபகாரியாந் தன்மை) செய்ததில் அர்த்தம் இல்லை. அஃதாவது கம்பரைப்போல வில்லிபுத்தூரர் தமது பாரதத்தில் ஏற்ற சந்தர்ப்பம், ஏற்ற பாத்திரம் கொண்டு திருக்குறட் கருத்தை அணிசெய்யவில்லை. இதுவே பண்டிதமணி காணும் குறை.

## *18. 'வென்றி கூர்வரி வின்மை ஆண்மையினான்' யாவன் ? அவன் யாருக்கு ஒப்பபிடப்படுகிறான்?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருச்சுனன், வெற்றியைத் தரும் வரிந்துகட்டிய வில்லின் திறமையாலே, வலிமை பொருந்திய அரக்கரைக் கொன்றவனும் இடபம் போன்றவனுமாகிய இராமனுக்கு ஒப்பிடப்படுகின்றான்(பேரிசை கொண்ட ஆண்மையினான் – பெரும் புகழ் கொண்டஆண்மை நிறைந்தவன் – அருச்சுனன்)

### 19. 'இதனை இதனான்' எனத்தொடங்கும் திருக்குறள் மூலம் பண்டிதமணி கூற முற்படும் குறிப்புப் பொருள் யாது?

இந்தத் தொழிலை இந்தக் கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு. அத்தொழிலை அவனிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பது இத்திருக்குறளின் பொருள். இவ்வாறு ஒப்படைக்கத்தக்க திறமை கம்பனுக்கு உண்டு. வில்லிபுத்தூரருக்கு இல்லை என்பதே பண்டிதமணி கூறமுற்படும் குறிப்புப் பொருள்.

அரும்பத விளக்கம்

தறுகண் – வீரம். அஞ்சாமை,ஆளையாய் – ஆட்படையாய் பூளை. துரும்பு, நாகுஇளம் – மிகுந்த இளமை, வாளை – ஒருவகை மீன். யௌவனம் – இளமை, அருண(ம்) வெங்கதிர் – சிவந்த வெண்மையான கதிர், பகழி – அம்புவின்மை – வில்வன்மை, அடல் – வலிமை, ஆய்ந்து – ஆராய்ந்து, இம்பர் – இவ்வுலகம், உம்பர் – தேவர், அபரபிரமன் – பின்வரும் (இரண்டாம்) பிரமன்.

+. ஆறு

### 20 'சூரிய குலத்துப் பிறந்த அரசர்களின்நல்லொழுக்கங்கள்' படியோலைகள் (பிரதிகள்) சரயு அந்த ஒழுக்கப்படிகளின் மூல ஓலை (மூலப்பிரதி) விளக்குக.

சூரிய குலத்தில் வந்த மன்னர்கள் சரயு நதியின் பிள்ளைச் செல்வங்கள் அச்செல்வங்கள் தமது நல்லொழுக்கத்திலே தம் தாய்க்கு நல்ல அணிகலன்களாய் விளங்கி, அதன் இல்லறம் மாண்பு பெற உதவுகின்றனர்.

1.இராமன் இப்பிள்ளைச் செல்வங்களுள் ஒருவன். இவன் மனைவியைக் கவர்தலாகிய பிறர்மனை நயக்கும் பேதைமையால் இராவணன் இவனுக்குப் பகைவன் ஆகின்றான். போர்க்களத்தில். இராவணன் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை, படைக்கலம் யாவும் இழந்து நின்ற வேளையிலே இராமன், அவனை

'இன்று போய்ப் போர்க்கு நாளை வா'

என்று வீரசிகரமாகிய ஒழுக்கம் காக்கின்றான்.

2. இராமனின் மூதாதையருள் ஒருவன் அரிச்சந்திரன் பெருந்துன்பக் கடலில் மூழ்கியும் செல்வங்களை இழந்தும் வருவாயும் சுருங்கிப் போன காலத்திலும் அவன் (விசுவாமித்திரனுக்கு அளித்த) தன் வாக்குறுதியை நிலை நிறுத்தி உலகை ஆண்டான். 'எமக்கு இனி வரவிருக்கும் (முத்தியாகிய) சதியை இழந்தாலும் சொன்ன சொல் தவறோம்' என்று உறுதியுரைத்தான் இவனும் சரயுவின் புதல்வனே.

3.தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவுக்காகத் தன் உடலையே துலாக்கோலில் ஏற்றி வழங்கிய சிபிச் சக்கரவர்த்தி.

4.சூரிய குலத்து முதல்வனும் நீதிகளை வகுத்துத் தர்மசாத்திரம் செய்தவனுமாகிய மநு சூரியகுல திலகமாகிய மாந்தாதா இவர்களும் சரயு பெற்ற மக்கட் செல்வங்களே அஃதாவது சரயுவாகிய மூல ஓலைகளின் படியோலைகள் இவர்கள்.

## *21. மநுதர்மசாஸ்திரத்தையும் திருக்குறளையும் ஒப்பீடுக.*

1.மநுதர்ம சாத்திரம் ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்று வகுத்துரைக்கும், திருக்குறளோ மனிதர்களுக்கான பொது நீதிகளை தர்மங்களை எடுத்துரைக்கும்.

1.நீதியை உணர்ந்து அதன்வழி நடக்கும் குலம் உயர் குலம் அக்குலம் கடைப்பிடிக்க வேண்டிய முறை வைதீகம். இந்த வைதீக நெறிக்கே நூல் உண்டு அநீதியைக் கடைப்பிடிக்கும் தாழ்குலம் அவைதிகம் அதற்கு நூ செய்யப்படுவதில்லை. திருவள்ளுவர் வைதீக நெறியை ஒழுகுபவர்களுக்கான பொது நூல் செய்தார். மநுவோ வைதீகநெறியினரைப் பல படிகளாகப் பிரித்து நூல் செய்தார். திருவள்ளுவரின் நூல் பொது நூல், மநுவின் நூல் சிறப்பு நூல்.

## *22. 'தாதுகுசோலை தோறும்' ...........எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரந்தப் பொடிகள் சொரியும் பூஞ்சோலைகளிலும் சண்பக மரக் காடுகளிலும் இதழ் விரிகின்ற மலர் நிறைந்த நீர்ப்பொய்கைகளிலும் புதிய மணல் பரந்த கரைகளிலும் குருக்கத்திதேன் சொரியும் கமுகு என்பன அடர்ந்து வளர்ந்த காடுகளிலும் வயல்களிலும் சரயுநதி உலாவி வருகின்றது அது ஒவ்வோருடம்பிலும் சென்று உலாவும் உயிர் போன்றதாகும்.

## அரும்பத விளக்கம்

இரவி-சூரியன், எண்ணில்-(எண்+ இல்)-எண்ணமுடியாத உரவு-வலிமை, நன்கலம்-நல்ல ஆபரணம், ஆரஞர்-(அருமை + அஞர்)-அரியதுன்பம், ஆக்கம்-செல்வம், முப்பால்-திருக்குறளின் மறுபெயர் (அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பகுதிகளும் கொண்டது) பண்டைமறை-பழமையான வேதம், நேர்வனச்மமாவன, நாரின்மை-அன்பற்ற தன்மை, கழிவரேல்செல்வார்களானால்,பூகம்-கமுகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ . குலஞ்சுரக்கும் ஒழுக்கம்

**23. 'நாடு என்பது நாடா வளத்தது' என்னும் திருக்குறட் கூற்றிலிருந்து நீர் அறிவது யாது.?**

ஒரு நாட்டிலே வாழ்பவர் தமக்கு வேண்டிய செல்வ வளங்களைத் தேடி வருந்தாமல் இயல்பாக அவற்றைப் பெற நாட்டில் வாய்ப்பு இருத்தல் வேண்டும், அந்த வாய்ப்பு உள்ள நாடே நாடு எனத்தக்கது இதற்கு ஆறும் மலையும் அந் நாட்டில் அமைவது அவசியம் 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது ஔவையாரின் திருவாக்கு ஓடிவரும் நீருடைய ஆறும் வாய்ந்து விளங்கும் மலையும் ஒரு நாட்டுக்கு உறுப்பு என்று வள்ளுவர் கூறுவதும் நோக்கத்தக்கது.

**24. கம்பன் வருணிக்கும் நாட்டிலே எவை எவை எவ்வெவற்றைச் சுரக்கின்றன? இவ்வாறு சுரப்பவற்றுள் தலை சிறந்தது எது? விளக்குக**

அந்த நாட்டிலே குடிமக்களுக்கு வேண்டிய செல்வங்களைக் கப்பல்கள் சுரக்கின்றன நிறைவான இயற்கை வளத்தினை நிலம்சுரக்கின்றன. நல்ல மணிகளைச் சுரங்கங்கள் சுரக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய நல்ல ஒழுக்கநெறிகளை அரிய தூய குலமாகிய மலை சுரக்கின்றது.

இங்கு தூயகுலத்தினை மலைக்கும் பருமரத்துக்கும் ஒப்பிடுகிறார் பண்டிதமணி. மலை அசைவற்றும் அளக்கமுடியாத பருப்பத்தை அடைந்தும் விளங்கும் நல்ல குலமும் எந்நிலையிலும் சலனம் அடையாதும் தனது பெருமை குன்றாதும் விளங்கும் மலையை எந்தத்திசையில் நின்றும் தெளிவாகக் காணலாம் குலமாகிய மலையும் எவர்க்கும் எவ்விடத்தும் தன்னை மறைக்காது காட்டி நிற்கும்.

பருமரத்தைப் பற்றிக் கொண்டால் மட்டுமே பல்லிகள் உயிர் வாழல் கூடும் நற்குலம் என்பது பருமரம் அதனைப்பற்றியே கப்பல் சுரக்கும் செல்வம் பிலம் சுரக்கும் செல்வம் யாவும் நிலையாக வாழும் எனவே நாட்டின் பெருமைக்கு நற்குலமலையின் ஒழுக்கமே முதன்மையானது என்பதைக் கம்பனின் பாடல் வாயிலாகப் பண்டிதமணி தெளியவைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25. குலம் சுரக்கும் ஒழுகலாறு என முதன்மைப்படுத்திப் பண்டிதமணி கூறும் ஒழுகலாறு எது? அதற்கு கம்பராமாயாணத்திலிருந்து அவர் காட்டும் உதாரணங்களை விளக்குக.**

'நான் வறியவன் ஆயினேன்' என்னும் துன்பம் தரும் மொழியைக் கூறாது கொடுத்தலே குடிப்பிறந்தானின் ஒழுகலாற்றில் தலைசிறந்தது என்பது பண்டிதமணியின் கருத்து. குமணன் பரிசில் வேண்டிவந்த புலவனுக்குத் தனது தலையையே ஈவதற்கு முன்வந்தும் இளையான் குடிமாற நாயனாரின் இல்லத்திலே நள்ளிரவிலே ஒரு நெல்மணியும் இல்லாத வேள்ளையிலும் விதைத்த நெல்லை மண்ணோடு அள்ளி வந்து வறுத்துக் குற்றிச் சோறாக்கிக் குப்பைக்கீரை கொண்டு கறி சமைத்து விருந்தளித்தும் 'இலம்' எனும் எவ்வம் உரைக்காமைக்குப் பண்டிதமனி காட்டும் சான்றுகள்.

ஆனால் கம்பராமயணத்தில் 'அளித்தல்' என்பது தியாகம் என்ற பெரும் இலட்சிய ஒழுகலாறாய் வளர்ந்து விழுது படர்கின்றது. வருந்தி வந்தவர்க்கு ஈதலும் விருந்தளித்தலும் அந்நாட்டு விளைவுகளானால், வில்வீரனாகிய இராமன்.

1.இராவணனை 'இன்று போய்ப் போருக்கு நாளை வா' என அருளலும்.

2. கைகேயி 'பரதனுக்கு நாடு' என்றதும் 'என் தம்பி பெற்ற செல்வம் நான் பெற்ற செல்வம் அல்லவா?' என இராமன் மகிழ்வதும்.

3. இராமன்.'பரதன் முடிசூடவுள்ளான் ' என்றதும் கோசலை 'நின்தம்பி நிறைகுணத்தவன், குறைவிலன் அவன் அரசு புரிவது நாட்டுக்கு நலன்' என்று உரைப்பதும்.

4. கைகேயி தன்மகனுக்கும் இராமனுக்கும் வேறுபாடு காட்டாது 'இராமனைப் பெற்ற எனக்கு இடர் உண்டோ?' என்று உரைப்பதும்.

5. இலக்குமணன் இராமனோடு காடேக விடை வேண்டி வந்த பொழுது அவன் தாயாகிய சுமித்திரை 'ஸ்ரீராமனுக்குத் தம்பி என்ற முறையில் அவனைத் தொடர்ந்து செல்லாதே அவனுக்கு ஏவலன் என்ற கருத்தில் அவனுடன் செல் இராமனுக்கு ஏதாவது நிகழ்ந்து அதனை தடுக்க உன்னால் இயலாது போனால் இராமன் முடியுமுன்னமே உன் முடிவு என் செவியிற் கேட்கவேண்டும்' என்று சொல்வதுமாகிய குலந்தரும் மேலாம் ஒழுகலாறுகள் சூரிய குலமாகிய அயோத்திய அரச வம்சத்திலிருந்து குடிமக்களுககுச் சுரப்பதே, சுரப்புகளிலெல்லாம் சிறந்த சுரப்புபாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையே பண்டிதமணி கம்பராமாயணத்தில் கண்டு எமக்குக் காட்டும் உயர்ந்த ஒழுகலாறுகள்.

## அரும்பத விளக்கம்

ஒழுகலாறு - ஒழுகும் வழி, நல்குரவு - வறுமை, அவயவம்- உறுப்பு, உந்நதமான - மிக உயர்வான, கலம்-கப்பல், அர்த்தயாமம்-நள்ளிரவு, விளைபுலம்-விளையும்வயல், வில்லேர் உழவன்-வில்லைக் கலப்பையாகக் கொண்டு போர்க்களத்தில் உழவுத் தொழில் நடத்தும் வீரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. நளவெண்பா

## சுயம்வர காண்டம்

***26. நளவெண்பாவை இயற்றிய புலவர் யார்? அது எத்தனை காண்டங்கள் கொண்டது? ஒவ்வொரு காண்டத்திலும் கூறப்பட்டவற்றை மிகச் சுருக்கமாகத் தருக.***

நளவெண்பாவை இயற்றிய புலவர் புகழேந்தியாவர். நளவெண்பா நிடத நாட்டரசனான நளமகாராசனது, விதர்ப்ப நாட்டரசன் வீமன் மகளாகிய தமயந்தியினது வரலாற்றைச் சுயம்வர காண்டம் கலித் தொடர் காண்டம் கலிநீங்கு காண்டம், என்னும் மூன்று காண்டங்களிலும் விரித்துரைக்கும்.

1.சுயம்வரகாண்டம் :–அன்னத்தின் மூலம் அறிமுகமான நளனும் தமயந்தியும்ஒருவர் மீது ஒருவர் காதல் கொள்வதும் தமயந்தி சுயம்வரத்தில் தமயந்தியை நளன் மணந்து தன் நாடு மீள்வதும் இக்காண்டத்தில் கூறப்படும்.

2.கலித்தொடர் காண்டம் :–சனீஸ்வரனாகிய கலிபுருடன் தொடர்ந்ததால் நளன் புட்கரன் என்ற அரசனுடன் சூதாடி நாடு நகர் இழந்து காட்டில் தமயந்தியையும், விடுத்துச் சென்று இருது பன்னன் என்ற அரசனுக்குச் சாரதியா்ய் அமர்தலும், நளனின் மக்களும், பின்னர் தமயந்தியும் விதர்ப்ப நாட்டில் வீமனின் பாதுகாப்பிலே இருப்பதும் இந்தக் காண்டத்திலே கூறப்படும்.

3.கலிநீங்கு காண்டம்:– நளன் இருதுபன்னனிடம் தேர்ச் சாரதியாய் இருப்பதறிந்து அவனை விதர்ப்ப நாட்டிற்கு வருவிக்கத் தமயந்தி தனக்கு இரண்டாம் சுயம்வரம் என்று தந்திரமாக அறிவித்தலும் நளன் இருதுபன்னன் சாரதியாக விதர்ப்பநாடு வருவதும் அங்கு உண்மை வெளியாகி மனைவி மக்களுடன் கூடுவதும் மீண்டும் புட்கரனோடு சூதாடி நாடுநகர் பெற்று மகிழ்வதும் இக்காண்ட நிகழ்ச்சியாகும்.

***27 நளமகாராசனுடைய செங்கோலாட்சியின் சிறப்பைப் புலவர் எவ்வாறு கூறுகின்றார்?***

மகரந்தம் சொரியும் பூக்களாலான மாலையை அணிந்த நளன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ச்சியான தனது சந்திரவட்டக் குடையின் நிழலிலே தருமம் அமைதியாகத் துாங்கவும் பெண்கள் தமக்கு அருகில் வைத்து உணவூட்டும் பசுங்கிளியும் வேட்டைப் பருந்தும் ஒற்றுமையாக ஒரு கூட்டில் வாழவும் ஒப்பற்ற முறையில் நாட்டைக்காத்து வந்தான் என்று கூறுகின்றார்.

### 28 நிடதநாட்டின் வளத்தினைக் குறிக்கும் பகுதிகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**1. தேங்குவளைத் தேன் ஆடி வண்டு சிறகு உலர்த்தும் நீர் நாடு.**

நீர்த் தடாகங்களிலே நீலோற்பல மலர்கள் நிறைந்துள்ளன. அம்மலர்களிலே தேன்பெருகி வழிகின்றது, அந்தத் தேனிலே மூழ்கிய வண்டுகள் சிறகுகளை உலர்த்துகின்றன. இத்தகைய நீர் வளத்தால் சிறந்தது நிடதநாடு.

**2. மேதிக்குலம் ஏறி மென் கரும்பைக் கோதிக் கடித்துத் தான் முத்து உமிழும் கங்கை நீர் நாடு.**

எருமைக் கூட்டம் கரும்புத் தோட்டத்தினுள் நுழைகின்றது அங்குக் கொழுத்துத் திரண்டு வளர்ந்த கரும்புகளைக் கடித்துக் கரும்பினுள் விளைந்த முத்துக்களை வேறாக்கி உமிழ்கின்றது. இயற்கை வளத்தோடு முத்து முதலாகிய செல்வமும் இயல்பாகவே தோன்றுவதற்கு இடமானது நிடதநாடு.

### 29 நளவெண்பாவில் தரப்பட்டுள்ள பாடற் பகுதியிலிருந்து நளமகாராசனின் குணவியல்பு பற்றி உமக்கு உண்டான மனப்பதிவினைத் தருக.

நளன் நீதிவழுவாது தன் நாட்டைச் செங்கோலாட்சி புரிந்து வந்தவன் என்பதற்கு. அவனது சந்திர வட்டக் குடைக்கீழ் அறங்கிடக்கிறது என்பதும், கிளியும் பருந்தும் பகை மறந்து ஒரு கூட்டில் வாழ்கின்றன என்பதும் சான்றுகளாகும். அவன் சிறந்த இரசிகன் என்பதற்கு அவன் சோலையை நாடிச் செல்வதும், பெண்களாகிய ஏவல் மகளிர் அவனைச் சூழ்ந்து செல்வதும், அன்னத்தைக் கண்டதும் அதன் நடையோ பெண்களின் நடையோ சிறந்தது எனக்காண அதைப் பிடிப்பிப்பதும் நல்ல எடுத்துக் காட்டுக்களாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளன் சிறந்த வீரனுமாவான் சகல திசைகளிலும் அவனது ஆதிக்கம் பரந்திருந்தது அவன் 'திசை முகந்த வெண்கவிகைத் தேர் வேந்தன்' கவிகை குடை, அவனது தோள்கள் தூணை ஒத்தவை என்பதால் அவன் உடல் வலிமை எத்தகையது என்றும் தெரிந்து கொள்ளலாம். அவன் வலிய யானைப்படைக்குத் தலைவன் பகைவரை அழிக்கும் கூரிய வேற்படையினன் இத்தகைய நளனது அற, மறப் பண்புகள் அன்னத்தின் வாயிலாக மேலும் தெளிவாகப் புலப்படுகின்றன, அவை வருமாறு.

நேர்மையான உள்ளத்தன், கருணை நிறைந்தவன், செங்கோன்மைச் சிறப்பு உடையவன், பெண்களின் உள்ளங்களை மயக்கிக் கவரவல்ல வலிய தோளினன். சத்தியம் தவறாதவன் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் வாழ்பவர் யாவரிலும் மேம்பட்டவன். இவனது நெஞ்சிலே தருமம் வாழ்கின்றது. விழிகளிலே அருள் ஒழுகுகின்றது தோள்களிலே வீரம் கொலுவிருக்கிறது.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்குகையில் நளன் காவிய நாயகனுக்குரிய நீதி நேர்மை, வீரம், அழகு, ஆற்றல், அருள் என்ற எல்லா நலன்களும் ஒருசேர அமைந்தவன் என்பதே என் மனப்படிவாகும். அன்னம் கூறுவதுபோன்றே 'அங்கண்மாஞாலத்து அவற்கு செங்கண்மால் அல்லனேல் தேர் வேந்தர் ஒப்பரோ!' என்றே கூறத் தோன்றுகிறது:

### 30 தமயந்தியின் குணநலன்கள் பற்றிய உமது மனப் படிவினைத் தருக

தமயந்தி வசை இல்லாதவள் மூங்கிலைப்போன்ற மென்மையான தோள்கள் உள்ளவள் நாணம், மடம், அச்சம் பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களும் தேர், யானை, குதிரை, காலாள் ஆகிய நான்கு படைகளாகவும் மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளும் மந்திரிகளாகவும் ஆரவாரிக்கின்ற சிலம்பே அழகிய வெற்றி முரசாகவும் இரு கண்களே வேற்படை வாட்படையாகவும் முகமாகிய வெண்கொற்றக் குடை நிழலிலே பெண்மையாகிய ஆட்சியை நடத்தும் அரசியே தமயந்தி இவ்வாறு தமயந்தியின் பண்பு நலன்கள், அழகு, ஆற்றல் என்பன புலவராலே நன்கு புலப்படுத்தப் படுகின்றன. அன்னத்தை நடையில் வென்ற அணங்காகிய அவள் விதர்ப்ப நாட்டரசனின் குவக்கொடியாய், நளனுக்கு எல்லா வகையிலும் பொருத்தமும் தகுதியும் வாய்ந்த காதலியாய் பெண்மைக்கு ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணமாய் உள்ளாள் என்பதே எனது மனப்படிவாகும்.

**31 நளனினதும் தமயந்தியினதும் உள்ளங்களிலே காதலை முண்டெழ வைத்த அன்னத்தின் அழகுதிறமை ஆகியன புலவரால் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றன என விளக்குக.**

அன்னம் பால்போலும் தூய்மையான வெண்ணிறம் உடையது. அதன் வெண்ணிறத்தினால் இருண்ட சோலையின் நிறமே மாற்றம் அடைகின்றதென்றால் அந்த வெண்மை எத்தகையதாய் இருந்திருக்க வேண்டும்? அன்னத்தின் கால்களோ சிவப்பானவை. அந்தச் சிவப்பு நிறத்தால் தடாகத்தின் நீலமணி நீரும் சிவப்பாய் மாறுகின்றதாம்! இவற்றின் மூலம் அன்னத்தின நிறமும் அதனால் உண்டாகும் ஒளியும் அழகும் நன்கு புலனாகின்றன.

நளன் அன்னத்தைப் பற்றியபோது அதற்கு அச்சம் உண்டானது போலத் தோற்றினாலும் தன் திறமையினாலே விரைவில் அது சமாளித்துக்கொண்டு விடுகிறது. தனது கருத்தைத் திறம் பட வெளிப்படுத்தும் திறமையும் அதற்கு மிகுதியும் உண்டு என்பதை நளனோடும் தமயந்தியோடும் அது உரையாடும் வகையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அன்னம் நளனுக்கு கூறியவை இவை.

திசையனைத்தையும் தனதாக்கிய சந்திரவட்டக் குடைநிழற்றும் தேர்வேந்தனே உனது புகழைத் தமதாக்கிய தோள்களுக்கு முற்றிலும் பொருத்தமானவளும் வசையில்லாதவளும் தமயந்தி என்ற பெயர் கொண்டவளும் மூங்கிலை யொத்த மென்மையன தோளை உடையவளுமான ஒருத்தி உள்ளாள் அவள் கொடைவள்ளலான விதர்ப்பநாட்டு மன்னன் பெற்ற பூங்கொம்பாவாள் நாற்குணமும் நாற்படையாய் என்ற வருணனை தொடர்கிறது அவளின் இடையோ மிக நுண்ணியது மெலிந்து சிறிது காற்றுக்கும் ஆற்றாது நேய்ந்து அசையும் இயல்பினது.

இத்தகைய அழகிய வருணனைச் சிறப்புக்களாலே அன்னத்தின் பேச்சாற்றல் புலனாகவில்லையா? அது நளனுக்குக் கூறிய தன்னம்பிக்கை மிக்க வார்த்தைகளும் அதன் திறமைக்கு எடுத்துக்காட்டுக்களே 'வீமனின் இலக்குமியை ஒத்த மகளின் மணமாலையை உனது அழகிய நெடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயத்தில் பொருந்தச் செய்வேன்'.

மேற்குறித்தவாறே தமயந்தியின் உள்ளத்திலும் நளன் மீது காதலை மூண்டெழவைக்க வல்ல வருணனைகளை மிக விரிவாக அன்னம் எடுத்துரைத்தது (இவை நளனின் குணவியல்பு பற்றிய விடையில் விரிவாகத் தரப்பட்டுள்ளன) 'மன்னனின் புயத்தினை உனது அழகிய மார்புக் கச்சோடு பொருந்துமாறு சேர்த்துவைப்பேன் என்று உறுதியுரையும் புகன்று செல்கின்றது.

**32 தமயந்தி பற்றிக் கேள்வியுற்ற நளனும் நளனைப் பற்றிக் கேள்வியுற்ற தமயந்தியும் அடைந்த மனநிலைகளைப் புலவர் சித்திரிக்கும் மாற்றினை விளக்குக.**

'திசைகளையெல்லாம் தனதாக்கிய வெண்கொற்றக் குடையையும் தேரையும் உடைய அரசே, புகழைத் தமதாக்கிய உன்தோள்களுக்குத் தமயந்தி என்ற தையலே தகுந்தவள்' என்று அன்னம் நளனுக்கு எடுத்துரைத்தது அச் சொற்கள் செவியுள்ளே புகு முன்னரே தமயந்தியாகிய கன்னி நளனின் உள்ளக் கோயிலில் எழுந்தருளி விட்டாள் 'நீ சொன்ன அந்த மயில் யார் மகள்?' என்ற கேள்வியானது அவன் நாவில் எழுந்த பொழுது பூமாதேவியின் கணவனான அவனை நோக்கி மன்மதனின் வில்வளைந்து விட்டது ( காமம் பிறந்து விட்டது) அவன் பதைபதைத்துப் போனான், 'அன்னமே நீ சொன்ன அன்னம் போன்ற மங்கையை நினைக்கவே எனது உயிர் சோர்கின்றது அவளை என்னோடு சேர்த்துவை' என்று அன்னத்தை மன்றாடினான். என் நெஞ்சம் அழிந்து போயிற்று பெரிய காதல் என்னில் எழுந்தது மானமும் அற்றுப் போனது நாணமும் அழிந்தது, இனி என் விருப்பத்துக்குச் சாதகமாகும் (தமயந்தியிடம் சென்று வந்து கூறப் போகும்) உன் வாய்ச் சொல்லிலே தான் என் வாழ்வே உள்ளது என்ற அவன் கூற்றிலிருந்து அவன் மனத்திலே தமயந்தி மீது எழுந்த காதலின் அளவு எத்துணைத்து என்பது புலனாகின்றது.

அன்னம் உறுதி அளித்துச் சென்ற நேரந் தொடக்கம், 'இவ்வளவில் அன்னம் (தமயந்தியிடம்) சென்றிருக்குமோ? இப்பொழுது (அவளைக்) கண்டிருக்குமோ? இந்த அளவில் எனது காதலை எடுத்துக்கூறி இருக்குமோ? இப்பொழுது மீண்டு கொண்டிருக்குமோ? என்று ஒவ்வொரு கணமும் நளன் ஏக்கமும் விம்மிதமும் உற்றுக் காத்திருப்பதும் அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் மனப்போக்கினைச் சிறப்பாக எடுத்துக் காட்டுவதாகும்.

இனி, தமயந்தியின் மன நிலையினை நோக்குவோம். அன்னம் நளனின் சிறப்புக்களை விரித்துரைத்த மொழிகளோடு மன்மதனின் பாணங்களும் சென்று தமயந்தியின் உள்ளத்தைக் கவ்விக் கொண்டன! அதனால் அவள் மேனி ஒளி இழந்து போயிற்று வண்டுகள் கூட்டமாக அமர்ந்துள்ள மென்மையான கூந்தலானாகிய அவள் முகம் வெளுத்த சந்திரன் போலப் பசுமை கொண்டது 'அன்னமே' என்னுடைய உயிரை நீ காத்து விட்டாய், பூஞ்சோலையில் நீ கண்ட அரசருக்கு எனது நிலையை உடனே சென்று கூறு., என்று தமயந்தி சொல்வதிலிருந்து அவளின் நெஞ்சைக் காதல் ஆக்கிரமித்துக் கொண்டமை நன்கு வெளிப்படுகிறது. அதன்பின்னர் அவள் உள்ளமும் உடலும் நளன் நினைவால் வாடிப்போயின அவளின் பேரழகும் சோர்வடைந்து உடலெங்கும் வியர்வை துளித்தது.

அன்னம் வரும் வழிமேல் விழிவைத்தும் தமயந்தி என்னும் பெயர் உச்சரிக்கப்படும் ஒளிமேல் செவி வைத்தும் வேட்டுவரின் குழியில் அகப்பட்ட ஆண்யானை போற் கிடந்த நளனுக்கு எவ்வகையிலும் குறையாத காதல் நோய் வசப்பட்டிருந்தாள். தமயந்தி என்பதே உண்மை. எனினும் நாற்குணமும் நாற்படையாய் ஐம்புலன்களும் நல்ல அமைச்சர்களாய பெண்மையரசு நடத்திய பெருங்கற்பினள் அவளாதலால் அவளின் மனநிலையினை நளனுடையது போலப் புலவர் பெருமளவு விரித்துரைக்க வில்லை என்றே கொள்ளல் வேண்டும்

***33 சுயம்வர காண்டத்திலே நீ படித்த பாடல்களிருந்து இரு உருவக அணிகள், இரு உவமையணிகள் என்பவற்றை எடுத்துக்காட்டி விளக்குக.***

அ 1. **உருவக அணி**

"பூங்குவளைக் காடு..........." (பாடல் – 2)

வளைந்த வளையல்கள் அணிந்த கைகளை உடைய பெண்களின் முகங்கள் சந்திரனுக்கும் அவர்களின் கண்கள் குவளை மலர்களுக்கும் உருவகிக்கப்பட்டுள்ளன எனவே மேற்குறித்த பாடல் அடியிலே உருவக அணி வந்துள்ளது.

2 *அன்னம் மொழிபுகா முன்புக்குக்*
*கன்னி மனக்கோயில் கைக்கொள்ள*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலடியில் நளனது மனமானது கோயிலாக உருவகிக்கப்பட்டுள்ளது. அந்தக் கோயிலைக் கைக்கொண்டு எழுந்தருளுவது தெய்வமாதல் வேண்டும் இங்கே மனக்கோயில் (மனமாகிய கோயில்) என்றதுபோலக் கன்னித் தெய்வம் (கன்னியாகிய தெய்வம்) என்று கன்னியையும் உருவகித்திருக்கலாம். ஆனால் ஒன்றை உருவகித்து இன்னொன்றை உருவகியாது ஊகிக்க விடுவதும் புலவர் வழக்கம் இதனை ஏகதேச உருவக அணி என்பர்.

'நாற்குணமும் நாற்படையா' எனத்தொடங்கும்பாடலில் சிறந்த உருவக அணி கையாளப்பட்டுள்ளமையைக் காண்க.

**(ஆ) (1) தூக்கிருள் வெய்யோற்கு ஒதுங்கிப்**
**புக்கிருந்தால் அன்ன பொழில்.**

மரங்கள் அடர்ந்து நெருங்கியிருப்பதால் அந்தப் பூஞ்சோலை இருண்டு கிடக்கின்றது. அந்த இருளின் மிகுதியைப் புலப்படுத்தச் சூரியனுக்கு அஞ்சிய இருளானது புகுந்து ஒளித்திருந்தது போலச் சோலையின் இருள் விளங்குவதாக உவமையணி கையாளப்பட்டுள்ளது.

| உவமானம் | பொதுத்தன்மை | உவமேயம் |
|---|---|---|
| உலகின் முற்றிருள் | இருளின் திரட்சி | சோலையின் இருள் |

2. செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத்து அவற்கு.

நளனுக்கு உலகிலுள்ள வேந்தர்கள் ஒப்பாகமாட்டார்கள் திருமாலே அவனுக்கு ஒப்பாவான் என்று இப்பாடல் அடியில் உவமையணி கையாளப்பட்டுள்ளது.

| உவமானம் | பொதுத்தன்மைகள் | உவமேயம் |
|---|---|---|
| திருமால் | அறங்கிடந்த நெஞ்சு, அருள் ஒழுகு கண், மறங்கிடந்த திண் டோள் வலி. | நளன் |

## அரும்பத விளக்கம்

('தமிழ் இலக்கியம்' பாடநூலில் தரப்படாத சில அரும்பதங்களுக்கு இங்கு விளக்கம் தரப்பட்டுள்ளது.

சீதம் – குளிர்ச்சி
செம்மை – நீதி, நேர்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| துகள் | - | துரும்பு தூசு |
| அமை | - | மூங்கில் |
| கவிகை | - | குடை |

நடைகற்பான்- நடை கற்பதற்கு ('கற்பான் - பான் என்ற வாய் பாட்டு எதிர்காலத் தெரிநிலை வினையெச்சம் )

அறுகாற் சிறு பறவை ஆறுகால்களையுடைய (சிறியபறவைகளாகிய) வண்டுகள்.

நன்னுதல் (நன்மை + நுதல்)- நல்ல நெற்றியை உடைய தமயந்தியைக் குறித்து வந்தமையால் இந்சொற்றொடர் அன்மொழித்தொகை, வாணுதலாள் (வான் + நுதலாள்) ஒளி பொருந்திய நெற்றியை உடைய தமயந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. இஸ்லாமியக் கலையும் பண்பும்

**பேராசிரியர், கலாநிதி சு. வித்தியானந்தன்**

***34. அரபு நாட்டிலிருந்து தோன்றிய இஸ்லாமிய இனம் பெற்றுள்ள தனிச்சிறப்புக்கள் எனப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிடுவன எவை?***

1: இஸ்லாமிய இனம், அக்காலத்து நாகரிக உலகை வென்று அடக்கி இன்று உலக மக்கட்தொகுதியிலேயே நான்கிலொரு பகுதி யினரை இஸ்லாமியராக்கியுள்ளது.

2: கிரேக்கரதும் உரோமரதும் நாகரிகங்களை இஸ்லாமியர் தாமும் அனுபவித்து, மேனாட்டு நாகரிக வளர்ச்சிக்கும் உதவியுள்ளனர்

3: கி.பி 9ஆம் நூற்றாண்டிலிருந்து 13 ஆம் நூற்றாண்டு வரை சமயம், வரலாறு வைத்தியம், பூகோளம், வானநூல் ஆகிய துறைகளிலே ஆராய்ச்சிகளும், நூல்களும் அரபு மொழியில் வெளியாயின. அம்மொழி அக்காலத்தில் அறிவுத்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் தலைசிறந்து விளங்கியது.

4: சமயம் சார்ந்த கட்டடங்களான மசூதிகளை அமைத்ததோடு கட்டடக் கலையில் இஸ்லாமியர் தனிப் பண்பினராய் விளங்கினர் கோட்டை, அரண் அமைப்பிலும் மேலோங்கினர்.

5: ஓவியம், இசை, கைத்தொழில், உலோகவேலை, மண்வேலை, துணிவேலை, கம்பளநெசவு, தபாற்சேவை என்பவற்றிலும் கடல் வணிகம், தரைவணிகம் ஆகியவற்றிலும் விஞ்ஞானத்திலும் இஸ்லாமியர் முன்னோடிகளாகவும் சிறந்தவர்களாகவும் விளங்கினர்

***35. கட்டடக் கலையிலே இஸ்லாமியரின் சாதனைகளை விளக்குக.***

சமயத்தின் அடிப்படையிலேயே உலகம் எங்கும் கட்டடக்கலை தோன்றியது. இதற்கு இஸ்லாமியக் கட்டடக்கலையும் விலக்கன்று. கல், செங்கல் என்பவற்றால் சதுரவடிவில் கி.பி 662இல் முகமது நபி மதீனாவில் முதலாவது மசூதியைக் கட்டுவித்தார். இதன்பின் கி.பி 639இல் பளிங்குக் கற்றூண்கள் கொண்ட கூரையுடன் கூபாவில் அடுத்த மசூதி எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 642 இல் கெய்ரோவில் சிறியதொரு பள்ளிவாசல் கட்டப்பட்டது அதில் 'மிம்பர்' என்னும் உயர்பீடமும் 'மக்சூறா' என்னும் மரமறைப்பும், கிப்லாவை, உணர்த்த மிஹ்றாப் என்னும் நீள அரைவட்ட வடிவம் ஒன்றும் அமைக்கப்பட்டன.

கி.பி 673 இல் மு ஆவியா என்னும் இஸ்லாமிய மன்னர் (கலிபா) காலத்தில் நெடிய அழகிய மாடத் தூபிகள் கட்டப்பட்டன கி.பி 684 இல் 'மொசெய்க்கு' (வருணக் கண்ணாடி) பதிக்கும் முறை தொடங்கப்பட்டது. இதனைத் தொடக்கியவர் இபினு அல் சுபைர். அடுத்து கற்கும் மட்டம் (குர்பத் அல்ஸ்க்றா) தூண்மண்டபம் ஆகியன எழுந்தன இக்கட்டடத்தின் நடுமண்டபம் நான்கு உதைகால்கள். பன்னிரண்டு அழகிய தூண்கள் என்பவற்றால் தாங்கப்படும் வகையில் அமைக்கப்பட்டது தூண்களிடையே வில் வளைவுகள் உள்ளன கி.பி 714 இல் தமஸ்கஸ் பள்ளிவாசல் அவ்வாலித் என்பவரால் கட்டப்பட்டது இப்பள்ளிவாசலிலேயே முதன்முதல் குதிரைலாட மாட வில்லுகள் அமைந்தன மேலைத்தேசக் கட்டடக் கலையிலே இவ் வில்லமைப்பு புரட்சியை உண்டாக்கியதாகப் பேராசிரியர் கூறுவது குறிப்பிடத்தக்கது இஸ்லாமியக் கலையம்சத்தில் மனிதர், மிருகங்கள் என்பவற்றின் உருவங்களுக்கு இடம் இல்லை. இவற்றிற்குப்பதிலாக அவர்கள் 'அரபெஸ்க்' என்னும் அழகுபடுத்தும் கலையை அறிமுகம் செய்தனர்.

இஸ்லாமிய கட்டட அமைப்பில் கோட்டை கட்டுதலும் முதன்மையானதாகும். பகைவர் மீது கல், அம்பு, கொதிநீர், கொதிஎண்ணெய் முதலியன வீசும் வண்ணம் இடைவெளிகள் போதிகைக் கட்டளைகளுக்கிடையே அமைக்கப்பட்டன இவை கள்ளக் கதவுடன் கூடியவை இஸ்லாமிய கோட்டை அமைப்பில் சுவர்களினூடாகக் கோட்டைக்குள் நுழைய அமைக்கப்படும் செங்கோணவாயில் அல்லது வளைவான வாயில் முக்கியமான அம்சமாகும். இதனையும், முற்குறித்த கோட்டையமைப்பு முறைகளையும் ஐரோப்பிய நாடுகள் இஸ்லாமியரிடமிருந்து கற்றுக் கொண்டான்

## 36. ஓவியக் கலையிலும் இசைக் கலையிலும் இஸ்லாமியர் சிறந்திருந்த வகையையும் அவர்கள் நாடகக் கலையில் ஈடுபாடு காட்டாமைக்கான காரணத்தையும் விளக்குக.

திருக்குரானின் மூலபாடங்களை ஏடுகளிலே, ஓவிய இலக்கணங்களான அளவு, பொருத்தம், இயைபு, ஒழுங்கு என்பன அமையுமாறு பொறிப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதிக முஸ்லிம்கள் சிறந்து விளங்கினர். இவ்வாறு பிரதிபண்ணும் கலை 'கலிகிறாபி', எனப்படும். காலப்போக்கில் இவற்றோடு விளக்கப்படங்களும் வரைந்து சேர்க்கப்பட்டன விளக்கப்படங்களுக்கு 'மினியேச்சர்ஸ்' என்பது பெயர் இஸ்லாமியரின் இசைக்கலை பற்றிய செய்திகள் 'ஆயிரத்தோர் இரவுகள்' என்ற நூலில் காணப்படுகின்றன. பிறப்பு முதல் இறப்புவரை பயன்படக்கூடிய வகையிலே இஸ்லாமியரின் இசைக்கலை அமைந்துள்ளது.

'யாழ் என்ற பொருளில் வழங்கும் ஆங்கிலச் சொல்லான 'லூட்' அல் ஊதா என்ற அரபுச் சொல்லிலிருந்து பிறந்தது என்பர். நாடகத்தில் ஒருவர் இன்னொருவர்போல (ஆணோ, பெண்ணோ) வேடம் தரிப்பது இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே வேடமிட்டு நடிக்கும் நாடகக்கலை இஸ்லாமியரால் வளர்க்கப்படவில்லை. ஆனால் நிழலாட்டம் முஸ்லிம்களால் வரவேற்கப்படுகின்றது.

### *37 பொருட்களில் அலங்கார வேலைப்பாடுகள் செய்வதிலும் இஸ்லாமியர் சமய இலக்கிய அம்சங்களுக்கு முதன்மை அளிப்பதை உதாரணந் தந்து விளக்குக..*

பொருட்களைச் செய்து அவற்றை அலங்காரம் செய்கையில் அவற்றில் திருக்குரான் வாசகங்களையோ பாடல் அடிகளையோ வந்தனக் கூற்றையோ வாழ்த்தையோ பொறிப்பது இஸ்லாமியரின் வழக்கம். இதிலிருந்து அவர்கள் சமய இலக்கிய அம்சங்களுக்கு முதன்மை அளிப்பது புலனாகின்றது.

### *38 உலோகவேலை, மண்வேலை, பட்டுநெசவு, கம்பள நெசவு ஆகியவற்றில் இஸ்லாமியரின் திறமைகள் புலப்படுமாற்றினை விளக்குக.*

சிமிழ் தட்டம், பேசின், கோப்பை, கூசா, சாடி. ஓடு, கண்ணாடி, விளக்கு என்பவற்றிலும் சிறந்த அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டன, இடைக்காலத்தில் பட்டுத்துணி வியாபாரத்தில் இஸ்லாமியர் சிறந்து விளங்கியமைக்கு இஸ்லாமிய நகரங்களின் பெயர்களைக் கொண்டு விற்பனை செய்த துணிகள் பெயர் பெற்றமை எடுத்துக் காட்டாகும். பஸ்ரியன், தமஸ்க்மஸ்லின், பல்டாக்கோ என்ற படடுக்களின் பெயர்கள் புஸ்தாத்தமஸ்கஸ், மோகல், பாக்தாத் என்ற நகரப் பெயர்களின் திரிந்த வடிவங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாறாம் நூற்றாண்டில் கம்பளத் தொழிலில் இஸ்லாமிய உலகு உச்சநிலையில் இருந்தது கம்பளத்தோடு தந்தத்தால் செய்யப்படும் கைவினைப் பொருட்களாலும் புத்தகங்களுக்கு வேண்டிய கடதாசித் தாள்களாலும் இஸ்லாமியர் பெயர் பெற்றிருந்தனர் ஐரோப்பிய நாடுகளுக்குக் கடதாசித் தாள்களை அறிமுகம் செய்ததும் புத்தகம் கட்டும் தொழிலை அறிய வைத்ததும் முஸ்லிம்களின் பணிகளே. 15ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் இவர்களின் முறையைப் பின் பற்றிப் புத்தகங்களைக் கட்டியதோடு, மூலைக்கு இறக்கைகள் இட்டும் தோல் அட்டைகள் இட்டும் அலங்கரிப்பதைக் கடைப்பிடித்தனர்.

### *39 புவியியல் துறையிலே இஸ்லாமியர் ஈடுபட நேர்ந்த காரணிகளையும் இத்துறையில் இவர்களின் சாதனைகளையும் மதிப்பிடுக.*

1. அராபியர் பாலைவனத்தினிடையே வாழ்ந்த சாதியார் பாலைவனப் பயணத்தில் நட்சத்திரங்களின் நிலை, கிரகங்களின் இயக்கம், பருவமாற்றம் என்பன பற்றி அறிவு அவசியமாயிற்று. எனவே இவ்வறிவினைப் பெறப் புவியியல் ஆய்வில் இஸ்லாமியர் ஈடுபட நேர்ந்தது.

2. ஆண்டுதோறும் உலகின் பல பாகங்களிலுமிருந்து ஹஜ்யாத்திரிகர்கள் மக்காவுக்கு வந்தமையால் அவர்கள் பற்றியும் அவர்களின் நாடுகள் பற்றியும் விரிவாக அறிந்து அவற்றின் மூலமாகவும் புவியியல் அறிவை வளர்க்க வாய்ப்புக் கிட்டியது.

3. ஹஜ் யாத்திரையால் சமயத் தொடர்பு மட்டுமன்றி வியாபாரத் தொடர்பும் விரிவடைந்தது தரை, கடல், மார்க்கங்களால் பிறநாடுகளுடன் நேரடியாகத் தொடர்பு ஏற்பட்டதாலும் புவியியல் அறிவு வளர்ந்தது ஹஜ் யாத்திரைப் பாதைகளின் அமைப்புப் பற்றிய குறிப்புக்களும் அவற்றின் தொகுப்புக்களும் தோன்றியன.

4. தபாற்சேவை முறையும் அக்காலத்தில் கையாளப்பட்டது. இதனாலும் பரந்த பெரிய இராச்சியம் அமைத்துக்கொண்டதாலும் போக்குவரத்துச் சாதனங்கள் விருத்தியடைந்ததாலும் பாதைகள் பற்றிய நூல்கள் தோன்றின.

5. இஸ்லாமிய நாடுகளிற் பயணம் செய்தோரும் பிறவாகிய தூர தேசங்களிற் பயணம் செய்தோரும் எழுதிய யாத்திரை நூல்களும் பூகோளச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் பலவற்றை உள்ளடக்கியிருந்தன. இவை தவிரப் பூகோளச் செய்திகளை விரிவாகக் கொண்ட தனி நூல்களும் எழுதப்பட்டன. ஹிஷாம் முகம்மது அல்கல்பி, அல்குவாறிசிமி, இபின் குருநாத் பிக், அல்பிறுனி இபின் பதுத்தா முதலான பூகோள நூல்களும், பிரயாண நூல்களும் இஸ்லாமிய புவியியல் அறிவுக்கு எடுத்துக் காட்டுக்கள்.

6. உலகம் உருண்டை என்னும் கொள்கைகளையும் வானசாத்திர அட்டவணைகளும் (இலத்தின் மொழியில் தோன்றியவை) ஏழு பருவகால நிலை பற்றிய கருத்தும், பூமி உருண்டைப்பாதிக்கு நடு மையம் உண்டு என்ற கருத்தும் இஸ்லாமிய புவியியற் கொள்கைகளிலிருந்து ஐரோப்பியர் பெற்றுக் கொண்டவையாகும் அமெரிக்காவைக் கண்டுபிடிக்க இஸ்லாமிய புவியியற் கொள்கைகளும் காலாய் இருந்தன என்பர்.

## 40 இஸ்லாமியரின் வர்த்தகச் சிறப்புப் பற்றிப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் குறிப்பிடுவனவற்றைச் சுருக்கமாகத் தருக.

ஒன்பதாம் நூற்றாண்டில் சீனா (கன்ரன் நகரம் வரை) ஈழம், இந்தியா, ஆபிரிக்காவின் கிழக்குக் கடற்கரைப் பகுதி (பொன்னுக்குப் பெயர் பெற்ற சப்லா வரை) ஆகியவற்றோடு இஸ்லாமியர் கடல் வர்த்தகம் நடத்தினர். பாரசீகக் கடலைச் சுற்றிய இவர்களின் போக்குவரத்து வழியைப் பின்பற்றியே பிற்காலத்தில் துருக்கியர், போத்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் கடல் வர்த்தகத்தில் ஈடுபட்டனர் இஸ்லாமியர் பெற்றிருந்த கடலாதிக்கத்தின் சான்றுகளாக அட்மிறஜ் கேபிள், அலறேல், ஷலலொப், பாக், மொன்சூன் முதலாம், அரபுச் சொற்களின் திரிபுகள் இன்றும் கையாளப்படுகின்றன.

ருஷ்யா, பின்லந்து, சுவீடன், நோர்வே. பிரித்தானியாவின் சில பாகங்கள், ஐஸ்லாந்து வொல்காவின் மத்திய பகுதியில் உள்ள கசான் மாகாணம் என்பவற்றில் இஸ்லாமிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டதிலிருந்து அங்கெல்லாம் அக்காலத்தில் இஸ்லாமியர் சீனா, இந்தியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் பொருள்களைக் கொண்டு சென்று விற்றுவந்தமை புலனாகின்றது. ஐரோப்பாவில் ஐந்து நூற்றாண்டுகளாக இஸ்லாமிய உலகம் வியாபார அபிவிருத்தியை ஏற்படுத்தி வந்துள்ளது பத்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவைப் பின்தள்ளிவிட்டு வர்த்தகத்தில் இஸ்லாமிய உலகம் மேலோங்கி இருந்தமைக்கு இன்றும் ஐரோப்பிய மொழிகளில் வழங்கும் வர்த்தகப் பொருள்கள், நாணயங்கள் என்பவற்றின் பெயர்கள் சான்றுகளாகும் இவை அரபு மொழித்திரிபுகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *41. விஞ்ஞானத்தின் எவ்வெத்துறைகளிலே இஸ்லாமியர் முன்னோடிகளாய் விளங்கினர்?*

இரசாயனம், அட்சரகணிதம், தாவரவியல், யூனானி வைத்திய முறை என்பவற்றில் இஸ்லாமியரின் முன்னோர் ஆய்வுகளும் முடிவுகளும் முதன்மைபெற்று விளங்குகின்றன. வைத்தியசாலையில் நோயாளரை அவரவர் நோய்களுக்கேற்பப் பிரித்து வைத்தல், சுத்தம் என்பவற்றிலும் இஸ்லாமியரே வழிகாட்டிகளாவர்.

## *42 இஸ்லாமியரது சமயத்தின் தனிப்பண்புகள் யாவை?*

1. இஸ்லாத்தின் தனிமனிதனது உரிமை அவன் வாழும் சமூகத்திலிருந்து கிடைப்பதன்று! சமயத் தொடர்பிலிருந்து கிடைக்கிறது.

2. அவ்லாஹ் ஆகிய ஒரே தெய்வத்தில் நம்பிக்கை கொண்டு அல்லாஹ்வின் போதனை வழி ஒழுகுபவரே உண்மை இஸ்லாமியர்.

3. முஸ்லிம்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்து ஒருவரை ஒருவர் தாங்கி வாழ்வது சமயம் அமைத்துள்ள சட்டக் கடமையாகும்.

4. இஸ்லாமியரிடையே ஒற்றுமையும் அமைதியையும் இறைவன் நிலைநாட்டுவதால் இஸ்லாமியன் இறைவனிடம் தன்னை ஒப்புவித்தல் வேண்டும்

5. இறைவனின் சட்டம் சமத்துவத்தையும் நன்னம்பிக்கையையும் அடிப்படையாகக் கொண்டது.

### அரும்பத விளக்கம்

சதுக்கம் - சதுரம், கும்மட்டம் - மேற்புறத்தூபி, போதிகைக் கட்டை - தாழ்வாரம் தாங்கி, சாதனம் கருவி - சிமிழ் - செப்பு, திரிபுகள் - மாறிய (சொல்) வடிவங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. நாலடியார்

## 43 நாலடியார் பற்றி யாது அறிவீர்?

நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று சமணமுனிவர்கள் பலரால் இயற்றப்பட்ட பாடல்கள் பப்பத்தை ஒவ்வோர் அதிகாரமாகக் கொண்ட நாற்பது அதிகாரங்கள் இந்நூலில் உண்டு. திருக்குறளுக்கு அடுத்தபடியாக அறக்கருத்துக்களைத் தமிழிலே சிறப்பாய் எடுத்துக் கூறும் நூல் நாலடியார் இதனைத் தொகுத்தவர் பதுமனார். திருக்குறள் போன்றே அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்ற முப்பிரிவுகள் நாலடியாரில் உண்டு.

## 44. முற்பிறப்பிலே தவஞ் செய்யாதவர்க்கு உண்டாகும் வருத்தம் யாது? இதன்மூலம் அறிவுறுத்தப்படுவது என்ன?

இன்பமாக இல்வாழ்வு நடத்துபவரது வீட்டினை அண்ணாந்து பார்த்து அதன் தலைவாயிலை (தூணை)ப் பற்றி நின்று தமக்கு அவ்வாறு வாழ முடியவில்லையே என்ற வருத்தம் உண்டாகும் முனபு தவம் செய்யாத குறையினால் இப்பிறப்பிலும் அத்தகைய வீட்டினுள்ளே போக முடியாத தவம் செய்யாமை ஏற்படுகின்றது. ஆதலால் ஒவ்வொருவரும் தமக்குக் கிடைக்கும் பிறவிதோறும் தவம் செய்தல் வேண்டும். நல்ல அறம் புரிதல வேண்டும் என்று குறிப்பாக உணர்த்தப்படுகிறது.

## 45. அறஞ் செய்வதை மறுத்துச் செல்வத்தைச் சேர்க்க விரும்புதல், முன்வினையின்பயன் வந்தபொழுது அதற்காக வருந்துதல். பெறுதற்கு அரிய உடலைப் பெற்றதன் பயனாகச் செய்யவேண்டிய நல்வினைகளைச் செய்யாமை ஆகியன மடமை என்பதை நாலடியார் எவ்வாறு விளக்குகின்றது?

1. இழிந்த நெஞ்சினை முன்னிலைப்படுத்தி புலை நெஞ்சே, தருமம் செய்வதை மறந்து செல்வத்தைச் சேர்க்க நீ விரும்பி முயன்று உன் வாழ்நாளை வீணே கழித்துவிட்டாய். இனி (இந்த முதிய வயதில்) உன்னால் என்ன தருமம் செய்யக் கூடும்? என்று தருமமில்லாது கழிந்த பயனிலலாத வாழ்வின் மடமை பழிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தீவினையை முற்பிறப்பிலே ஒருவன் செய்தால் அதன் பயனை அனுபவிப்பது திண்ணம் இதை உணராதவன் பேதை அவன் பெருமூச்சு விட்டு மனம் அழுங்குவான் ஆனால் தீவினையின் பலன்பற்றி ஆராய்ந்து அறிய வல்லவர்களே பிறவித்துன்பத்தின் அளவை உணர்ந்து அதனைக் கடந்து பற்றை நீக்கி நிற்பர்.

3. பெறுவதற்கு அரிய உடம்பைப் பெற்றவர் தருமத்தின் பயனை அடைதல் வேண்டும். இந்தத் தருமப் பயன் கரும்பிலிருந்து பிழியப்பட்ட சாறுபோல இனிவரும் பிறவிக்கும் உதவ வல்லதாகும். ஆனால் உயிரைத் தாங்கி நின்ற உடலோ கரும்புச் சக்கை போல ஒரு பிறவியோடு அழிந்துபோகும். ஆதலால் ஒவ்வொருவரும் உடலைப் போற்றாது தருமத்தைப் போற்றி அதன் மூலம் உயிரை மேனிலைப்படுத்தல் வேண்டும்.

## *16. உடலின் அழிவுக்கு வருந்தாதவர் யாவர்? அவர்களின் வழியைப் பின்பற்ற எதனைக் கடைப்பிடித்தல் வேண்டும்? அவ்வாறு கடைப்பிடித்தற்கான காரணம் யாது?*

1.கரும்பினை ஆலையிலே ஆட்டி அதன் சாற்றிலிருந்து வெல்லக்கட்டி பெறப்படுகிறது. இது மிகவும் கடினமான முயற்சிதான் எனினும் இக்கடின முயற்சியில் அகப்பட்டு வருந்திச் சக்கையாவதும் கரும்பே. அதற்காகக் கரும்புசக்கையினை
எவரும் போற்றிக் காப்பதில்லை. அதனை எரித்து விடுகின்றனர். எரியும்போது வருந்துகின்றார்களோ என்றால் அதுவும் இல்லை. இதுபோலத்தான் எமது உடலாகிய கரும்பினை வாழ்க்கையாகிய ஆலையிலே ஆட்டித் தருமம் என்ற வெல்லக்கட்டி பெறப்படுகின்றது. அதனைப் பெற்றபின் சக்கையாகி விட்ட உடலுக்கு மதிப்பில்லை. அது எரியும் பொழுது தருமத்தின் பயன் உணர்ந்தோர் வருந்தார் இந்த உவமையின் மூலம் உடலின் இழிவும் தருமத்தின் உயர்வும் கூறப்பட்டன.

2. இவ்வுண்மையை உணர்ந்த சான்றோரின் வழியைப் பின்பற்றி யமன் இன்று வருவானோ நாளை வருவானோ என்று ஆராயாது அவன் எமக்குப் பின்னாலேயே நிற்கின்றான். என உணர்ந்து தீயவற்றைத் தவிர்த்தல் வேண்டும். இயன்ற வகையிலெல்லாம் தருமத்தைப் பொருத்திச் செய்தல் வேண்டும் என்கிறது நாலடியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**47. சுவர்க்கத்திலே இன்பம் அனுபவிப்பதற்கு இப்பிறப்பிலே மனித உடல்கொண்டு தருமம் செய்ய வேண்டும் இவ்வாறு கூறும் நாலடியார் தருமமும் தக்கார்க்குச் செய்ய வேண்டும் என்பதை எவ்வாறு விளக்குகின்றது?**

ஓர் உவமை மூலம் விளக்குகின்றது. அது வருமாறு கிள்ளி எடுக்கத் தக்க மிகச் சிறிய அளவினதே ஆலம்வித்து ஆனால் அது முளை கொண்டு வளர்ந்து பெருமரமானதும் மிகவும் பெரிய நிழலைத் தருகின்றது அதுபோலத் தருமத்தின் அளவு சிறிதாயினும் அதனைத் தக்கவர்க்குச் செய்தால் அத்தருமமானது ஆகாயமும் சிறிதாகும் அளவிற்கு வளர்ந்து பரந்துவிடும்.

| | உவமானம் | பொதுத்தன்மை | உவமேயம் |
|---|---|---|---|
| (1) | ஆலம் வித்து | சிறுமை | சிறுதருமம் |
| (2) | ஆலமரம் | பருமை | தருமப்பயன் |

சொற்பொருட் பின்வருநிலை அணியாவது யாது? நாலடியார்ப் பாடல் ஒன்றினை எடுத்துக்காட்டாகக் கொண்டு அதனை விளக்குக.

ஒரு பாடலில் ஒரே சொல் ஒரு பொருளிலோ ஒன்றிற்கு மேற்பட்ட பொருளிலோ தொடர்ந்து வருமாயின் அது சொற் பொருட் பின்வரு நிலை அணி அமைந்த பாடலாகும். வைகலும் வைகல் வரக் கண்டும் எனத் தொடங்கும் பாடலில் வைகல் என்ற சொல் ஏழிடங்களிலும், அதன் திரிந்த வடிவாகிய வைகும் என்ற சொல் ஓரிடத்திலும் வந்துள்ளன.

அடி

| | | | |
|---|---|---|---|
| 1. | வைகலும் | (1) | - நாள் தோறும் |
| | வைகல் | (2) | - நாள் கழிதல் |
| | வைகலும் | (1) | - நாள் தோறும் |
| 2. | வைகலை | (2) | - நாள் கழிதலை |
| | வைகும் | (3) | - வளர்ந்திருக்கும் |
| | வைகலும் | (1) | - நாள்தோறும் |
| 3. | வைதல்வர | (1) | - நாள் கழிய |
| | வைகலை | | - நாள் கழிதலை |

ஆக இப்பாடலில் வைகல் என்ற சொல் நாள்தோறும் நாள் கழிதல் வளர்ந்திருக்கும் என்ற முப்பொருள்களில் மாறி மாறி வந்துள்ளமையால் இது சொற்பொருட்பின் வருநிலை அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**48. ' மான இழிவு ' என நாலடியார் எதனைக் குறிக்கிறது ? விளக்குக.**

மானம் என்னும் அரிய அணிகலனை நீக்கி இழிவான தொழில்களால் பெற்ற வருவாய் கொண்டு உடம்பினை ஊட்டி வளர்ப்பது ஈன இழிவு என நாலடியார் குறிக்கின்றது. இத்தகைய ஈன இளிவினாலாவது என் உடம்பை ஊட்டி வளர்க்கலாம், அது உறுதியோடு கூடி நீண்டகாலம் வாழுமானால். ஆனால் அவ்வாறு வாழாது விரைவில் அழியும் உடலை ஈன இழிவு கொண்டு வளர்ப்பது தகாது என்பதும் மானத்தோடு கூடி அறம் புரிந்து சில நாள்களாவது வாழ்தலே சிறந்தது என்பதும் நாலடியார் குறிப்பாகக் கூறும் உண்மை.

**49. கல்வியின் பல்வேறு சிறப்புக்களையும் நாலடியார் கூறியாங்குத் தொகுத்துத் தருக.**

(ஆண்களது) குடுமியின் அழகும். மடித்துக் கட்டிய உடையின் கரை அழகும். பெண்கள் பூசும் மஞ்சளின் அழகும் அழகுகள் அல்ல. நடுவுநிலை உடையவராய்த் தமது மனத்திலே நாம் நல்லம் என்று கருதும்(உறுதியான) கருத்தினை உடையவராய் ஒருவரை ஆக்கவல்ல கல்வியின் அழகே அழகாகும் இப்பிறப்பில் அடைய வேண்டிய நற்பயன்களைத் தருவதும் பிறருக்கு வழங்கினாலும் குறைவுபடாததும் கல்வியுடையவராகிய தம்மைப் புகழில் விளங்க வைப்பதும் தாம் உயிருடன் வாழும் அளவு தீமை பயக்காததுமாகிய கல்வியைப் போல் சிறந்த ஒன்றை எவ்வுலகத்திலும் நாம் கண்டதில்லை. அதுவே அறியாமையாகிய மயக்கத்தினைப் போக்க வல்ல மருந்துமாகும்.

அறிஞர் வளமற்ற களர்நிலத்திலே விளைந்ததாயினும் உப்பை வயல் நிலத்திலே விளைந்த நெல்லிலும் சிறந்ததாகக் கொள்வர். இதுபோன்று தாழ்த்தப்பட்ட சாதியிற் பிறந்தோரும் கற்றறிந்தோரானால் அவர்களை மேலான இடத்தில் வைத்துப் பாராட்டுவது தக்கதே.

கல்வியின் பல துறைகளும் மனத்தின்கண் சேமித்து வைக்கப்படின் அவை எவராலும் கவரப்படமாட்டாஅரசர்கள் கற்றோரைத் தம்மிலும் சிறந்தோர் என்று (பொறாமை கொண்டு) கோபித்தாலும் அவர்களாலும் கொள்ளப்படுவனவல்ல ஆகவே கல்வியாளன் ஒருவன் தன் மக்களுக்கு எஞ்சியன என்று வைக்கத்தக்க செல்வம் கல்வித்துறைகளே: வேறு அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விகள் முடிவில்லாதவை. கற்பவர்கள் வாழும் நாள்களோ மிகச் சிலவாகும் மெல்ல இருந்து ஆராய்ந்து கற்போம் என்றால் உடலுக்கு இடையில் உண்டாகும் நோய்கள் பலவாகும். ஆகவே நீரினை நீக்கிப் பாலை அருந்தும் அன்னம்போல் நூல்களின் தன்மைகளைத் தெளிவாகப் பகுத்தறிந்து அறிஞர் கற்பர் இவ்வாறு நூல்களைத் தெளிவுறக் கற்ற ஒருவன் தாழ்ந்த குலத்தினனாயினும் அவனைத் துணைகொண்டு நல்ல நூல்களைக் கற்பதானது பழைமையான வருணப் பாகுபாட்டின்படி, படகோட்டி கடையான வருணத்தினனாயினும் அவனது துணைகொண்டு ஆற்றினைக் கடத்தலுக்குச் சமமாகும்.

குற்றம் அற்ற பழமை வாய்ந்த நூல்களைக் கேட்டறிந்தும் கற்றும் அறிஞரான பண்புடையவர்களும், தம்மிடையே பகைமை இல்லாதவர்களும் கூர்மையான அறிவுத் திறம் பொருந்தியவர்களுமான அறிஞர் குழாத்திலே கூடியிருந்து மகிழ்வதிலும் விண்ணுலகமாகிய மேலிடத்தில் உள்ள நகரவாழ்வு இனியதாயின் அதனை விரும்பிச் சேர்வோம். (அது முன்னதிலும் இனிதன்று) ஆகவே அறிஞர் கூட்டத்தில் கூடியிருத்தலே இன்பங்கள் யாவுள்ளும் பேரின்பமாம்.

ஒலிசெய்கின்ற குளிர்ச்சி பொருந்திய கடற்கரைத் தலைவ! நூல்களைக் கற்று உண்மையினை அறிந்தவரின் நட்பானது நுனியிலிருந்து கரும்பைக் கடித்து உண்பது போன்றது. (அஃதாவது தொடக்கத்தில் சுவை குறைந்தும் நாட்செல்லச் செல்ல சுவை கூடியும் விளங்குவது அறிஞரது நட்பு) கல்வி என்ற பண்பற்றவரும் அன்பில்லாதவருமான இழிந்தோர் தொடர்பானது கரும்பினை அடியிலிருந்து உண்பதைப் போன்றது (தொடக்கத்தில் சுவை தந்து நாட் செல்லச் செல்ல சுவை குறைவது கல்வியற்றவர் நட்பு).

பழமையான சிறப்பும் ஒளி பொருந்திய நிறமும் கொண்ட பாதிரிப்பூவின் அகவிதழானது. தன்னோடு பொருந்தும் நீருக்கும் தனது நறுமணத்தினை வழங்கும் இதுபோன்று கல்வியறிவில்லாதவரும் கற்ற அறிஞரைக் கூடி ஒழுகினால் நாள்தோறும் நல்ல அறிவினை அடைந்து சிறப்பர்

அளவால் மிகுதியான நூல்களுள்ளே உண்மையறிவைத் தரும் ஞான நூல்களையே கற்றல் வேண்டும் அவ்வாறில்லாது உலக வாழ்விற்குரிய நூல்களையே கற்பதெல்லாம் கலகலவென்று கூவுதற்கே உதவும் அல்லாது அவற்றைக் கொண்டு பிறவித்துன்பமாகிய தடுமாற்றத்தினைப் போக்குதல் இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. மாதரும் மலர்ப் பொய்கையும்

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை

### 50. இப்பாடத்தில் வரும் பாடல்கள் எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டவை? அந்த நூல்பற்றி யாது அறிவீர்?

'சீவகசிந்தாமணி' என்ற காவிய நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. சீவகன் ஏமாங்கத நாட்டு மன்னனான தன் தந்தை சச்சந்தனைக் கொன்று அரசைக் கைப்பற்றிய கட்டியங்காரன் என்ற மந்திரியை வென்று நாட்டைப் பெற்றதும் பெண்கள் பலரை மணந்ததும் இறுதியில் துறவியானதும் விரித்து விருத்தப் பாவில் பாடிய காவியமே 'சீவகசிந்தாமணி' இதனையே 'மாதரும் மலர்ப்பொய்கையும்' என்ற கட்டுரையை எழுதிய பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை (சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கியவர். சிறந்த சொற் பொழிவாளர் இதனால் இவருக்குச் 'சொல்லின் செல்வர்' என்ற சிறப்புப்பட்டமும் வழங்கியது) சுருக்கிச் 'சிந்தாமணி' என்று கையாள்கிறார். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணியை இயற்றியவர் திருத்தக்க தேவர் என்ற சமணமுனிவர்.

### 51. 'தாய் தன் கையின் மெல்ல' எனத் தொடங்கும் பாடலில் வந்துள்ள அணி யாது? விளக்குக

உவமையணி குழந்தையானது தனக்கு வாய்த்த அழகிய படுக்கையிலே படுத்திருக்கிறது அது நித்திரை கொள்ள வேண்டும் என்று விரும்பித் தாய் அதன் தொடைகளிலே தன்கையினால் மெல்லத் தட்டுகிறாள்

இந்தத் தாயைப் போலவே பொய்கையானது அன்னமாகிய தன் குழந்தை தாமரையாகிய படுக்கையிலே கிடக்க தனது அலைக் கைகளால் அதனை மெல்லத் தட்டித் துயில வைக்கிறது.

| உவமானம் | பொதுத்தன்மை | உவமேயம் |
|---|---|---|
| தாய் | அன்புடைமை | தடாகம் |
| தாயின் கைகள் | மெல்லத் தட்டல் | அலைக் கரங்கள் |
| குழந்தை | அழகு. இளமை | அன்னம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**52. 'நீலத் துயிலிற் கிடந்த' எனத் தொங்கும் பாடலின் பொருளை உமது வசனநடையில் தருக.**

(பெண்ணொருத்தி அணிந்துள்ள) நீலப்பட்டாடையிலே சிவந்த நிறமணிகள் பதிக்கப்பட்டிருப்பதை அன்னம் காண்கிறது அம்மணிகள் தாமரை இலைகள் மீது நெருக்கமாக மலர்ந்த தாமரைப் பூக்களாக அதற்குத் தோன்ற விரைந்து சென்று அந்த மணிகளைக் கவ்வி (அவை தாமரைமலர்கள் அல்ல என உணர்ந்ததும்) ஏமாந்து வருந்துகின்ற வகையினைக் காணுங்கள்.

**53. இப்பாடலிலே காணப்படும் நயம் எனக் கட்டுரை யாசிரியர் எடுத்துக்காட்டும் விடயத்தை அவரின் உரை நடையிலே தருக**

நாள்தோறும் நற்றாமரைக் குளத்தில் வாழ்ந்து. செங்கமல மலர்களைச் செவ்வையாக அறிந்திருந்த அன்னமே செம்மணியின் சுடர்களைச் செந்தாமரை என்று மயங்கிற்றென்றால் அம்மணிகளின் செம்மை சான்ற ஒளி சொல்லாமலே விளங்குமன்றோ? அச்சுடர்களைத் தாமரை என்று கருதி அன்னம் விரைந்து சென்று கவ்வியஆர்வமும் அச்சுடர்கள் வாயிலாகப் படாமையால் அழுங்கிய தோற்றமும் நகைச்சுவை பயப்பனவாகும்

**54. கரைசேர மனமின்றிப் பொய்கையிலே நீராடும் 'தன் தாயாகிய' நங்கையைத் தடாகத்தினின்று வெளியில் வருமாறு செய்யச் சிறுபைங்கிளி கையாண்ட சூழ்ச்சி யாது? அந்தச் சூழ்ச்சியினைக் கையாண்டமைக்குக் காரணம் யாது?**

தன்னைமறந்து தாமரைக் குளத்தில் விளையாடிக் கொண்டிருந்த மங்கையை வெளியேற்ற 'பாம்பு பாம்பு' என்று சிறு பைங்கிளி பதறிக் குளறிக் கூறியதே அது கையாண்ட சூழ்ச்சியாகும். 'பாம்பு' என்ற சொல் கேட்ட மங்கை மனம்பதைத்துத் தன் தோடு கழர விரைந்தோடிக் கரை சேர்ந்தாள்.

சிறுபைங்கிளி நீண்டநேரம் பசியோடு காத்திருந்தும் மங்கை தடாகத்திலிருந்து வெளியேறாததாலேயே மேற் கூறியவாறு சூழ்ச்சி புரிந்தது.

**55. இப்பாடலின் தொடர்ச்சியாக நிகழ்ந்த செய்தியை அடுத்த பாடலிற் கூறியவாறு எடுத்துக்காட்டி அப்பாடலில் நீர் காணும் நயத்தினை விளக்குக.**

பாம்புக்கு அஞ்சி மங்கை கரையேறிய பொழுது அவளின் தோட்டில் ஒன்று கழன்று தண்ணீருள் வீழ்ந்துவிட்டது. அவளுக்கு அச்சமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையும் உண்டாயின. நடாகத்தில் நீந்திக்கொண்டிருந்த பெண் அன்னப்பறவையை நோக்கி உன்னைத் தொழுவேன் என் அன்னை கொடியவள் என்னை உன் அடிமையாக ஆட்கொள்ள விரும்பினால் என் தோட்டினைத் தேடித்தா என்று கைகூப்பித் தொழுதவண்ணம் அழகிய பூங்கொம்பு போல நிற்பவளைக் காணுங்கள்.

இப்பாடலில் உலக இயற்கை நன்கு எடுத்துக் காட்டப்படுகிறது. எவ்வளவுதான் தன் மகளில் அன்புடையவளாயினுந் தாயொருத்தி தன்மகள் பெறுமதி வாய்ந்த பொருளைத் தொலைத்து விட்டு வந்து நிற்பதைப் பொறுக்காது கண்டிக்கவே செய்வாள். இந்த உண்மையை அன்னை கொடியவள் என்ற சொற்றொடர் மூலம் புலவர் பெற வைக்கிறார் அதே சொற்றொடர் மங்கை தாய்மீது கொண்ட அச்சத்தையும் புலப்படுத்துகின்றது.

அன்னம் வாயில்லாப் பிராணி அவள் சொல்வது அதற்கு விளங்குமோ? எனினும் கலக்கமும் அச்சமும் மிக்க நிலையில் சிறுபிள்ளைத் தனமாக அவள் அன்னத்தை மன்றாடி வேண்டும் காட்சி உருக்கத்தையும் நகைச்சுவையையும் விளைக்கின்றது அதே சமயம் அவளின் சொற்சாதுரியமும். தனது கருத்தை முடிக்க அன்னத்தை மகிழ வைக்கும் வகையில் வேண்டும் வேண்டுதல் முறைமையும் பாடற்சுவையினை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. அன்றியும் அவள் வேண்டுவது பெண் அன்னத்திடமாகும் பெண்ணுக்குப் பெண்ணே இரங்குவாள் என்ற உண்மையை இச்செயல் உணர்த்துகின்றது.

### அரும்பத விளக்கம்

மீன்- நட்சத்திரம், மாந்தி- மிகுதியாகப் பருகி, பள்ளி சேக்கை - படுக்கை, தறங்கு- தொடை, குழவி- குழந்தை, மேய- மேவிய (பொருந்திய), துஞ்சும்- தூங்கும், மஞ்சம்- கட்டில், குயிற்றிய- பதித்த தழலம்மணிகள்- நெருப்புத் தழல் போன்ற அழகிய மணிகள், குமரி அன்னம் -இளமை பொருந்திய பெண் அன்னம். அழுங்கும்- வருந்தும், நுகர்ந்த- அநுபவித்த, தீம்பால -சுவை நிறைந்த பால். காம்பு ஏர்தோழி -மூங்கில் போலும் அழகிய தோளினை உடைய பெண். இறைஞ்சி- வணங்கி, மன்றாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. ஆசாரக் கோவை

### 56. *ஆசாரக்கோவை பற்றி யாது அறிவீர்?*

இன்றுவரை தமிழிலே 'ஆசாரக்கோவை' என்ற பெயரில் இருநூல்கள் வந்துள்ளன. முதலாவது 'ஆசாரக் கோவை' பெருவாயில் முள்ளியார் என்ற புலவர் ஏறக்குறைய 1400 ஆண்டுகளுக்கு முன்பு பாடிய நூல் இந்துக்களுக்கான ஒழுக்க நெறிகள் பழக்கவழக்கங்கள் என்பவற்றை நூறு பாடங்களிலே இந்நூல் விரித்துக் கூறும்.

இரண்டாவது 'ஆசாரக்கோவை' இஸ்லாமியருக்கான ஒழுக்க நெறிகளையும் பழக்கவழக்கங்களையும் விரித்துக்கூறும் நூலாகும். இதனைச் சென்ற நூற்றாண்டில் இயற்றியவர் கீழ்க்கரை அப்துல் மஜிது என்ற இஸ்லாமியப் புலவர் இலங்கைக் கற்பிட்டி முகம்மது தம்பி மரைக்காயர் என்ற வள்ளலின் வேண்டுகோளையும் நிதியுதவிகளையும் ஏற்று இந்த ஆசாரக்கோவை பாடப்பட்டது அப்துல் மஜிதுப் புலவர் தமது நன்றிக்கடனைப் புலப்படுத்து முகமாக ஆசாரக்கோவைப் பாடல்தோறும் முகம்மது தம்பி மரைக்காயரை விளிப்பது குறிப்பிடத்தக்கது உதாரணம் வருமாறு.

***தட்டி லாத்திரு மேவுமு கம்மதுத்***
***தம்பி மாமரைக் காயச காயனே***

இஸ்லாமியருக்கான ஒழுக்க நெறிகள் இந்நூலிலே சிறப்பிடம் பெறினும் மக்கள் எவரும் பொதுவாகப் பின்பற்றக்கூடிய ஒழுக்க நெறிகளே பெருமளவு கூறப்பட்டிருப்பது சிறப்பாகும்.

### 57. *அப்துல் மஜீதுப் புலவரின் அவையடக்கத்தில் வரும் உவமையை விளக்குக.*

வடித்தெடுத்த செந்தமிழ் வாணரின் முன்பு கட்டளைக்கலிப்பா (ஒரு பாடல் வகை) என்னும் யாப்பிலே, கற்று அறிந்திலாத தாம் ஆசாரக் கோவையைக் கூறுவது, அளவில்லா ஒளியினை விடும் மாணிக்கத்தின் முன்னே ஒளி மழுங்கிய பளிங்குக் கல்லினை (வைப்பது) போன்றதாகும் என்பதே புலவர் காட்டும் உவமை.

| உவமானம் | பொதுத்தன்மை | உவமேயம் |
|---|---|---|
| [illegible] | ஒளி (அறிவு) | தமிழ்வாணர் |
| | [illegible] | முன்னிலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பளிங்குக்கல் | ஒளி (அறிவு) மயங்கிய நிலை | அப்துல் மஜீதுப் புலவரின் ஆசாரக் கோவை |
|---|---|---|

**58. இரண்டினை நினைத்தல் இரண்டினை மறத்தல் அவசியம் செய்யவேண்டுவன என்று குறிக்கப்படுவன எவை?**

1. இறைவனை என்றும் நினைத்தலும், உள்ளத்தில் மரணத்தை எப்பொழுதும் வரும் என்பதை நினைத்தலும் வேண்டும்.

2. தான் நீதியான முறையில் பிறருக்குச் செய்யும் நன்மையை நினைப்பை விட்டு மறத்தலும் பிறர் தனக்குத் துன்பம் தரும் வகையிலே செய்யும் தீமையை மறத்தலும் வேண்டும்

3. தனது சமயத்தை அறிந்திருத்தல் மனத்திலே தீய எண்ணங்களை அகற்றுதல் ஞானம் நிறைந்த குருவின் முன்னிலையிலே அவரிடம் உறுதியான உபதேசம் பெறல், முரட்டுத்தனமான துர்க்குணத்தை அடக்கி அதற்கு அஞ்சி நடத்தல் ஆகியன அவசியம் செய்ய வேண்டுவனவாகும்.

**59. கல்வி தொடர்பான கற்றல் கற்பித்தல் பற்றி ஆசாரக் கோவை கூறும் அறிவுரைகளைத் தருக.**

கற்று அறிந்த அறிஞரிடம் சென்று கற்றும் அவர்கள் கூறிடும் அறிவுரைகளைக் கேட்டும் வருதல் வேண்டும். இவ்வாறு கற்றுக் கற்றவற்றைத் தெளிவாக உணர்ந்தபின் அவற்றைக் கடமையாக விரும்பிக் கடைப்பிடித்தல் வேண்டும் ஒருவர் தாம் கற்ற விடயங்களைக் கல்லாதவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும். இவ்வாறு கற்றவர் ஒருவர் தாம் கற்றவற்றைப் பிறருக்கு விளக்கமாக கற்பியாமையும் கல்லாதவர் கற்றறிந்தோரிடம் சென்று கல்லாமையும், கற்றவர் தாம் கற்றவற்றைக் கடைப்பிடிக்காமையும் குற்றங்களாகும்.

புத்தியானது கல்விக்கு நல்ல தந்தை பொறுமை அதற்கு நல்ல மந்திரி. பக்தியே அதனால் பெறத்தக்க பெரும் பேறு, தாழ்மையைக் கடைப்பிடித்தல் அதற்கு உகந்த நல்ல உடை, உள்ள உடற் சுத்தங்களே அதன் பெரும் மதிப்பு: சிறந்த நற்குணங்களே அதற்கு உற்ற துணையாகும் (இக் கருத்துக்களிற் பெரும்பாலானவை திருக்குறளிலே கல்வி, கேள்வி, கல்லாமை, அறிவுடைமை ஆகிய அதிகாரங்களிலே கூறப்பட்டுள்ளவற்றின் சாரம் எனத் தக்கன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**60. கல்வி மிகுந்திடும் அறிஞர்க்கும் கல்வி குறைந்த அறிவிலிகளுக்கும் வேறுபடுத்திக் காணத்தக்க இயல்புகள் யாவை? அறிவிலிகளுக்குக் கூறப்படும் உவமையாது?**

கல்வி மிகுந்தவர் குறைந்த வார்த்தைகளையும், கல்வி குறைந்தோர் மிகுந்த வார்த்தைகளையும் பேசுவர். அறிவிலிகள் குறைநீர் குடங்களுக்கு ஒப்பாவர்.

**61. புகழத் தக்கவர் இகழத் தக்கவர் திகழத்தக்கவர் என்போர் எவ்வெவர் என ஆசாரக்கோவை கூறும்?**

1. புகழத்தக்கவர் : நல்லொழுக்கங்களை மதித்துப் பேணி அவற்றைத் தம் பிள்ளைகளுக்குக் கற்பித்தவர்கள்.
2. இகழத்தக்கவர்: தாம் பெற்ற பிள்ளைகளிலே தீய ஒழுக்கங்களைக் கண்டு அவற்றை அகற்ற முயலாதவர்கள்
3. திகழத்தக்கவர்: தூயவனாகிய ஆண்டவனின்கட்டளையை உறுதியாக ஏற்று நடப்பவர்கள். (திகழத்தக்கவர்– பெயர்களுடன் நிலைப்போர்)

**62. எவ்வெவற்றை எவையெவை தின்றுவிடும்?**

பெயர் கூறுதல் வாழ்வையும், புறம் சொல்லுதல் நல்ல தவங்கள் யாவற்றையும், வருத்தும் துயரம் ஆளையும், வழங்கும் கொடைதுன்பத்தையும், பிறருக்குச் செய்யும் வஞ்சகம்(செய்த) நன்மையையும், சினப்பதாகிய கொடுங்கோபம் புத்தியையும் தின்றுவிடும்.

**63. யோக்கியர் இயல்புகள் செல்வம், வறுமை இன்பம், துன்பம் என்பவற்றின் தன்மைகள் இவ்விவற்றைச் சேராதவர் எனப்படுவோரின் பாங்குகள், ஆயுளைக் குறைக்கும் செயற்பாடுகள் என ஆசாரக்கோவை கூறுவனவற்றைத் தொகுத்துத் தருக.**

நாணயந் தவறாத வாக்கினை அளித்தலும் குறும்புகள் குதர்க்கங்களைக் கண்டு அவற்றிலிருந்து விலகலும், தம்மைப் பாதிப்பதாகிய கொடிய கோபத்தினை அடக்குதலும் தரும நீதியிலே மனத்தை இருத்தலும், கன்னிப்பெண்களின் கற்பைக் காத்தலும் புனிதரான யோக்கியர்களின் இயல்புகளாகும்.

செல்வமும் வறுமையும் உருளும் சக்கரம் போன்றவை. உலகிலே சூழ்ந்து வரும் இன்பமும் துன்பமும் சுழல்கின்ற இராட்டினத்தை ஒத்தவை வீழுகின்ற ஆயுளும் (உடல் வீழ்தல்– மரணம் சம்பவித்தல்) உடலும் ஆகாயத்தில் ஒளிவிட்டு மங்கி மறையும் மின்னலுக்குச் சமமானவை.

பெருமை (அகங்காரம் ) உடையவர் மோட்சம் அடையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10ஆம் 11ஆம் பாடல்களிலே வந்துள்ள உவமான உவமேயங்களையும் அவற்றின் பொதுத் தன்மைகளையும் குறித்துக் காட்டுக.**

| | உவமானம் | பொதுத் தன்மை | உவமேயம் |
|---|---|---|---|
| 1 | பழம் இல்லாத மரம் | பயனின்மை | பக்தியும் கொடையும் இல்லாத பணப்பாக்கியம் உடையோர் |
| 2 | மழை பெய்யா மேகம் | நோக்கத்தை நிறை வேற்றாமை | பக்தியாய் வணங்காத தன்மையுள்ள ஆலிம்கள் (மார்க்க அறிஞர்கள்) |
| 3 | உப்பில்லா வெறும் உணவு | சுவையின்மை | நாணமில்லாத இளம் பெண்கள் |
| 4 | மேற்கூரை இல்லாத வீடு | பாதுகாப்பின்மை | பாவமீட்சி இல்லாத இளைஞர் |
| 5 | மேய்ப்பார் இல்லாத ஆட்டுக்கடா | தம்போக்கிலே (புல்லை– மக்களை) அழித்தல் | நீதியில்லாத மன்னர் |
| 6 | குடிக்க நீர் இல்லாத நதி | வறட்சித்தன்மை | சாந்தகுணமில்லாத (சமயப் பாடல் பாடி இரப்போர்) |

மடையர்கள் அறிஞர் நிறைந்த சபையினைச் சேரார். ஊக்கமுடையவர் தாழ்வடையார். அருமையான உயர்வுடையோர் இழிந்த அற்பர்களைக் கூடார். அதிகாரமுடையவர் தாழ்ந்த வழிச் செல்வார்.

பெற்றோர் கட்டளையை மீறுதல் தன் இனத்தினரை வெறுத்து நீங்குதல் மனத்தினால் ஏழைகளைத் திட்டி வெருட்டுதல் சிறப்பில்லாத உலோபம் காட்டுதல் குறித்த வேளை அன்றி வழிபாடு நிகழ்த்தல் என்பன வாழ்நாளைத் தேய்த்திடும் என்பர் அறிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 64. எவ்வெவரை எவ்வெக் காலத்தில் அறியலாம்?

ஆபத்துக் காலத்தில் அண்ணன் தம்பி, சினேகிதர்களையும், மேலெழும் கொடிய கோப வேளையில் நல்ல பொறுமையானவரையும், நன்கு யுத்தம் நடத்தும் சந்தர்ப்பத்தில் வீரம் அமைந்தவர்களையும் அறிந்து கொள்ளலாம்.

## 65. நம்பவெண்ணாதவர் யார்? உலகம் புகழ்கின்ற சற்குணங்கள் எவை? விளக்குக

வாளை ஏந்திக் கொலை புரிய முற்படும் வீரரையும் எதிர்த்து நிற்கும் கபட மனத்தினரையும் கோபமும் மூம்மதங்களும் உடையயானையையும் கரடி சிங்கம் யாளி ஆகிய விலங்குகளையும் நம்பினாலும் பரந்த உட்பகை உடையவரை (வெளியில் நட்புப்போற்காட்டி உள்ளிருந்து நாசம் விளைவிக்கும் பகைவரை) நம்புதலாகாது.

பகையை வெளிப்படுத்திக் கோபித்து எதிர்ப்போரைப் பணிந்து போற்றுவதன் மூலம் இணங்க வைத்தல் தமது மிகுதிப்பாட்டினை வெளிக்காட்டி அக்கிரமம் செய்பவருக்குத் தமது மேலான பண்பினைப் புலப்படுத்தி மிகுதியும் பொறுத்தல், தமது வருவாயிலிருந்து ஒதுக்கி வைக்கும் தருமநிதி (மகமை) கொண்டு ஏழைகளுக்கு வழங்கல் என்பன உலகம் புகழ்கின்ற சற்குணங்களாகும்.

## 66. இலக்குமி தங்கியிருக்கும் இடம். மூதேவி வாழும் இடம் முயற்சியுடையோர், முயற்சியில்லார் அடையும் பயன்கள் என ஆசாரக்கோவை கூறுவன எவை?

முயற்சியுள்ளவரின் சமுகத்தில் இலக்குமி முகமலர்ந்து (முகமனோடு) தங்கியிருப்பாள் முயற்சி இல்லாதவர் முகத்திலே மூதேவி தங்கியிருப்பாள் முயற்சியுடையவர் தாழ்வதில்லை. முயற்சி இல்லாதவர் உயர்வதும் இல்லை.

(பின்வரும் திருக்குறட் கருத்துக்கள் மேற்குறித்த பாடற் கருத்துக்களாய் எடுத்துக் கையாளப்பட்டுள்ளதை ஒப்பிட்டு நோக்குக)

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையினாள்

திரு ஆள் விளைவுயுடையமை -7)

மடி - சோம்பல், மாமுகடி - கரிய மூதேவி தாள் - முயற்சி.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

திரு. ஆ. வி. உ. -6)

திரு - செல்வம் முயற்றின்மை - முயற்சியின்மை
இன்மை - இல்லாமை, வறுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 67. உத்ததமமானவை எவை?

காலத்தை ஆராய்ந்து அதற்கேற்பச் செயல்புரிந்து வாழ்வதும் தருமத்தைத் தீர ஆராய்ந்து செய்தலும், உலகநடை அறிந்து அதற்கிசைய நடத்தலும் நல்ல குணத்தில் நிலையாயிருத்தலும், கண்கட்டு வித்தையின் உண்மையினை விளங்கிக்கொள்ளலும், சபை இயல்பு அறிந்து பேசுதலும் ஆகிய இவை உத்தமமானவை.

அரும்பத விளக்கம்

தட்டு- குறைபாடு (தட்டுப்பாடு), தார்க் கவின்புயம் (தார் + கவின் + புயம்) — மாலையால் அழகு பெற்ற புயங்களையுடைய, மானம் - பெருமை, தாவில் (தா + இல்) - கேடு இல்லாத, தயாளம்- இரக்க குணம் (கொடைத்திறம்), சீலம்-நற்குணம் தண்மை -குளிர்ச்சி, சிரோமணி தலையினை அணிசெய்யும் மணி (போன்றவன்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. சிரிக்கத் தெரிந்த பாரசீகர்

பேராசிரியர் க . அப்துல்கபூர்

***68. சிரிப்பினது சிறப்புக்கள் பற்றிப் பேராசிரியர் க. அப்துல் கபூர், கூறியுள்ளவற்றைத் தொகுத்துத் தருக.***

சிரிப்பு இறைவன் மக்களுக்கு வழங்கிய தனிப்பெரும் பண்பு, மனிதன் சிரிக்கும்விலங்கு, என்பர் 'அழுதுகொண்டு பிறப்பவன் சிரித்து வாழ்ந்து சிரித்தபடியே இறக்கவும் வேண்டும்' என்பது அறிஞர் கூற்று மனித வாழ்வில் பெரும்பகுதி துன்பமயமாவும் சிறுபகுதியே இன்பமயமாகவும் இருப்பதால், எவன் ஒருவன் துன்பத்தைக் கண்டு மருளாது அதை அழிப்பதில் இன்பம் காண்கிறானோ, அவனே வாழ்வில் வெற்றி பெறுவான். மேற்குநாட்டு உளவியல் அறிஞர்கள் பலர் நகைச்சுவை பற்றி ஆராய்ந்து உடம்பில் இரத்த ஓட்டம் அதிகரிக்கவும் மூளையிற் புத்துணர்ச்சி ஏற்படவும் சிரிப்புத் துணை புரிவதைக் கண்டறிந்துள்ளனர்.

***69. பாரசீக மக்கள் நகைச்சுவையாகவும் கிண்டலாகவும்' உரையாடுவதைப் பெருமையாகக் கருதியமையை இரண்டு உதாரணங்கள் தந்து விளக்குக.***

1. முதுமையால் கூன் விழுந்த கிழவர் வீதிவழியாக வருகின்றார். அவரைத் துடுக்குத்தனம் மிகுந்த இளைஞன் ஒருவன் காண்கின்றான்.

*இளைஞன் :* தவறி விட்ட ஏதோ ஒன்றைத் தாங்கள் தேடுகிறீர்கள் போலிருக்கிறதே?

*கிழவன் :* ஆமாப்பா இழந்துவிட்ட எனது இளமையைத் தான் தேடியலைகிறேன். இளைஞன் கிழவரின் கூனலைக் கிண்டல் பண்ணினான் கிழவரோ 'நானும் ஒரு காலத்தில் இளைஞனாயிருந்து தான் இன்று முதியவனாகி விட்டேன். நீயும் ஒருநாள் முதியவனாவாய்' என்ற குறிப்புத் தோன்ற இவ்வாறு பதிலிறுத்தார்.

*2. வேறொரு முதியவரின் வளைந்த முதுகைக் கண்டு மற்றோர் இளைஞன் பின்வருமாறு பரிகசித்தான்.*

*இளைஞன் :* பாட்டா இந்த அழகான வில்லை (முதுகை), நான் எவ்வளவு பணம் கொடுத்தால் பெற்றுக் கொள்ளலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவர் : இதைப் பணங்கொடுத்து வாங்க வேண்டாமப்பா இன்னும் சிறிது காலம் நீ பொறுமையோடிருந்தால் அது உனக்கு வெகுமதியாகவே கிடைக்கும்.

(கிழவரின் கூற்று எந்த இளைஞனும் ஒரு நாள் கிழவனாகி முதுகு கூனுவான் என்று அமைந்து அவன் வாயை அடக்கியது.)

## 70. சந்தர்ப்பம் கூறி விளக்குக.

1. வேறொன்றுமில்லை என்முகம் முன்னைய எழிலை நினைத்துக் கறுப்புடையணிந்து கவலைப்படுகிறது.

2. ஏனெனில் எங்கள் ஷீராஸில் தப்ரீஸ் வாசிகள் நாயை விடக் குறைவாகத்தானே இருக்கிறார்கள்?

3. .............ஏனெனில் அவனை நாம் தீர்க்கதரிசியாக அனுப்பியதே இல்லை

1. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகப் பெரும் புலவர் ஸ அதி இளமைக் காலத்தில் அழகுடன் விளங்கிய தம் நண்பர், முதுமைக் காலத்திலே அழகிழந்து, கறுத்து, தாடி முளைத்து விளங்கியதைக் கண்டு அவரது மாற்றத்திற்குக் காரணம் வினாவினார் அதுகாலை அந்த நண்பர் ஸ அதிக்கு மேற் கண்டவாறு கூறினார். இக் கூற்றிலே நண்பரின் கவலையையும் மிஞ்சிக் கொண்டுநகைச்சுவை எழுவது குறிப்பிடத் தக்கது.

2. ஸ அதி கப்ரீஸ் என்ற நகரம் சென்றபொழுது அவரிடம் ஒருவர் 'உமக்கு எந்த ஊர்' என்று கேட்க, ஸ அதி 'ஷீராஸ் நகரம்' என்று பதில் உரைத்தார். அதனைக் கேட்ட தப்ரீஸ் வாசிகிண்டலாக 'தப்ரீஸில் ஷீராஸ் வாசிகள் நாய்களை விட அதிகமாகி விட்டார்கள்' என்றார். இதற்கு விடையாக இறுக்கப்பட்டதே 'எங்கள் ஷீராசில்...... எனத் தொடங்கும் ஸ அதியின் விடை இதன் மூலம் ஸ அதி, 'ஷீராஸ் வாசிளே நாய்கள் இனம்' என்று பதிலடி கொடுத்து விட்டார்.

3. பாரசீகத்தில் தத்துவஞான வெறி அதிகரித்திருந்த காலத்தில் ஒருவன் தன்னைக் கடவுள் என்று சொன்ன குற்றத்திற்காகக் கலீபா (இஸ்லாமிய மன்னர்) முன்பு கொண்டுவரப்பட்டான். அவனை நோக்கி, 'சென்ற ஆண்டு தான் ஒருவன் தானே தீர்க்கதரிசி என்று கூறிக் கொண்டு வந்தான். அவனை நாம் தூக்கிலிட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றோம் இப்போது நீ ஒரு..' என்று கலீபா பேச்சை முடிக்க முன்னரே குற்றவாளி மேற்கண்டவாறு கூறினான் குற்றவாளிக்கூண்டிலே நின்ற வேளையிலும் அவனுடைய சமயோசித புத்தியும் நகைச்சுவையும் அவனை விட்டு நீங்கவில்லை என்பதற்கு அவன் கூறிய இக்கூற்றே சான்று 'நானே கடவுள்' என்றதன் முன்னைய கூற்றை மேலும் நிலை நிறுத்துவதுபோன்று, அமைந்திருத்தல் காணலாம்.

***70. பேரரசன் நவுஷேர்வானின் ஈவானேகிஸ்ரா அரண்மனையை அப்பாசியாக கலீபா உடைக்க முற்பட்ட பொழுது அவ்வாறு செய்வதைத் தடுத்தவர் யார்? அவர் தடுத்தும் கேளாது இடிக்க முற்பட்டு மூன்று நாளாகியும் அரண்மனையை அசைக்க முடியாது அழிவு வேலையைக் கைவிட்டார் கலீபா அப்பொழுது முன் தடுத்தவர் பின்பு கூறியதிற் காணப்படும் நகைச்சுவை யாது? விளக்குக.***

கலீபாவின் செய்கையைத் தடுக்க முற்பட்டவர் பாரசீகத்தைச் சேர்ந்த சாந்த காலித் என்பவர், மூன்றுநாள் இடித்தும் அரண்மனை இடிபடாது போகக் கலீபா அல் மன்ஸூர் உம் வேண்டுகோளுக்கு நாம் இப்பொழுது இணங்குகின்றோம். ஏனெனில் இதிலிருந்து கிடைக்கும் உபகரணங்களைவிட இதை உடைப்பதற்குச் செலவாகும் பணமே மிகுதியாகும். என்று சாந்த காலித்துக்குச் சொன்னார் கலிபாவின் கூற்று அரண்மனையின் சிறப்பையும் பெறுமதியையும் அவ்வேளையிலும் குறைத்துக் கூறுவதாகவே தொனித்தது. இதற்குப் பதிலடியாக சாந்த காலித் 'நீங்கள் அந்த அழிவு வேலையைத் தொடரவேண்டும் என்றே இப்போது நான் விரும்புகின்றேன். ஒருவன் ஆக்கியதை அழிப்பதற்குரிய ஆற்றல்கூட இவர்களுக்குக் கிடையாதென வருங்காலம் நம்மீது பழிசுமத்தக் கூடாது' என்றார்

பெறுமதி குறைந்தது என நீங்கள் கூறும் அரண்மனையைஅழிக்கும் ஆற்றல் கூட உங்களுக்கு இல்லையே!' என்ற சாந்த காலித்தின் கேலியிலே நகைச்சுவையும் கிண்டலும் மறைந்து கிடக்கின்றன.

***71. பாரசீகக் கவிஞர்களின் கவிதைகளிலே (காதற் கவிதைகள் முதல் ஒழுக்கச் செய்யுள்கள் ஈறாகக்) காணப்படும் நகைச்சுவையை இரு உதாரணங்கள் தந்து விளக்குக.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் : 1

எண்ணம் என்னும் தராசிற்கு இ தட்டுக்கள் ஒரு தட்டிலே சந்திரன், மற்றொரு தட்டிலே தலைவி தலைவியின் தட்டோ பாரத்தினால் (பெறுமதியினால் கூடித்) தாழ்கிறது சந்திரனின் தட்டோ பாரக்குறைவால் மேலே எழுகிறது (சந்திரனின் பெறுமதி குறைவு) இதனாலே தலைவி, தரையில் உள்ளாள். சந்திரனோ ஆகாயத்தில் உள்ளான்.

சந்திரனிலும் அழகும் பெறுமதியும் கூடியவள் தலைவி என்பதையும், அவள் மண்ணிலும் சந்திரன் விண்ணிலும் உலவுதல் அதனாலே தான் என்பதையும் தமது கற்பனையிலே கண்டு நகைச்சுவையோடு புலவர் கூறியுள்ள திறன் பாராட்டத் தக்கதாகும்.

உதாரணம்: 2

பசிய ஆபரணங்கள் அணிந்த பெண்ணே! எனது கனவிலே காட்சி தருவதாகக் கூறி என்னை நீ ஏமாற்றி விட வேண்டாம் உன்னைக் கண்டவர்களுக்குத் தூக்கமே கிடையாது என்பதை நீ அறிவாயா?

காதலனால் போற்றப்படும் பெண் கண்டவர் கருத்தைத் தன் வசம் ஆக்கிவிடும் கவர்ச்சிக் கன்னியவள். அவளைக் கண்ட பின் கண் மூடித் துயில்வது இயலாத காரியம். எப்போதும் அவள் நினைவே வந்து நித்திரையைக் கலைத்துவிடும். பின்பு கனவு உண்ன்டாவது எப்படி?

இவ்வாறு சாதுரியமாகவும் நகைச்சுவையாகவும் காதலன் பேசுவதாகப் புலவர் சிறந்த கற்பனை ஒன்றினைக் கையாண்டுள்ளார்.

***72. நகைச்சுவையாகவும் சாதுரியமாகவும் பேசவல்லவர் எந்தச் சூழ்நிலையிலும் எவரையும் தமது திறமையால் வாயடக்கி விடுவர் என்ற கூற்றுக்குத் தௌலத் எடுத்துக் காட்டாக விளங்கிய சம்பவத்தை விவரிக்கவும்.***

தைமூர் என்பவர் உலகையே நடுங்கச் செய்த வெற்றிவீரர், ஆனால் முடவர். அவர் ஷீராஸ் நகரத்துக்கு வருகை தந்தபோது அவரை கௌரவிக்க, இசையரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது அந்த இசையரங்கிலே இசையமுது பொழிய வந்த தௌலத் கண்பார்வையற்றவர்.

தைமூர் :- (தௌலத்தை நோக்கி) தங்கள் பெயர் என்ன?

தௌலத் :- தௌலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைமூர் :- (தௌலத் என்ற பெயரின் பொருள் செல்வம் என்பதை நினைவிற் கொண்டு சிரித்தபடி)
தௌலத் (செல்வம்) குருடாகவா இருக்கும்?

தௌலத் :-(தைமூரின் மூடத்தனத்தைக் கிண்டல் பண்ணும் வகையில்)தௌலத் குருடாக இல்லாமலிருந்தால் முடவனிடத்திற்கு வந்திருக்காது.

**78. ஆந்தை, குதிரை முதலான பிராணிகளை மையமாக வைத்துப் பாரசீகர் வெளிப்படுத்திய நகைச்சுவைக்கு உதாரணம் தந்து விளக்குக.**

1. ஆந்தை

ஆந்தை 1, எனது மகள் உனது மகனை மணஞ்செய்ய வேண்டுமானால் நீ இருநூறு பாழடைந்த மண்டபங்களைச் சீதனமாக வழங்கவேண்டும்.

ஆந்தை 2, வாழ்க எங்கள் வேந்தன் ஆயிரம் வேண்டுமாயினும் தருகிறேன்.

(இரண்டாவது ஆந்தை கூறியபடி அரசன் நீடு வாழ்ந்து பல பட்டினங்களை வெல்வானானால் பகைவரின் மண்டபங்கள் பல்லாயிரக் கணக்கில் பாழ்படும் என்பது கருத்து.)

2. குதிரை

கிழக்குதிரை ஒன்றில் வீரர் ஏறிச் செல்கிறார். நண்பர் அவரைக் காண்கிறார்)

நண்பர் : எங்குச் செல்கிறீர்கள்!

குதிரையில் செல்பவர் : வெள்ளிக்கிழமை ஜூம் ஆவுக்குச் செல்கிறேன்

நண்பர் : வெள்ளிக்கிழமை ஜும் ஆவுக்கா? இன்று புதன்கிழமைஅல்லவா?

குதிரையில் செல்பவர் : இன்று புதன் கிழமை என்பது உங்களுக்குத் தெரியுமே தவிர என் குதிரையின் வேகம் உங்களுக்குத் தெரியாதல்லவா?
(அவரின் குதிரை மாதம்போம் காதவழி)

2. இரவில் அது புறப்பட்டால் முன் சென்று பகலைப் பிடித்து விடும் ஒரு கவிஞர். (அவ்வளவு வேகம் உடையது அந்தக் குதிரை

3. அரசனிடமிருந்து பரிசாகக் கிடைத்த குதிரை அன்றிரவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து போகக் கவிஞர் கூறியது

ஒரு இரவிலேயே மண்ணுலகிலிருந்து விண்ணுலகத்திற்குப் பாய்ந்து செல்லும் வேகமுடையது என் குதிரை

4. 14. ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர் ஸல்மான் தமக்கு மன்னன் அளித்த கிழட்டுக் குதிரையை அவனிடமே திருப்பி அளித்துக் கூறியது.

இதன் மீது சவாரி செய்யும் தகுதியை நான் பெறவில்லை இது குறைந்தது என்னிலும் முப்பதாண்டு மூத்தது மூத்தவர்களின் முதுகில் அமர்வது அவர்களை அவமதிப்பதாகும்

***74. 'சாதாரண மக்களின் உரையாடல்களிலிருந்து அரண் மனையின் அந்தப்புரங்கள் வரையில் பரந்து கிடக்கும் பாரசீக இலக்கியத்திலுள்ள நகைச்சுவை' எனப் பேராசிரியர் போற்றுவதற்கு உதாரணமாக அந்தப்புரத்தைப் பின்னணியாகக் கொண்ட நகைச்சுவை ஒன்றினை விளக்குக.***

பாரத நாட்டைப் பண்புடன் ஆண்ட மொகலாய மன்னர்களுள் ஒருவர் ஷாஜகான் அவரின் காதலி பேரழகியான மும்தாஜ் (இவர் நினைவாகவே தாஜ் மகால் ஷாஜகானால் கட்டப்பட்டது) ஆக்ராவின் அரண்மனையிலே இவர்கள் இன்பவாழ்வு வாழ்ந்தனர் ஒருநாள் மாலை நேரத்தில் மாநதி ஓரத்தில் இவ்விரு காதலரும் இணைந்திருந்த வேளையிலே ஷாஜகான் பைங்கிளியே! உன்பால் முகத்தைக் காண்பதற்கு யமுனையாறு பாய்ந்தோடி வருவதைப் பாராய் என்று கனிவுடன் கூறினார். இதற்கு மறுமொழியாக மும்தாஜ் தழதழத்த குரலில் (காவலரே) தங்களுக்கு அஞ்சி அது கற்களிலே தனது தலையைமோதிக் கொள்வதையும் பாரீர் என்றாள் ஷாஜகான் தம் காதலியைத் தம்மைத் தவிர்ந்த பிறர் பார்ப்பதையும் அனுமதியார் என்ற உண்மையைக் குறிப்பாக ஆனால் நகைச்சுவையுடன் மும்தாஜ் வெளிப்படுத்துவது நோக்கி இன்புறத்தக்கது.

அரும்பதவிளக்கம்

மருட்சி–மயக்கம், அச்சம், உளநூல் அறிஞர் மனத்தின் இயல்புபற்றி ஆராயும் அறிஞர், செவிமடுக்கும்–உற்றுக்கேட்கும், செழுமை–செழிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கதரிசி – எதிர்கால நிகழ்வுகளை உணரவல்ல ஞானி. எழுத்தோவியம் – சித்திரம்போல அழகுற அமைக்கப்படும் இலக்கியம், எழில் – அழகு. பைந்தொடி – பசுமையான ஆபரணம் அணிந்த பெண் (அன்மொழித்தொகை) ஜும் ஆ – வெள்ளிக்கிழமைத் தொழுகை. அந்தப்புரம் – அரண்மனையிலே பெண்கள் வசிக்கும் இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. பெரிய புராணம்

சேக்கிழார் அடிகள் அருளிய
திருநகரச் சிறப்பு

**75. பெரியபுராணம் பற்றி நீர் அறிந்தவற்றைச் சுருக்கமாகத் தருக.**

சைவசமய குரவருள் ஒருவரான சுந்தரமூர்த்திநாயனார், சிவனடியார்கள் அறுபத்துமூவர் (வாழையடியார்) பெருமைகளையும், ஒன்பது வகையினரான சிவனடியார் கூட்டச் (தொகையடியார்) சிறப்புக்களையும் போற்றி திருத்தொண்டத்தொகை என்னும் தேவாரப் பதிகம் பாடியருளினார் அவரைப் பின்பற்றி நம்பியாண்டார் நம்பி, சிவனடியார் ஒவ்வொருவர் பற்றியும் ஒவ்வொரு பாடலாகத் திருத் தொண்டர் திருவந்தாதி பாடினார் இவ்விருவரது நூல்களையும் அடியொற்றி 4286 விருத்தப்பாடல்களில் 13 சுருக்கங்களாக வகுத்துச் சிவனடியார்கள் வரலாற்றினை விரித்துப் பாடிய நூலே பெரியபுராணம் என்னும் திருத் தொண்டர் புராணம் சோழநாட்டமைச்சரான சேக்கிழார் அடிகளே பத்திச் சுவையோடு காவியச் சுவையும் அமையும் வண்ணம் பெரியபுராணத்தை ஆக்கியருளியவர் திருதொண்டத்தொகை முதல் நூல்: திருவந்தாதி வழிநூல் பெரிய புராணம் சார்பு நூல்.

**76. திருநகரச் சிறப்பு என்ற பகுதியிலே சிறப்பிக்கப் படும் திருநகரம் எது? இப்பகுதி எந்தச் சுருக்கத்துள் அடங்கும்? நகரங்களுள்ளே இதனை மட்டும் சிறப்பித்து முதலிற் பாடக் காரணம் யாது?**

திருவாரூர் நகரமே திருநகரச் சிறப்பில் சிறப்பிக்கப்படுவது பெரிய புராணத்து முதற்காண்டத்திலே திருமலைச் சுருக்கம் என்ற பகுதியிலே திருமலைச் சிறப்பு திருநாட்டுச் சிறப்பு என்பவற்றையடுத்து திருநகரச் சிறப்பு விரிக்கப்படுகிறது. சுந்தர மூர்த்திநாயனார் திருத்தொண்டத்தொகை பாடிய திருத்தலம் திருவாரூர் என்பதால் அவரைப் பின்பற்றி நூல் செய்ய முற்பட்ட சேக்கிழார் அடிகள் திருவாரூர் திருநகரச் சிறப்பினை விரித்தல் இயல்பேயாகும்.

**77. பூமாதேவியின் அழகிய நெற்றிப் பொட்டுப் போல விளங்குவதும் சோழ மன்னர் வாழ்ந்ததுமான திருவாரூரின் மன்னன் யாவன்? அவன் பெருமைகள் எவை? விளக்குக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுவேந்தன் எனப்படும் மனுநீதிகண்ட சோழனே அந் நகரில் இருந்து ஆண்டுவந்த அரசன். அவன் சூரிய குலத்தினன் ஒளிகாலும் பெரிய மணிகள் இழைத்த ஆபரணம் பூண்டவன், அநபாயசோழனின் குல முதல்வன்: உலகில் வாழும் நிலையான உயிர்கள் யாவற்றுக்கும் கண்ணும் உயிருமாய் நின்று காக்கின்றகாவலாளன்.

மனுச்சோழன் தேவர்கள் மகிழ்ச்சி அடைந்திடும் வண்ணம் எண்ணுக் கணக்கில்லாத பல வேள்விகளை நடத்தினான் அவனுடைய வெற்றிதரும் ஆணைச் சக்கரமானது உலகம் முழுவதும் சூழ்ந்திருந்தது. மன்னர்கள் திறைப் பொருள்களோடு அவனது கடைவாயிலில் சுற்றி நின்றனர். வெறுப்பினை நீக்கிய நேர்மை காரணமாக அவன் மனு (தர்மசாத்திரம் இயற்றியவன்) பெற்ற நீதியைத் தன் பெயராய் ஆக்கிக்கொண்டான் (மனுநீதிகண்ட சோழன் எனப்பெயர் பெற்றான்) வேதமாகிய புற்றினை இடமாகக் கொண்டு எழுந்தருளி எங்கும்நிறைந்திருப்பவரான வான்மீக நாதருக்குத் திருவாரூரிலே பல அறக்கட்டளைகளைப் பெரிய ஆகமங்கள் கூறிய முறையில் வகுத்தவன் இவன்.

இத்தகைய நல்ல வேந்தன் அறம், பொருள், இன்பம் என்பவற்றை அறம் வழுவாது அணைத்துக் கொண்டு மறத்தினைக் கடிந்து மன்னர்கள் யாவரும் போற்றிட உலகினைக் காத்து வந்தான்,

### 78. *மனுச்சோழனின் சிறந்த நல்ல தவத்தால் அவன் தேவியது மணிவயிற்றிற் பிறந்த மைந்தன் சிறப்புக்களைச் சேக்கிழார் அடிகள் எவ்வாறு சித்திரிக்கின்றார்? விளக்குக.*

அம்மைந்தன் நாள்தோறும் சிவபெருமானை வழிபட்டு அவர் தம் திருவருளினை அடையப் பெற்றவனாகத் தெய்வக் கலைகள் பலவற்றையும் திருந்தக் கற்று மேன்மையுற்றான் : இவற்றோடு விரைந்து பாயும் குதிரையேற்றம், யானையேற்றம், தேர்ப்படை செலுத்தல் ஆகிய தொழில்களையும் கற்றுத் தேர்ந்தான். இம் மானிடப் பிறவியை அடைந்ததும் பெரும்பேறே எனக்கொண்டு சிறந்த பண்பாளனாய் விளங்கினாண்.

இவ்வாறு அளவில்லாத பழமையான கலைகள் யாவிலும் தேர்ச்சியுற்றே அவன் தன் தந்தை தம்மீது உள்ளம் மகிழ்ந்திட மிக்க அன்பு கொள்ளுமாறு உயர்ந்த குணங்களிலும் நிலைபெற்று இளவரசன் என்னும் தகுதியைப் பெறுங்காலத்தை அண்மி வளர்கின்ற இளம் சூரியன்போல வாழ்ந்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 79. மனுச்சோழன் மகன் தேரில் உலாச்சென்ற வகையையும் அதிகாலை நிகழ்ந்த சம்பவத்தையும் விளக்குக.

சந்திரன் போலும் வெண்ணிறக் கொற்றக் குடையுடைய அரசனது செல்வம் வளர்தற்கு இடமான அரண்மனையிலிருந்து ஒரு நாள் அவன் மகன் தேரிலே புறப்பட்டான். முகில்கள் படிகின்ற மாடமாளிகைள் நிறைந்த வீதியிலே அரச குலக் குமரர் அவனைச் சூழ்ந்தனர மணம் நிறைந்த மலர்மாலை மார்பிலே தாழ்ந்து கிடக்க குங்குமம் பூசித் திரண்ட தோளுடையவனாய் அவன் அந்நேரத்தில் பொலிந்த காட்சி மிகவும் அழகுடையதாய் இருந்தது.

மன்னன் மகனை மங்கல, வாழ்த்துப்பாடல் இசைக்கும் பாவாணர் ஒருபால் நின்று துதித்துப் பாடித் தொடர்ந்தனர் நின்று வணங்கும் சூதரும் இருந்து வணங்கும் மாகதரும் அவனோடு உலாவிற் கலந்து சென்றனர் மணங்கமழும் கூந்தல் மங்கையர் அவனைத் தொடர்ந்து விரைந்து செல்வதால் அவர்களின் வெண்மையான வளையல்கள் கழன்று வீழ்ந்தன முரசங்களும் சங்குகளும் பேரொலி எழுப்பி முழங்கின, இவ்வாறு அரசிளங்குமரன் சென்ற அழகிய மாடவீதி ஆரவாரமும் ஆனந்தமும் மிகுந்து விளங்கியது.

அவ்வேளையில் ஒப்பில்லாத பெரிய தருமமானது இரக்கத்தை விடுத்துச் சேனைப் பெருக்கினனான மனுச்சோழனின் நடுக்கமில்லாததிண்ணிய உள்ளத்தின் தன்மையினைச்சோதிக்க எண்ணி வந்தது போன்று மனிதர்கள் தனது வரவைக் காணாதவாறு அழகிய நல்ல பசுவின் இளங்கன்று ஒன்று அத்தெருவினூடே வந்தது.

ஈன்ற அண்மைக்கால இளங்கன்றான அது அபாயம் நிறைந்த அவவீதியூடாகச் சென்று சிவந்த பொன்போலும் ஒளி உமிழ்ந்த தேர்ச்சில்லினிடையே அகப்பட்டு விரைவாக இழுக்கப்பட்டு விண்ணுலகை அடைந்தது (இறந்து போயிற்று) இக்காட்சியைக் கண்டு உருகிய தாய்ப்பசு துன்பம் மிக்கதாய் ஓடிவந்து வெம்பியது. அலறியது சோர்ந்தது உடல் நடுங்கித் தரையில் விழுந்தது.

அந்தக் காட்சியைக் கண்ட அரசகுமாரன் 'ஆபத்து இங்கு வந்தது' என்று சொல் தடுமாறினான்: நெஞ்சிலே துயரம் மிக வருந்தினான்: அறிவு மயங்கப் பெற்றான்: பசுவும் கன்றும் இன்று எனது நல்லுணர்வாகிய பெருமையினை அழித்து விட்டன. என் செய்வேன்? என்று தேரிலிருந்து கீழே விழுந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லலுறுகின்ற தாய்ப்பசுவின் நிலைகண்டு அரிய உயிர் பதைபதைக்கச் சோருவான்: நிலத்திற் கிடந்த கன்றை நோக்கி நெடுமூச்செறிவான் மலரும் இயல்பினதான உலகைக் காக்கும் மனு என்னும் பெயரைத் தனதாக்கிய என் அரசனுக்குப் பழியுண்டாக யான் ஒருவன் பிறந்தேன் என்று புலம்புவான்.

'எனக்கு வந்த இப்பழியினை, வேதம் வல்லவரும் மெய்ம்மையானவருமான அந்தணர் விதித்துள்ள பிராயச்சித்த முறையிலே போக்குவது தருமமானால், எனது தந்தை அறிதற்கு முன்னமே அவ்வாறு செய்வேன்' என்று தனது நெஞ்சிலெழுந்த பெருங் கவலையைப் போக்க அவன் அந்தணனிடம் சென்றான்.

***80. தனது உயிர் போன்ற கன்றினை இழந்த பசு மனுச் சோழனது அரண்மனை வாயிலை அடைந்து தனது கொம்பினாலே ஆராய்ச்சி மணியில் கயிற்றை இழுத்து அடித்த காலை அந்த மணி ஒலி எவ்வாறிருந்தது?***

மனுவேந்தனின் குலத்துக்கு ஏற்பட்ட பழியாகிய பறையின் முழக்கமோ ஆர்ப்பரித்து எழுகின்ற பாவத்தின் ஒலியோ. மன்னனின் வழியிலே தோன்றிய செல்வமைந்தனின் உயிரைக் கவரவரும் கூற்றுவன் வாகனமான எருமையின் கழுத்துமணி ஆர்ப்பரிப்போ என்று சொல்லத் தக்கவாறு ஆராய்ச்சி மணியினது ஒலி வந்து மன்னனது செவியில் விழுந்தது,

***81. காவலர் பசுவின் செய்கையைக் கூறிய பொழுது மன்னன் வருந்திய பசுவை நோக்கி, 'என்னிதற்கு உற்றது' என்று அமைச்சரை இகழ்ந்து நோக்கக் காரணம் என்ன?***

மனுச்சோழனின் செங்கோல் காரணமாக அவன் நாட்டு மக்கள் அன்று வரை எவ்விதகவலையும் இன்றி இன்பமாக வாழ்ந்து வந்தனர். ஆராய்ச்சி மணியை எவரும் அடித்துத் தமக்கு அநீதி நிகழ்ந்ததாக முறையீடு செய்யும் நிலை அந்நாட்டில் இருந்ததில்லைஆனால் இன்று ஆராய்ச்சிமணியை அடித்ததோ ஒரு வாயில்லாப்பிராணி அது தனக்கு அநீதி நிகழ்ந்ததாகக் கண்ணில் நீர் பொழியக் குறிப்பாக முறையிட்டு நிற்கின்ற தென்றால் அமைச்சர் இருந்தென்ன? மன்னனின் மனுநீதிக்கு இதனை விட வேறு அறைகூவலும் வேண்டுவதோ? இத்தகைய எண்ணங்கள் சிந்தனையில் ஒரு கணத்தில் படையெடுத்ததாலேயே அவன் அமைச்சரை இகழ்ந்து நோக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. **'வளவநின்புதல்வன்' எனத் தொடங்கும் பாடலின் பொருளை உமது வசன நடையிலே எழுதி அதில் நீர் காணும் சிறப்புக்களையும் விளக்குக.**

'வளவனே! உன் மகன் மணிகள் கட்டிய பெரிய தேர் ஒன்றிலே ஏறிக்கொண்டு அளவில்லாத தேர்ப்படை தன்னைச் சூழ்ந்துவர அரசர் உலாவும் இராசவீதியிலே போனான் அது காலை இளைய பசுக்கன்று ஒன்று அவனது தேர்ச்சில்லிடையே புகுந்து இறந்தது இதனால் தளர்ச்சி அடைந்த தாய்ப்பசு வந்து இச் செய்கையினை (ஆராய்ச்சி மணியைக் கொம்பினால் அடித்தலாகிய செய்கையினை) நிகழ்த்தியது' என்று (அமைச்சன்) சொன்னான்.

மனுச்சோழன் நீதி வழங்குவதில் மிகவும் கடுமையானவன். எனினும் குற்றம் இழைத்தவன் தன்மகன் என்றால் அவன் மனம் ஓரளவாயினும் இளகாதா? இதனை எண்ணிய அமைச்சன்.

நின்புதல்வன்

என்று ஆரம்பிக்கின்றான்.

அடுத்து அரசகுமாரன் சென்ற தேர்பற்றியவருணனை வருகின்றது

மணிநெடுந் தேர்மேல் ஏறி

மணி என்பதற்கு அழகு என்று பொருள் கொள்ளலாமாயினும்இங்கு 'மணிகள் கட்டிய தேர்' என்று கொள்வதே பொருந்தும். மணியின் ஓசையைக் கேட்டதும் மனிதர்களோ பிராணிகளோ விலகிச் செல்வது இயற்கை ஆகவே அரசகுமாரன் சென்ற தேர் விபத்துகளுக்கு இடமளியாத முன்னெச்சரிக்கையுடனேயே போயிற்று என்பதைக் குறிப்பாக எடுத்துரைத்து அதன்மூலம் அவனது குற்றத்தைக் குறைக்க முற்படுகின்றான் அமைச்சன். தொடர்ந்து வரும்

*அளவில் தேர்த்தானை சூழ அரசுலாம் தெருவில் போங்கால்*

என்ற பாடல் அடி கருதத்தக்கது. அளவில்லாத தேர்ப்படை சென்றதால் அரசகுமாரனின் நெடுந்தேர் நினைத்தவுடன் நிறுத்தக்கூடிய வாய்ப்பைப் பெற்றிராது. எனவே கன்று வந்து தேர்ச்சில்லில் விழ முன்னரே தடுப்பதும் அவனுக்கு இயலாது போயிருக்கும்.

அன்றியும் அது அரசு உலாவும் தெரு. அந்தப் பசுக்கன்று ஒன்று இடையிற் புகும் என்று யார் எதிர்பார்த்திருக்க முடியும்? விபத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கி மரணமான கன்று எத்தகையது? இளைய ஆன் கன்று

இரைச்சலைக் கண்டு விலகித் தப்பி ஓட அதற்குத் தெரிந்திருக்காது! இளங்கன்று பயம் அறியா தல்லவா? அது தானே இடைப்புகுந்து இறந்தது. கொல்லப்படலில்லை

கன்று இறந்த நிகழ்ச்சியை முறையிட வந்தது எது?
தளர்வுறும் இத்தாய்

பாசம் கண்ணை மறைக்கத் தாய்க்கு நியாயம் பற்றிய உணர்வே ஏற்பட வழியில்லை.ஆக வளவனின் (சோழமன்னனின்) மகன் கன்றின் மரணத்திற்குக் காரணமாயிருந்த போதிலும். அவனின் எவ்வித குற்றத்தையும் பாரித்தல் இயலாது என்பதைக் குறிப்பாகப் பெற வைத்து சுருக்கமாகவும் படிப்படியாகவும் விஷயத்தை மனத்திற் பதியுமாறு அமைச்சன் எடுத்துரைத்த முறைமை இப்பாடலின் தனிச் சிறப்பாகும்.

**83. 'மனுச்சோழன் நீதி என்ற மயிர்ப் பாலத்திலே அணுவளவும் விலகாது நடந்தவன்' என்ற உண்மையைச் சேக்கிழார் அடிகள் எவ்வாறு பெற வைக்கின்றார்? விளக்குக.**

பசுக்கன்று தன் மைந்தனின் தேர்ச்சில்லில் அகப்பட்டு இறந்ததாகிய செய்தியைக் கேள்வியுற்றதும் மன்னன் அடையும் பெருந்துயரத்தின் மூலமும், பிராயச்சித்தம் செய்வதனால் குற்றத்திலிருந்து தவிரலாம் என்ற அமைச்சரது அறிவுரையை ஏற்காது கூறிய அவன் கூற்றுக்களின் மூலமும் பெறவைக்கிறார். அவை வருமாறு:

(அ) அமைச்சன் கூறியவற்றைக் கேட்ட மனுச் சோழனுக்குப் பசு அடைந்த துயரம் யாவும் ஒன்று திரண்டு கொடியவிஷம் தலைக்கு ஏறியது போன்று உள்ளத்திலே வேதனையானது மிகுதியாய் எழுந்தது. 'இங்கு இந்த வினை எவ்வாறு விளைந்தது?' என்று அவன் இடருறுவான்: இரங்குவான்: ஏங்குவான் என் செங்கோல் செவ்விதே!' என்று மனம் மருள்வான்: மருட்சியின் பின் தெளிவு பின் மருட்சி என்று ஒரு முடிவிற்கும் வராது தடுமாறுவான்.

'நிலைபெற்ற உயிர்களைக் காத்து இவ்வுலகம் யாவர்க்கும் பொது என்ற சொல்லினை நீக்கி அறத்திலே நீடிப்பதான என் நெறி நன்று நன்று'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவன் துன்புறுவான் தன் கன்றைக் காணாது வருந்தும் பசுவினது முகத்தினைக் கண்டு சோருவான் இவ்வா று அந்த நிலையிலே அரசன் அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை.

(ஆ) அமைச்சர்கள் செயல் கண்டு பொறாது அவன் பாதங்களிலே வீழ்ந்து வணங்கினர் 'அரசே! தாங்கள் மனம்தளர்வது இதற்குத் தீர்வு ஆகாது. மலர்மாலை தரித்த தங்கள் மகனை வேதம் உணர்ந்த அந்தணர் பசுவதை புரிந்தவர்கு விதித்த பிராயச்சித்த முறையிலே வழிப்படுத்தி நிறுத்துதலே தருமம்' என்று அவர்கள் உரைத்தனர்.

இதுவே வழி என்று நீங்கள் சொல்வது தனது இளங்கன்றினை இழந்து வருந்தி அலறுகின்ற தாய்பசுவின் பிரிவு நோய்க்கு மருந்தாகுமோ? நான் என் மகனை இழக்கப்போகின்றேன். என்பதால் நீவிர்யாவீரும் சொல்லிய இந்தப் பொய்யுரைக்கு நான் இசைவேனாயின் தருமம் சலிப்படையாதோ?

உலகினைக் காக்கும் காவலன் எனப்படுபவன் நிலையான உயிரைக் காக்கும் காலத்தில் அவ்வுயிருக்குத் தன்னாலும் தன் பரிசனத்தாலும் குறைவுடைய பகைவராலும் கள்வராலும் பிற உயிர்களாலும் ஏற்படும் ஐந்து வகைப் பயங்களினின்றும் காப்பளித்தாலன்றோ அவன். அறத்தைக் காப்பவனாவான்?

'என் மகன் செய்த கொலைப் பாதகத்திற்குப் பெரிய தவங்களாகிய பிராயச்சித்தம் செய்ய உடன்பட்டு அதே வகைக் கொலையினை அந்நியன் ஒருவன் செய்கையில் அவனைக் கொல்ல நான் முற்படலாமோ? அவ்வாறு முற்படுவேனாயின் பழைமையான மனுவின் தரும நூலானது மனுச்சோழனான என்னாலேயே அழிவுண்டாகாதோ? இத்தகைய வசைச் சொல்லினை இந்த நிலவுலகிலே நான் பெறவே நீங்கள் இவ்வாறு சொன்னீர்கள்'

மன்னன் இகழ்ந்து உரைத்ததை எதிரில் நின்று கேட்ட அமைச்சர்கள் 'நன்னெறி ஒழுகும் இவ்வுலகிலே இன்று நிகழ்ந்தது போன்று முன்னரும் நிகழ்ந்ததுண்டு அவ்வேளையில் கொல்லுவித்தல் மரபாகக் கொள்ளப்படவில்லை, வேதம் கூறிய முறைமைப்படி தருமம் புரிதலன்றோ தொன்று தொட்டு நிலவும் நெறிமுறை' என்றனர்

இவ்வாறு வணங்கிக் கூறிய அமைச்சர்களின் முகங்களை நோக்கிய உண்மை நெறியினை ஆராய்ந்துணர்ந்த மனுவேந்தன் நெருப்பில் தோய்ந்த தாமரைபோல வெகுண்ட முகத்தினனாய் 'நீங்கள் இவ்வாறு பிழை கூறினீர்கள். வேத நெறியிலே நீங்கள்சொன்ன பிராயச்சித்த முறைகள் இருக்கட்டும் இதுகாலவரை எந்த உலகிலே எந்தப்பசு இவ்வாறு துன்பத்துடன் வந்து நெடு மூச்செறிந்து கதறி ஆராய்ச்சி மணியினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தது? அதைச் சொல்லுங்கள். இந்திரனும் திருமாலும் பிரமனும் போற்றிப் புகழ்ந்து வணங்க வீதிவிடங்கப் பெருமானார் இருந்தருளும் திருவாரூரிலே பிறந்த உயிரைக் கொண்றான் என் மகன் ஆகையினால் அவனைக் கொல்வதே மிகுதியும் துணிந்து நிகழ்த்தத்தக்கதாகும் இதனை அறிந்து கொள்ளுங்கள்' என்றான்.

அரும்பத விளக்கம்

துன்னும் - நெருங்கும், வழிமுதல்- குலமுதல்வன், மாண - சிறக்க, கூர - மிகுதியாக, வென்றி - வெற்றி, தயா - இரக்கம், நெடிதுயிர்த்து - பெருமூச்செறிந்து, கேளா- கேட்டு, கொந்து -(பூங்) கொத்து, இழிந்து -இறங்கி, கோ- பசு, விளம்பீர்- சொல்லீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. கர்ணனும் கும்பகர்ணனும்

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை

### *84. தமிழ்நாடு செய்ந்நன்றி அறிந்து ஒழுகுதலைச் சிறந்த அறமெனக் கடைப்பிடித்த நாடுகளில் தலைசிறந்தது என்பதற்குப் பேராசிரியர் சேதுப்பிள்ளை காட்டும் நூலாதாரங்களை விளக்குக.*

ஒருவர் செய்த நன்றியை மறப்பது நல்லது அன்று. நன்று அல்லாததை அது செய்த அன்றே மறப்பது நன்று. உதவி வேண்டப்படும் காலத்திலே செய்யப்படும் நன்மை சிறியதாயிருக்கலாம் ஆனால் அதன்பயனை ஆராயும் பொழுது அது உலகினும் அளவாற் பெரியதாகும் ஒருவன் செய்யும் நன்றியானது தினையளவு சிறியதாயினும் அதன் பயனை உணர்ந்தோர் பனையளவாகக் கொள்வர். எந்த நன்மையை அழித்தவர்க்கும் பிராயச்சித்தம் உண்டு. ஆனால் செய்ந் நன்றியைக் கொன்றவர்க்குப் பிராயச்சித்தமே இல்லை என்பன திருவள்ளுவர் கூறிய அறிவுரைகளாகும்.

அன்பிலே சிதைவுபடாத தாய், தந்தை, குரு, தெய்வப் பதவியிலுள்ள அந்தணர், பசு, குழந்தைகள், பெண்கள், ஆகியோரை வதைத்தவர்க்கும் அதனால் உண்டாகும் பாவத்திலிருந்து தவிர்ந்து கொள்ளும் திறன் ஏற்படலாம். ஆனால், தமக்கு ஒருவர் செய்த அளவில்லாத உதவியினை மறந்தவர்களுக்கு அக் கொடிய பாவத்தினை ஒளிப்பதற்கான தந்திரமும் உண்டோ? என்பது கவிச்சக்கரவர்த்தி கம்பர், திருக்குறட் சாரத்தை உள்ளடக்கிக் கூறியுள்ள அறிவுரையாகும். இவற்றின் மூலம் செய்ந் நன்றி அறிந்து ஒழுகலிலே தமிழ்நாடு பெற்றிருந்த முதன்மை நன்கு புலனாகின்றது.

### *85. தாய், தந்தை, குரு, அந்தணர், பசு, பாலர், மாதர், ஆகியோரின் பெருமைகளைப் பேராசிரியர் எடுத்துக் கூறும் திறத்தினை விளக்குக.*

'தாயும் தந்தையும் முன்னெறி தெய்வங்கள்', என்கின்றார். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற ஔவையாரின் அமுதவாக்கே அது தெய்வத்தை அறியமுன் குழந்தை அறிந்து கொள்வது தாய் . தந்தையரையே எனவே, அவர்களே முதலில் வணங்குதற்குரியவர்கள் என்ற கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிலும் ஏற்கத்தக்கதே. ஆசான் என்பதன் பொருள் ஆசு ஆகிய ...த்தைப் போக்குபவள் என்பதாகும். இங்குக் குற்றம் என்பது அறியாமையே அவ்வுண்மையைப் பேராசிரியர் அறியாமையை அகற்றும் ஆசான் எனற சொற்றொடர் மூலம் விளக்குகின்றார்.

அந்தணர் என்பது அழகிய இரக்கமுடையோர் எனப் பொருள்படும் அவர்கள் தருமத்தை உணர்ந்து அதன் வழி நடப்பவர்களாதலால் அறம் திறம்பாத அந்தனர் என்றார், பசுபால், சாணம் முதலியவற்றைத் தருவது பசுவின் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் (கோசலம்- பசுவின் சலம், கோமயம்- சாணம்) என்பன பஞ்சகௌவியம் எனப்படும். சைவமக்கள் பஞ்சகௌவியம் கொண்டு தமது இல்லத்திலும் தம்மிலும் உள்ள தொடக்கினை நீக்கிக் கொள்வர் ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சு ஆடுதல், என்பது அப்பர் சுவாமிகளின் திருவாக்கு அவற்றையெல்லாம் உள்ளடக்கிப் பயன் உவந்து அளிக்கும் பசு என்று கூறப்பட்டது பெண்கள் மென்மையுடையோர். ஆண்களைப் போலக் கடினமாக உழைக்கவோ இடர்களைத் தாங்கவோ அவர்களால் இயலாது எனவே பேராசிரியர், மெல்லியல் வாய்ந்த மாதர் என்றார் இவர்களை வதைபுரி குற்றம் செய்தாலும் என்றது வதை செய்யக்கூடாது என்பதையே குறிப்பாகப் பெறவைக்கிறது. இவ்வதையிலும் நன்றி கொல்வது மிகக் கொடுமையான பாவம் என்பதை வலியுறுத்தவே வள்ளுவரும், கம்பரும் இவ்வாறு கூறினர்.

**86. *பின்வரும் பாடலின் சந்தர்ப்பங் கூறுக. பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.***

(1) கற்றவர்க்கும் நலன் நிறைந்த
கன்னியர்க்கும் வண்மைகை......................
..............................................................
..............................................................

பாண்டவர், கௌரவர் ஆகியோர் படைக்கலப் பயிற்சியைத் துரோணரிடம் பெற்றுத் தேர்ச்சி அடைந்த காலை அவர்களது தேர்ச்சியை வெளிப்படுத்தும் அரங்கேற்றத்தின் போது எல்லாரிலும் அதிக திறமையைத் தனது வில்லாற்றல் கொண்டு வெளிப்படுத்தினான் அருச்சுணன் யாவரும் அவனது பேராற்றல் கண்டு வியந்து கொண்டிருந்த வேளையிலே துரோணரின் மைத்துனரும் பாண்டவ கௌரவர்களின் முதற் குருவுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபாசாரியார் அரங்கில் வந்து 'அருச்சுனனோடு போட்டியிட எவராவது முன் வருவார்களா?' என்று அறை கூவினார். அந்த அறைகூவலை ஏற்றுக் கர்ணன் தான் அருச்சுனனிடம் போட்டியிட முன்வருவதாய் எழுந்தான். கிருபாசாரியார் கர்ணனைத் தேரோட்டியின் மகன் என இழித்துரைத்து அரசகுலத்தினனல்லாத அவனோடு அருச்சுனன் போட்டியிட முன்வரான் என்றார். அவவேளையில் கற்றோர், கன்னியர், வள்ளல்கள், வீரர் முதலியோர்க்குச் சாதி பேதம் பேசலாகாது என்றும் அவர்கள் யாவரும் ஒரு சாதி என்றும் கர்ணன் சார்பில் அவனை ஆதரித்துத் துரியோதனன் கூறிய கூற்றே இப்பாடல்.

(2) கற்றுவல்ல அறிஞர்கள், அழகு, நற்குணம் முதலாம் நலங்கள் நிறைந்த கன்னிப்பெண்கள், வண்மையிலே சிறந்த கொடையாளிகள், வீரர் என்று உயர்ச்சி பெற்றோர். அரச வாழ்வினைத் தாமாகத் தேடிக்கொண்ட மன்னர்கள், குற்றமில்லாத உண்மை ஞானிகள், தவமுனிவர் என்போர்க்கும் ஒன்றே சாதி, அவர்களுக்கு நன்மை, தீமை என்று(சாதி அடிப்படையிலே) பாகுபாடில்லை.

### 87. குந்திதேவியும் கர்ணனும்சந்தித்த வேளையில் அவர்கள் பேசிக்கொண்டவற்றை உரையாடல் வடிவிலே தருக.

குந்தி : என் மகனே உன் இளையவராகிய ஐவரும் உனது மலர்ப்பாதங்களை அன்பின் காரணமாய் வணங்கி மனம் ஒத்து அன்புரிமையோடு உனக்குத் தொண்டு செய்வர் நீ ஒப்பற்ற செங்கோலோச்சி நாட்டை ஆள்வாயாக அரசர்களெல்லாம் உனது தலைவாயிலிலே வந்து உன்னை வணங்கவும், நீ ஆண்மையும் செல்வப் பேறும் பெறவும் குருகுலத் தலைவர்க்குத் தலைவனாய் விளங்கவும் எம்முடன் வந்து சேர்வாயாக. இத்தகைய உயர் வாழ்வில் சிறப்பதே உனக்குக் கடன்.

கர்ணன்: தாயே, வலிமை தருவதாகிய வேற்படையினை உடைய அரசர்க்கு எல்லாம் அரசன் துரியோதனன், அவனுக்காகப் போர் முனை சென்று செஞ்சோற்றுக் கடன் கழிப்பதே இனி எனக்குப் புகழ்: அதுவே என் கடமை எனக்குரிய தருமமும் அதுவே.

### 88. கர்ணனது செய்ந்நன்றி மறவாப் பண்பினையே பேராசிரியர் எவ்வாறு புகழ்கின்றார்? அவரது கூற்றினை அவரின் சொற்களிலேயே தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டவர் தன் தம்பியர் என்று கருதிப் பரிவு கொள்ளாது, தாயின் மொழியைப் போற்றுதலே தக்கதென்றும் எண்ணாது. செய்ந்நன்றியறிதலே செம்மை சான்ற அறம் எனத் துணிந்து, அவ்வற நெறியில் நின்று அமர்க்களத்தில் ஆவிதுறந்த கர்ணனது அருங்குணம் போற்றுதற்குரியதன்றோ?'

### 89. கும்பகர்ணன் யாவன்? அவன் எத்தகையவன்?

இலங்கை வேந்தனாகிய இராவணனுக்குத் தம்பி கும்பகர்ணன் அவன் தவம் செய்து பெற்ற வரத்திலும் வலிமையிலும் சிறந்தவன் : யமனையும் வெற்றி கொண்ட வீரன் : தருமநெறியை ஆதரிக்கும் நற்பண்பு வாய்ந்தவன் : சீதையைச் சிறை வைத்தது அடாதசெயல் என்பதைத் தன் தமையனுக்கு எடுத்துரைத்தவன்: பிறருடைய மனைவியை விரும்பிய அண்ணனின் தவறினை இடித்துரைத்துத் திருத்த முயன்றவன். ஆனால் அவன் தமையனோ சீதை மீது நீங்காத மோகம் கொண்டதால் அவனைத் திருத்துதல் முடியாது என்று கண்ட பொழுது அவனுக்காகப் போர் செய்து மாள்வதே தனக்கு உகந்த செயல் என்று தீர்மானித்தான்: அவ்வாறே போர்க்களம் சென்று தமயனுக்காக உயிர் கொடுத்துப் புகழுடன் விண்ணகம் புகுந்தான்.

### 90. போர்க்களத்தில் இராமனால் அனுப்பப்பட்டுக் கும்பகருணனை இராமன் பக்கம் சேர்க்க வந்த விபீடணனுக்கும் கும்பகருணனுக்குமிடையே நடந்த உரையாடலைத் தருக. இவ்வுரையாடல் மூலம் கும்பகர்ணனின் நற்பண்பு புலனாகும் வகையினை விளக்குக.

விபீடணன்: அண்ணா. இராமன் எனக்கு அடைக்கலம் அளித்தான் அவன் உனக்கும் அடைக்கலம் அளிப்பான் நிலையில்லாத பிறவியாகிய நோய்க்கும் மருந்தாவான். எனக்கு அவன் தரவுள்ள இலங்கை அரசினையும் செல்வத்தினையும் நான் உனக்கே தருவேன் எனவே தீவினைகளைச் செய்யும் அண்ணனைத் துறந்து அறநெறி நடக்கும் இராமனை வந்து சேர். நீ அறிஞன், உனக்கு உகந்த செயல் இதுவே.

கும்பகருணன்: தம்பி, இவ்வுலக வாழ்க்கை நீரில் எழும் குமிழி போன்றது இதனை விரும்பி இராவணன் எனக்குச் செய்த நன்றியை மறப்பேனோ: அவன் என்னை நீண்ட நாள் வளர்த்தான்: இன்று போர்க்கோலம் செய்து என்னைப் போருக்கு அனுப்பியுள்ளான்: அத்தகைய இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேந்தனுக்கு உயிர் கொடாமல் திரும்பிப் போகேன்: பகைவர் பக்கமும் சேரேன். இலங்கையின் செல்வத்தை விரும்பி என் அண்ணனது உயிரைக் கவரும் பகைவனுக்குப் பணிந்து இரந்து அரசபதவி பெற்றிருத்தல் எனக்கு உகந்ததன்று நீ கூறிய நீதிமுறை உனக்கே தக்கது.

தன் தலைவன் தகாத செயல் செய்து நெடும்பகை தேடினான் என்று நன்கு அறிந்திருந்தும் இராமவீரனது இணையற்ற கணையால் நான் ஆவி துறப்பது திண்ணம் என்று தெரிந்திருந்தும் ஆவியையும் அளவில்லா செல்வத்தையும் வெறுத்து. தமையன் பொருட்டு உயிர்துறந்த வீரனது மனநலம் வியந்து யோற்றுதற்குரியதன்றோ?

### அரும்பத விளக்கம்

தொன்று தொட்டு- பழங்காலம் தொடக்கம், தமிழ் மறை–தமிழ் வேதம் (திருக்குறள்), ஞாலம்- உலகம், மகற்கு - மகனுக்கு (மனிதனுக்கு), நாயனார்- இங்கு வள்ளுவரைக் குறிக்கும், வதைபுரிகுநர்- சித்திரவதை செய்வோர், உபாயம்- தந்திரம், எஞ்ஞன்றும்- எக்காலத்தும், வந்தித்து - வணங்கி, இருமுதுகுரவர்- தாய் தந்தையராகிய குருமார் (வணக்கத்திற்கு உரியோர்), செந்தண்மை- கருணை, பேழை- பெட்டி,கொற்றவர் - வெற்றி வேந்தர், ஏற்றம் - மேன்மை, மோந்து - முத்தமிட்டு, மதலாய்- பிள்ளாய் செய்யகோல்- செங்கோல், ஓச்சி–செலுத்தி, குருகுலாதிபர்- குரு + குல + அதிபர்) குருவமிசத்தலைவர், செஞ்சோற்றுக்கடன் - உண்ட சோற்றுக்கான நன்றிக் கடன், ஆடல் கொள்ளல்–வெற்றி கொள்ளல், பிறன்மனை நயந்த - பிறனின் மனைவியை விரும்பிய, நீர்மை - பண்பு, இயல்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. இலங்கை வளம்

***91. 'இலங்கைவளம்' பாடிய சோமசுந்தரப்புலவர் பற்றி யாது அறிவீர்?***

யாழ்ப்பாணத்து நவாலியிலே கதிர்காமர், இலக்குமிபிள்ளை என்போருக்குப் புதல்வராய்த் தோன்றிய சோமசுந்தரப்புலவர் (1878–1953) தமது வாழ்நாளிலே பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியவர் இவற்றுட் பெரும்பாலானவை சைவசமயம் சார்ந்த பத்திப்பாடல்களே அவற்றோடு சிறுவர்க்கான பாடல்கள், சிறுவர் செந்தமிழ், இலங்கை வளமும் தாலவிலாசமும், மரதன் அஞ்சலோட்டம், தந்தையார் பதிற்றுப் பத்து ஆகிய சமயம் சாராத கவிதை நூல்களும், உயிரிளங்குமரன் என்ற நாடக நூலும்சாவித்திரி சரிதம் என்ற பாடநூலும், கந்தபுராண தத்துவ விளக்க நூலும் இவரால் எழுதப்பட்டனவாகும். சின்னத்தம்பிப் புலவருக்குப் பின் யாழ்ப்பாணத்திலே தோனிறி புலவர்களின் வரிசையிலே தங்கத் தாத்தா வாகிய சோமசுந்தரப் புலவருக்குச் சிறப்பான இடம் உண்டு புலவரின் இலங்கைவளப் பாடல்களைப் படித்துச் சுவைத்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

**இலங்கைவளம் கேளாத செவியென்ன செவியே**
**இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியே.**

*எனப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.*

***92. சோமசுந்தரப் புலவரின் 'இலங்கைவளம்' பாடல்களிலே பெருமளவு இடம் பெறும் அணி எது? உதாரணங்கள் தந்து விளக்குக.***

பெரும்பாலும் இடம்பெறுவது உவமை யணி உதாரணங்களாக நீர்வளம் என்ற பகுதியின் முதல் ஐந்து பாடல்களையும் நோக்கலாம்.

| | உவமானம் | பொதுத்தன்மை | உவமேயம் |
|---|---|---|---|
| { | தளர்ந்து அவிழ்ந்த பஞ்சு | தூயமென்மை நெகிழ்ச்சி | விரும்பியவெண் முகிற்கூட்டம் |
| | எல்லாள மன்னன் இதயம். | தூய்மைப்பண்பு | |
| 2. | ஈயாத உலோபிகள் கொடை | அளியாமை | உவர்க்கடல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 3. உலோபிகளிடம் கவர்ந்து ஏழைகளுக்கு வழங்கும் வள்ளல் | கவர்தல் வழங்கல் (மழை) | கடல் நீர் உண்டு எழும்மேகம் |
| 4. கடுகணாவைக் குகையின் உள்ளிடம் | இருளுதல் (சூல் கொள்ளல்) | மழை மேகம் |
| 5. ரியனை எள்ளி நகையாடுதல் | பரிகசித்துச் சிரித்தல் | மேகம் மின்னி முழங்குதல் |
| 6. யானை, கன்மலை, காண்டமிருகக் கூட்டம் இராவணனின் பெரிய மூலபலப் படை | பெருமளவில் பொழிதல் | மழைசொரிதல் |

***93. மழை சொரிகின்ற காட்சியைப் புலவர் வருணிக்கு மாற்றினை விளக்குக.***

சிவனொளிபாதமலை, சொல்லப்படும் பீதுருதாலகாலமலை கதிரைமாமலை, உயர்வான வன்னி மக்களுடைய காடு ஆகியவற்றிலே, (பார்வைக்குப் பயன்படாத) கண் போலும் புள்ளிகளையுடைய தோகைமயில்கள் மகிழ்ந்து அகவவும். பாம்புகள் அஞ்சித் தமது புற்றுக்களில் ஒடுக்கமாகவும், கார்த்திகைப்பூ மலரவும், வியர்வையோடு கூடிய வெம்மை அகலவும். காற்றுக்குளிரவும் (மேகங்கள்) வயிறுளைந்து மழையாய்ப் பொழிந்தன கொடை மடம் பட்ட குமணமன்னன், பெருஞ் சித்திரனார் என்ற புலவருக்குக் கருணையோடு வழங்கிய கொடையாகிய வெள்ளம் மடையுடைத்துப் பாய்ந்தது போல மழையின் பெருக்கம் விளங்கியது.

கொடைமடம்படுதல் – இன்னாருக்கு இன்ன பொருளை இன்னஅளவிலே கொடுத்தல் வேண்டும் என்று திட்டமிடாது எவர்க்கும் எதனையும் வாரி வழங்கல் மடம் – மடமை, கொடையில் மடைமை, வள்ளலுக்குப் பெருமை.

***94. நீரருவி பாயும் காட்சி எவ்விதம் வருணிக்கப்படுகின்றது?***

புத்தமாமுனிவர் ஆறு ஆண்டுகள் அரசமர நிழலிலிருந்து யோகஞ் செய்து தாம் பெற்ற ஞானத்தினை உலகமக்களுக்கு உபதேசமாக அருளுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று சிவனொளிபாதமலையின் அருவிபாயும். யேசு எனப்படும் ஞானபண்டிதர்(பண்டிதன், பாண்டித்தியம் உடையவன் அறிஞன்) பெரிய மலையில் ஏறி நின்று பிரசங்கம் வாயிலாகக் கூறும் நீதியைப்போலப் பெரிய முகில்கள் சொரிய அவற்றை ஏற்றுப் பீதுறுதலாகல மலை அருவி பாயும். செந்தமிழையும் சைவமாகிய அமிர்தத்தையும உண்டு அவற்றை உலகிலே மேலோங்க வைக்க நல்லூரிலே அவதரித்தருளிய ஆறுமுக நாவலரது கண்டனப் பிரசங்கம் என்று கூறும் வண்ணம் கதிரமாமலை அருவி பாயும். வயிற்றிலே உணவாகப் புகுந்தவை அருவருப்போடு வந்தியாகக் கொட்டப்படுதல் போலக் கரியதும் பெரியதுமாகிய மழை முகிலானது பெய்த கடலில் வாரி வந்து கொட்டியது. நீர் மலையினின்று இழும் என்ற ஓசையோடுபாயும்.

***95. நீரருவி ஓடி வருகையிலே நிகழ்ந்தவற்றைப் புலவர் எவ்வாறு வருணிக்கிறார். என்பதை காட்டுக.***

நீரருவி ஓடிவருகின்ற வேகத்தில் யானைகள் அஞ்சி ஓடுகின்றன நீரின் சுழியில் அகப்பட்ட அரசமரம் அடிசாய்ந்து விழுந்து வெளளத்தில் உருள்கின்றது. நாகபாம்புகள் இறக்கின்றன பெரிய புன்னைமரங்கள் பாறி விழுகின்றன.

வேங்கை மரங்கள் சரிந்து வீழ்ந்தன கோங்கு மரங்கள் முறிந்து சாய்ந்தன. சந்தன மரங்கள் சாய்ந்து விழுந்தன. மூங்கில்கள் சரிந்தன விலங்குகள் புகலிடம் தேடி ஓடின பறவைகள் (மரங்களிலிருந்து) எழுந்து பறந்தன. (இவ்வாறெல்லாம் பல நிகழ்வுகளுக்கும் இடமளித்த வண்ணம்) கீழ் விழுந்த அருவிகள் கடந்து சென்றன.

கற்பாறைகள் நீரில் அகப்பட்டு உருண்டன பள்ளங்கள் நீரால் நிரம்பி இல்லாது மறைந்தன: உயர்ந்த மேடுகள் நீரரிப்பால் தாழ்ந்து பள்ளங்கள் ஆயின: இவற்றைக் கண்ட கரடிகள் வெகுண்டு ஓடின அருவி பாய்வதால் அவற்றிடையே அகப்பட்ட பாம்புகள் மாண்டொழிந்தன.

பூக்கள் நிறைந்த குறிஞ்சி மரங்களால் நிறையப் பெற்ற மலை முகட்டிலே மழையாகிய அமுது பொழிந்ததால் உண்டான வெள்ளமானது நற்பண்பில்லாத விலைமகளிரை நாடும் இழிந்தவர் போலப் பள்ளத்தை நாடிச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வெள்ளங்கள் முல்லைப்பூக்கள் பூக்கும் மரங்கள் நிறைந்த முல்லை நிலத்திற்கும் சென்றன: தாமரை பூக்கும் மருத நிலத்திற்கும் போயின: புன்னை மரங்கள் பூப்பதாகிய நெய்தல் நிலத்தையும் அடைந்தன: எங்கெல்லாம் நீர் செல்லுமோ அந்த அந்தத் துறைகள் தோறும் சென்று நிறைந்தன.

(இந்த வெள்ளத்தில் தமக்கு வேண்டிய மீன்விருந்து கிட்டும் என்பதால்) மீன்கொத்திப் பறவைகள், மத்தளம் கொட்டுபவர்களின் கைகளைப் போன்று தமது சிறகுகளை விரித்த வண்ணம் வந்தடைகின்றன. கொக்கும் நாரையும் மீன் கூட்டத்தைக் கொணடு பறந்து மேலெழுந்து மீன்கள் அவற்றின் தொண்டைக்குள் சிக்குண்டதால் விக்கித் தவிக்கின்றன.

### 96. மணமகன் ஒருவன் ஊர்வலம் செல்வதைப் புலவர் கற்பனை செய்து வருணிக்கும் காட்சியை விளக்குக.

கலம் பொலியுமாறு மாப்பிள்ளைமார் வருகையிலே அவர்களின் னார் பக்கத்தினர் சென்று அவர்களை வரவேற்பது போலப் பொங்கி வரும் வெள்ளமாகிய புதிய மணநீரை மீன்கள் வரிசையாகச் சென்று வரவேற்கின்றன.

மணமகனையும் அவன் பக்கத்தினரையும் குடைகள் நிழற்ற வரவேற்பதல்லவா முறை? இந்தப் பணியினை நண்டுகள் அடுக்கடுக்காய் நின்று செய்கின்றன. ஆலவட்டம் பிடித்தலும் வரவேற்பு மரபாதலால் அந்தத் தொழிலினைத் திருக்கைகள் நிகழ்த்துகின்றன. மெய்காவலர் போன்று அச்சந் தரும் சுறாமீன்கள் வாள் ஏந்தி வருகின்றன மணமகளின் இருபக்கமும் கணவாய்கள் நின்று கவரி வீசுகின்றன.

வரவேற்பவர் செயல் இதுவாக, வருகின்ற மணமகன் பக்கத்தார் தம் கடமைகளைச் செய்யாது இருக்க முடியுமா? ஆமைகள் மணமக்களுக்குப் பரிசுப் பொருள்களைச் சுமந்து வருகின்றன. முரல்கள் குழல்களை ஊதுகின்றன, அலைகள் மத்தளம் முழக்குகின்றன. இவ்வாறு கடலானது தன்னை நாடிவந்த ஆற்றினை மணந்து கொள்கிறது என்று புலவர் தமது கற்பனையில் ஓர் அழகிய திருமணத்தையே நடத்திக் காட்டி விடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**97. முருகப்பெருமான்மீது புலவர் கொண்ட பக்தியை இலங்கை வளத்திலே வெளிப்படுத்தும் பாடல்களின் தொடக்கங்களைத் தருக. அப்பாடல்களின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.**

அ) 1. அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி...............

2. விதிவரைந் திடுபழைய வினைஓடி மாயும்...................

3. பூதிமணி வேதியர்கள் ஆதியடி யார்கள்.....................

1. நிலம் அதிரும்படி ஓடிவரும் மாணிக்க கங்கையிலே முழுகி எழுந்து அன்போடு 'சிவாய' என்று ஓதிய வண்ணம் அருளைவழங்கும் திருநீற்றினைப் பூசிக்கொண்டு முதிருகின்ற பக்தியோடு உள்ளம் உருகவும். கண்களில் நீரருவியானது முத்தாக உதிரவும், உடல் புளகம் கொள்ளவும். வாய் குளறவும் புதியனவாகிய தமிழ்ப் பாமாலைகளை முருகப் பெருமானுக்குச் சூட்டி 'ஒப்பில்லாத கந்தனே சுகத்தைத்தா' எனறு பாடிய வண்ணம் கதிரை மலையைக் காணாத கண்களாற் பயன் என்ன?

2. (இவ்வாறு தரிசித்து முருகனை வழிபட்டால்) விதி எழுதியனவாகிய பழைய வினைகள் ஓடி ஒழியும், வறுமையும் கொடும் பிணிகளும் துன்பம் தரும்பிறவும் தேய்ந்துபோம். சந்திரனோடு செவ்வாய்முதலான கிரகங்களது சேர்க்கைகளால் ஏற்படும் பகை ஓடி மறையும் மாறுபட்டுத் தீமை தரும் நாளும் இல்லையாகி மிகுந்த சுகத்தைத் தருவதாகிய ஞான வழி இது என்று உரைக்கும் உள்ளத்தில் அளவிலாத அன்பு ஊறும். ஆணவம் முதலாகிய மலங்களும்அணுகாது ஓடும் கதிரை என ஓதப்படும் மலையினைக் கண்ட கண்களே உண்மையான கண்கள். அம்மலையிலே முருகனுக்கு அளிக்குங் கர்ப்பூர ஆராதனையாகிய உண்மை ஒளியினைக் காணும் கண்களே மெய்யான கண்கள்.

3. திருநீற்றினைத் தரிக்கின்ற அந்தணர்கள், பழமையான தொண்டர்கள் ஆகியோர் போற்றியவாறு வரவும், மங்கல வாத்தியங்கள் பலவாக முழங்கவும், ஒளிவிரிகின்ற வெள்ளியாலான அழகிய தேரின்மீது தோன்றிச் சூரனுடைய வலிமையையும் கடலினுடைய நீரையும் தொலையுமாறும் ஆன்மாக்களை மோதி அளிக்க எழுகின்ற மாயையாகிய மலை வழியானது தூள்தூளாகுமாறும் நினைத்துஅருள் பாலிப்பதான முருகேசனின் முத்தும் மணியும் பதித்த கூரிய வேலானது வீதிவழியாகத் திருவுலா வருகின்றது, இந்தப் பழமையான உலாவினைக் காணும் விழிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்விழிகள். இவைகளே மணி எனப் பிரகாசிக்கும் விழிகள் இவைகளே ஒளி நிறைந்த விழிகள்.

***98. திருக்கோண மலையிலுள்ள கன்னியாய் வெந்நீர் ஊற்று ஒவ்வொன்றினதும் வெப்பத்தின் இயல்பைப் புலவர் எவ்வாறு வருணிக்கிறார்? விளக்குக***

காதலனைப் பிரிந்தவளின் உள்ளத்தில் வேதனை நிறைந்து உலைநீர்போலக் கொதித்தவண்ணம் இருக்கும். இதுபோன்று கன்னியாவின் வெந்நீருற்று - ஒன்று கொதித்த வண்ணம் உள்ளது.

பாட்டு ஒன்றினைப் பாடி அதற்கான பரிசினை எதிர்பார்த்திருக்கின்றான் புலவன் ஒருவன். அப்பரிசு அவனுக்குக் கிடைக்காது போனால் அவன் உள்ளம் எவ்வாறு பற்றி எரியுமோ அவ்வாறு மற்றொரு வெந்நீர் ஊற்று எரிந்து புகை கக்குகின்றது.

தான் எவ்வித தீமையும் செய்யா திருக்கவும் தன்மீது தீதும் பழியும் கூறுவதை ஒருவன் கேட்க நேர்ந்தால் அவனுடைய மனம் எத்துணைகொதிக்குமோ அத்துணைக் கொதிப்போடு உள்ளது இன்னொரு வெந்நீரூற்று.

தான் செய்த பிழைக்காகத் தன் மனச்சாட்சி தன்னை வருத்தக் கொல்லன் உலையில் எழும் தீ போலக் கொதிப்படைந்து வருந்துபவனைப் போலக் கொதித்து எழுகிறது நான்காவது வெந்நீரூற்று.

ஏழை என்ற காரணத்தால் நீதி பெறாத நிலையில் மனம் அழுந்தி வருந்துவோனது மனக்கொதிப்பினை நினைவூட்டுகின்றது ஐந்தாவதாயுள்ள வெந்நீரூற்று.

கற்பாகிய நிறையிலே தவறாத ஒருத்தியின் கற்புப் பழிக்கப்படுமாயின் அவள் மனமானது எரிமலை போலச் சீறி எழுமன்றோ? அதுபோலச் சீறித் தகித்து வெப்பம் கொண்டு விளங்குகிறது ஆறாவது வெந்நீரூற்று.

பிறருடைய மேன்மை கண்டு பொறாமை கொள்பவனின் மனத்திலே பொறாமைத் தீயானது கொழுந்து விட்டு எரிவது இயற்கை. இதுபோலக் கொழுந்து விட்டெரியும் தீயின் வெப்பத்துக்குச் சமமான வெப்பத்தினைஉடையதாக ஏழாவது வெந்நீரூற்று விளங்குகின்றது.

***99. பேராதனையின் புதிய நந்தவனமாகிய குழந்தை எத்தகையது? அதனைப் பேணி அமுதூட்டும் தாய் யார்?***

சிறப்பான எல்லா நாடுகளிலும் எல்லாப் பட்டினங்களிலும் எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்களிலும் சேர்ந்திருப்பனவான எல்லாவகைத் தாவரங்களையும், மரங்களையும், சோலைகளையும் பேர்பெற்ற பழமரங்களையும், பெரியமரங்களையும் பெருமை பொருந்திய பனைமரங்களையும், வாழைகளையும் ஓரிடத்தில் ஒன்றாகவும் நிலையாகவும்காண்பதற்கென்று பூமியாகிய பெண் வைத்துவிட்டது போல நிலைத்து நின்று பயன் உதவுவது பேராதனை என்ற நந்தவனம் அது அழகிய குழந்தை: புதியது: அதனைப்பேணி அமுதத்தினை ஊட்டிய வண்ணம் பெருகிச் செல்லும் மகாவலி கங்கையே அதன் தாய்.

### *100. 'வண்ணானின் மொழிகேட்டு' எனத் தொடங்கும் பாடலில் அமைந்துள்ள அணி யாது? விளக்குக.*

தற்குறிப்பேற்ற அணி புலவன் தனது கருத்தினை இயற்கையில் நிகழும் நிகழ்ச்சியில் ஏற்றிப்புனைந்துரைப்பதே தற்குறிப்பேற்ற அணி.

இலங்கைக் காடுகளிலே குரங்குகள் நெருக்கமாக மரங்களில் பாய்ந்து திரிவது ஓர் இயற்கை நிகழ்ச்சி. முன்னொரு காலத்தில் வண்ணான் ஒருவன் 'அந்நியனால் கவரப்பட்ட சீதையை இராமன் மீண்டும் தன் மனைவியாக்கிக் கொண்டானே' என்று இராமனைப் பழித்தான். அந்தப் பழிப்புரையைப் பொறாத இராமன் சீதையை மீண்டும் காட்டுக்கு அனுப்பி விட்டான் அவ்வாறு அனுப்பப்பட்ட சீதையை இன்றும் குரங்குகள் தேடுகின்றன என்று தமது குறிப்பினைக் குரங்குகளின் திரிதலில் ஏற்றுக் கூறுகின்றார் புலவர் எனவே இப்பாடலில் தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது.

### *101. காமர் நெடுங்காட்டினிலே காணுமொரு மாபுதினம் யாது?*

பெரிய மரைகள் காட்டில் எழுகின்ற ஓசைகளைக் கேட்டு அஞ்சித் தாவும் மரைகள் ஆகிவிட்டன. தாமரை - (தாம் + மரை) 'தாம்' என்பது 'தாவும்' என்ற சொல்லின் நடுவில் உள்ள 'வு' கெட்டுப் பாட்டோசைக்காகத் தாம் என்று வந்தது. அது 'மரை' என்ற சொல்லுடன் புணர்ந்த பொழுது தா என 'ம்' கெட்டு நின்று 'தாமரை' ஆயிற்று)

### *102. பனையின் பெருமை எத்தகையது?*

கிரக நிலைமைகள் மாறி மழையாகிய வருவாய் வற்றிவிட்டாலும் மிகக் கொடிய வறுமை வந்து மிகுதியாக வருத்தினாலும் தனது அடியிலே நிழல் அளித்து உயர்ந்த கலாநிலையம் போலக் காத்து ஓங்கும் பெருமை உடையது பனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***103. கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களின் சிறப்பினைப் புலவர் எவ்வாறு கூறுகின்றார்? விளக்குக.***

(அ) கொழும்பு: கலைகள் நிறைந்ததும், கடற்கரையில் அடைந்ததும். கப்பல்கள் நிறைந்ததும். பெருமையால் தலைமைப்பட்டினமாய் விளங்குவதும், ஒப்பிட்டு வரையறுக்கப்பட முடியாத சிறப்புக்களை உடையதும் கொழும்பு ஆகும்.

(ஆ) கண்டி: மலையகத்தின் வளங்களை இலங்கைமாதேவி காணல் வேண்டும் என்று விரும்பிய பிரமன் இந்நகரத்தினை அமைத்தனன், நிலையில் உயர்ந்து வளர்வதாகிய இந்த நகரத்தின் பெருமைகளை எடுத்துரைக்க வல்லவன் ஆயிரந் தலைகளுள்ள ஆதிசேடனே.

(இ) யாழ்ப்பாணம்: 'எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்' என்று உரைப்பர். இலக்குமி சேர்வதாகிய இலங்கைக்குச் சிரம் என அமைந்ததும், புண்ணியத்தால் ஓங்கியதும் யாழ்ப்பாணமாகும்.

அரும்பத விளக்கம்

அணியம் - (ஆரணியம் என்பது ஓசைகருதி 'அணியம்' என வந்தது) காடு, பார்த்திடாத கண் - பார்வைக்கு உதவாத கண் (கண்போன்றபுள்ளி), குக்கி - வயிறு, பரத்தை - விலைமாது (தாசி), பொருவில் - (பொரு + இல்) - ஒப்புஇல்லாத, காதும் - (கதுவும்) பற்றி அழிக்கும், 'மலரயன் - தாமரைப்பூவில் அமர்ந்திருக்கும் பிரமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. கலையின் விளக்கம்

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை

***104. பாரத நாட்டினருக்கு உரிய பெருமை யாது ?***

அழகிய பொருளால் என்றும் அடைவது ஆனந்தமே என்ற ஆங்கிலக்கவிஞர் ஒருவரின் கருத்தினை என்றோ உணர்ந்து கண்ணினைக்கவரும் அழகையும் (திருமகள்) கருத்தினைக் கவரும் அறிவையும் (கலைமகள்) தெய்வ நலங்களாகக்கருதி வழிபட்டமையே பாரதநாட்டினருக்கு உரிய பெருமை.

***105. வெள்ளைக் கலையுடுத்து. வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக்கமலத்தே வீற்றிருக்கும் கலைமகளைப் போற்றும்பாரதியாரின் பாடல்களிலே கலைமகள் பற்றிக்குறிக்கப்படும் பகுதியை மாத்திரம் எழுதுக.***

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள். (வெள்ளைத்)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை உற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்

(வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வமாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
விந்தை ஓர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகம் செய்வோர்
வீர மன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடும் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம் (வெள்ளைத்)

***106. மேலே குறித்தவற்றிலே கவின் கலைகள் எவை? பயன் கலைகள் ஹஎவை? இரண்டிற்குமுள்ள வேறுபாடு யாது?***

(அ) கவின்கலைகள் :-கவிதை, வீணைஇசை, பாட்டு, சித்திரம்
(ஆ) பயன் கலைகள் பலவகைத் தொழில்கள் (கொல்லவேலை சிற்பவேலை, தச்சுவேலை முதலியன)

கவின் கலைகளாவன கண்ணையும் செவியையும் கவர்ந்து அவற்றின் வாயிலாக மனத்திற்கு இன்பம் ஊட்டுவன பயன் கலைகளாவன மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பலதரப்பட்ட பொருட்களை ஆக்கிக் கொள்வதற்குச் சாதனமானவை.

***107. கலைமகள் மகிழ்ந்துறையும் இடங்கள் எவை எனப் பாரதியார். (பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை பாரதியார் கூறியவற்றையே வசனத்தில் தந்துள்ளார்) கூறுகின்றார்?***

மிகுந்த இன்பத்தை வழங்கும் கவிதைகள் பாடும் புலவர்களின் உள்ளங்களிலும் உள்ளதாகிய மெய்ப்பொருளை ஆராய்ந்து உணர்த்துவதான வேதத்தின் உள்ளிலும் கள்ளமறியா நல்லோரான முனிவர்கள் உரைக்கும் மந்திர வாசகங்களிலும் பெண்களின் இனிய குரலமைந்த பாட்டுக்களிலும் குழந்தைகள் பேசும் மழலை மொழிகளிலும் கீதம் இசைக்கும் குயிலின் குரலிலும், குதலை பேசும் கிளியின் நாவிலும் கலைமகள் மகிழ்ந்து உறைவாள் இவற்றோடு குற்றமில்லாத தொழிற்றிறம் வாய்ந்த சித்திரங்களிலும் கோபுரங்கள் கோவில்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பங்களிலும் அவற்றின் அழகிலும் வாழ்ந்து இன்பமே வடிவாவாள்.

**108. பேராசிரியர் சேதுப்பிள்ளை இரும்பை உருக்கிப் போருக்கான ஆயுதம் செய்யும் கொல்லர், உறுதி வாய்ந்த மரத்திலே தொழில் புரியும் தச்சர்ஆகியவர்களோடு உலகவாழ்க்கைக்குப் பயன்படும் வேறு எவ்வெத் தொழிலாளரைக் குறிப்பிடுகின்றார்?**

குழைத்த மண்ணாற் பாண்டம் வனையும் குயவர் பட்டாலும் பருத்தி நூலாலும்ஆடைகள் நெய்யும் சாலியர் (நெசவாளர்) இவர்களின் பணிகளிலும் கலைமகள்இன்புற்று இலங்குகின்றாள் என்பது அவர் கருத்து . பொதுப்படக் கூறினால் கவின் கலைகள் யாவிலும் கலைமகள் உறைகின்றாள் என்பதே பொருள் (வேதம்பயிலும் வேதியர் வீரம் விளைக்கும் வேந்தர், தாளாண்மையிற் சிறந்த வேளாளர் ஆகியோர் ஒருங்கே வணங்கும் தெய்வம் கலைமகள்.)

**109. அறிவுத் தெய்வத்தின் சிறந்த பண்பு யாது ?**

உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றிச் செல்வர் வறியவர் என்ற பாகுபாடற்று, இளைஞர் முதியோர் என்ற வித்தியாசமற்று, எந்தக் குடியிலே பிறந்த யாராயிருந்தாலும் அறிவினை விரும்புவோரை 'வருக' என்று கருணையோடு அழைப்பதே அறிவுத்தெய்வத்தின் சிறப்பு.

**110. முனிவர்கள் மந்திரத்தாலும், அறிவாளிகள் ஏடுகளை அடுக்கிய வரிசையாலும், நறுமலர்களாலும் வண்ணம், சந்தனம் என்பவற்றாலும் வழிபடும் நாமகள் விழாவை நடத்தும் முறைபற்றிப் பாரதியார் யாது கூறினார்.**

'செந்தமிழ் நாட்டினரே! இந்தத் தெய்வத்தை வணங்குவோம் வாருங்கள் இவளை வணங்குவது எளிதன்று என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள் மந்திரத்தை முணுமுணுத்தும் ஏட்டை வரிசையாய் அடுக்கவும் சந்தனத்தையும் மலரையும் இட்டு வணங்கும் சாஸ்திர முறையானது இவளின் வழிபாடன்று' என்கிறார்?

**111. பாரதியார் கலைமகளை வழிபடுதற்குக் காட்டும் நல் வழிகள் எவை?**

'தமிழ் நாட்டிலுள்ள வீடுகள் எங்கும் கலையின் ஒளி விளங்கல் வேண்டும்'. வீதிகள் தோறும் பல்கலைக்கழகங்கள் நிறுவல் வேண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியாகிய நலம் இல்லாதவரின் ஊரைத் தீயிட்டு எரித்தல் வேண்டும்.

இனிய பழச்சோலைகள் அமைத்தலிலும் இனிய நீர்நிறை குளங்களை ஆக்குவதிலும் ஆயிரம் அன்னச்சத்திரங்களை வைத்தலிலும், பதினாயிரம் கோயில்களைக் கட்டி எழுப்புவதிலும், பின்னும் வேறுள்ள தானதருமங்களைத் தமது பெயர் விளங்குமாறு நிலை நிறுத்துவதிலும் ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்து அவனைக் கல்வியறிவுடையவன் ஆக்குவது கோடி புண்ணியமாகும்.

***112. பேராசிரியர், பல்லாயிரம்ஆண்டுகளுக்குமுன்னே அறத்தினை அறிந்திருந்த தமிழ்நாட்டின் சிறப்புக்குக் காட்டும் உதாரணங்கள் எவை?***

1. பசியால் வருந்தி வந்தவர்களுக்கு அவர்களின் வருந்திய முகங்கண்டே உணவளித்துப் பசிகளைந்தமை.

2.பாரிவள்ளல் படரக் கொம்பின்றி வருந்திய முல்லைக் கொடிக்குத் தனது தேரையே கொழுகொம்பாக நிறுத்திச் சென்றமை.

3. வழிச்செல்லும் ஏழைமக்கள் வெயிற் கொடுமையால் வருந்தா வண்ணம் சாலைகளும் சோலைகளும் அமைத்தமை.

4. உலகுக்கெல்லாம் தலைவனாகிய இறைவனுக்குக் கோயில்கள் கோட்டங்கள் எடுத்தமை.

***113. கல்வியின் சிறப்புப் பற்றி விளக்கப் பேராசிரியர் எடுத்துக் காட்டியுள்ள மேற்கோள்களை விளக்குக,***

(அ) 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' ஔவைப்பாட்டியின் ஆத்திசூடி மந்திரம் இது எண்ணாகிய கணிதத்தையும் எழுத்தாகிய மொழி அறிவையும் கண்கள் என்று கொள்ளல் வேண்டும் என்பது இதன் பொருள். இவ்விரண்டும் இல்லாதவர் ஊனக்கண் இருந்தும் குருடரே.

(ஆ) *விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனையவர்.*

என்பது திருவள்ளுவரின் திருவாய்மொழி கல்வி கற்றவரே மனிதர் எனத்தக்கவர், கல்லாதவர் மனித உருவில் இருந்தாலும் விலங்குகளே என்கிறார். அஃது உண்மையே. கல்வியறிவில்லாதவர் தக்கது தகாதது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பகுத்துணர மாட்டாமையால் அவர்கள் விலங்குகளே.

(இ) கற்றல், கேட்டல், உடையார், பெரியார், கற்பதோடு கற்ற வரிடமிருந்து கேட்டறிந்தும் அறிவையும் கல்வியையும் வளர்த்தவரே பெரியவர். என்பது திருஞானசம்பந்தப்பெருமானின் முடிந்த முடிபு. கல்வி என்பது வெறும் ஏட்டுக்கல்வியாய் மட்டும் இராது கேட்டலும் வேண்டும் என்பதாலேயே திருவள்ளுவர் கல்விக்கு ஓர் அதிகாரம் வகுத்தது போலவே கேள்விக்கும் ஓர் அதிகாரம் வகுத்தார்.

ஆக ஆலயம் அமைப்பதிலும் அறிவுக்கண் திறக்கும் கல்வியே சிறந்தது என்ற கருத்தைப் பாரதியாரிடம் பெற்றுப் பேராசிரியர் பல்வேறு எடுத்துக்காட்டுக்கள் மூலம் வலியுறுத்துகின்றார்.

## அரும்பத விளக்கம்

வெள்ளைக்கலை-வெண்ணிற அடை, வெள்ளைப்பணி-வெண்ணிற ஆபரணம், கவின்கலை-அழகியற்கலை, சாதனம்-கருவி, மதுரப்பாட்டு-இனியபாட்டு, வெம்படை-கொடியஆயுதம், பாவலர்-புலவர், கீதம்-பாட்டு, ஓர்ந்திடல்-ஆராய்தல், தரணி-பூமி, வான்பொருள்- பெரும் பொருள், தேவு - தெய்வம், சுனை-நீரூற்று, குளம், கலாசாலை-பல்கலைக் கழகம், புரவலன்-காப்போன், அரசன், மும்மை-சுவர்க்கம், பூமி, பாதாளம் ஆகிய மூவுலகங்கள், பனுவல்- நூல் (புத்தகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. சீறாப்புராணம்

## நபி அவதாரப் படலம்

***114. சீறாப்புராணம் பற்றி நீர் அறிந்ததை எழுதுக.***

கி.பி பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் பாரதியார் பிறந்த எட்டயபுரத்தவரான உமறுப் புலவர் என்னும் இஸ்லாமியப் புலவரால் இயற்றப்பட்ட காவியமே சீறாப் புராணம் 'சீறாத்' என்ற அரபுச் சொல்லின் பொருள் வரலாறு என்பதாகும். முகம்மது நபி (ஸல்) அவர்களின் புனித வரலாற்றினைக் கூறுவதால் 'சீறாப்புராணம்' என்ற பெயர் அமைந்தது. முகம்மது நபியின் இளமைப் பருவத்தைக் கூறும் விலாதத்துக் காண்டம், அவருக்கு இறையருள் வெளியிட்டதை உரைக்கும் நுபுவ்வத்துக் காண்டம். மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்றதை விளக்கும் ஹிஜ்றத்துக் காண்டம் என்ற மூன்று காண்டங்களிலே காவிய வடிவில் சீறாப்புராணம் அமைந்துள்ளது. இம் மூன்று காண்டங்களும் 92 படலங்களாக வகுக்கப்பட்டு 5027 பாடல்களால் ஆனது இந்நூல் எமது பாடப்பகுதியில் வரும் நபி அவதாரப் படலம் விலாதத்துக் காண்டத்துள் அடங்குவதாகும்.

***115. திருநபியவர்களின் கண்ணிணைகள் செந்தாமரையாக உருவகிக்கப்படுவது போல. அவரின்முகத்தில் வீற்றிருந்த கருணை எதற்கு உவமிக்கப்படுகிறது? அந்த உவமையின பொருத்தப்பாட்டினை விளக்குக.***

பெருகிய ஒளியோடு கூடிய கோடி சந்திரரின் ஒளி யாவும் ஒன்று சேர்ந்து வரும் ஒரு சந்திரனுக்கு நபியவர்களின் கருணையானது உவமிக்கப்படுகின்றது.

சந்திரனது கதிர்கள் குளிர்மையானவை. ஒரு சந்திரனின் கதிரொளியே உலகை மகிழ்விக்கப் போதியது. ஆனால், முகம்மது நபியவர்களின் கருணையோ கோடி சந்திரர்களின் குளிர்ந்த கதிரொளி ஒன்று திரண்டது போன்றதாகும். அவ்வாறெனில் அந்தக் கருணையின் அளவினை இவ்வளவு என்று கூறத்தான் முடியுமோ?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***116. முகம்மது நபியவர்களின் பெற்றோர்தம் சிறப்புக்களை உமறுப்புலவர் வருணிக்குமாற்றினை விளக்குக.***

உலகமெல்லாம் வாழத்த அமைந்ததும் பெரியதும் சிறந்ததுமான மக்காநகரத்தின் அதிபரான அப்துல்லா. முகம்மது நபியின் தந்தை, அவர் பரலோக அதிபர், உலகில் வாழ் மனிதர்களுக்கும் தலைவர். அவர் தம் பத்தினியாரும் நபியவர்களின் தாயாருமான ஆமினா தருமங்களின் உறைவிடம்! கருணைக்குத் தாயகம்! பொறுமையிலே பூமாதேவியிலும் எட்டு மடங்கு உயர்ந்தவர் பெரும் சூலத்தில் தோன்றிய ஒப்பிலாமாணிக்கம். அவர்களின் சிறப்புக்களுக்கு இணையில்லை.

இத்தகைய நல்லின மயிலெனத் தகும் ஆமினாவும். முத்தினைப் போன்ற வெண்மையான நகையுடையவரும் கனிபோன்ற சுவையான மொழி பேசுபவரும் சித்திரம் போலும் அழகுடையவருமான அப்துல்லா ஆகிய பெரியாரும் மனம் ஒத்து இல்லற இன்பமாகிய அமுதத்தினை உண்டு வாழ்ந்து வந்தனர்.

***117. இறஜபு மாதத்து முதலாந் தேதி வெள்ளியன்று 'எங்கள் நாயகர்' அப்துல்லாவின் நெற்றியினின்றும் மங்கை ஆமினா வயிற்றிலே. தூய திருவடி வினரான முகம்மது பேரொளியோடு கருத்தரித்த வேளை, இறைவன் தேவருக்கு இட்ட கட்டளை யாது ?***

திருந்திய சுவர்க்க உலகத்தின் இறவா நிலையினரான அமரரே மற்றும் திரண்டுள்ள தேவர்களே. உங்கள் உள்ளங்களில் மகிழ்வுடன் எல்லா இடங்களையும் அலங்கரியுங்கள். எவ்வித கவலையும் அற்ற முகம்மதுவை ஆமீனாவின் வயிற்றில் இருத்தியுள்ளேன் என்பதே இறைவன் இட்ட கட்டளை இக் கூற்றின் வாயிலாக இறைவனே 'முகம்மது' என்ற பெயரை அளித்தான் என்பதும் பெறப்படுகிறது.

***118 தேவ உலகம் அலங்கரிக்கப்பட்டு. பாழடைந்த நகரங்கள் அடைக்கப்பட்டு முகம்மதுநபிஅவர்களின் கருவாசத் தொடக்கத்தினை அமரரும் வானவரும் கொண்டாட, இபுலிசு அடைந்த நிலை யாது ? அவன் அந்நிலை அடையக்காரனம் என்ன ?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்லீசு அலறுவான். ஏங்குவான் மயக்கம் அடைவான். கலங்குவான். இரைவான் கன்னத்தில் கைவைத்தவாறு இருப்பான். எழுவான், தரையில் விழுந்து இனி எனக்கு சிங்காசனம் இல்லை என்று ஏங்கி உரை [illegible] கண்ணீர் ஒழுகக்கிடந்தான்.

இப்லீசு என்பது இடையூறு செய்பவன் எனப் பொருள் படும் அரபுச்சொல் மக்களைத் தீய வழிகளில் செலுத்தி, நன்மைகளை மறக்க வைத்து இடையூறு செய்யும் சாத்தான (சைத்தான) இவன். இது [illegible] தீயவழிப்படுத்துவதில் வெற்றி கண்டு அவர்களின் தலைவனாய [illegible] போன்று வீற்றிருந்த அவனுக்கு முகம்மது நபி அவர்களின் [illegible] கிமை அழிந்து போகும் என்ற அச்சம் உண்டானது [illegible] அவன் கவலை அடைந்தமைக்கு இதுவே காரணம்.

***119 ஆதம, ஆமினாவின் கனவிலே தோன்றி 'உனது சிறந்த வயிற்றில் வளரும் சந்ததி (பரம்பரையில் வந்தபிள்ளை) வலிமையுடையைது. சூரியன் போலும் (புகழ்) புகழ் கால்வது. அதன் பெயர் முகம்மது ' என்று கூறக்கேட்டபின் நிகழ்ந்தவற்றை விளக்குக.***

மக்காவாகிய நல்ல நகரத்தின் மன்னர் அபதுல் முத்தலிபு தமமுடைய [illegible] அருமை மகனார் அபதுல்லாவை அருகழைத்து இருத்தினார். [illegible] அரிய அறிவுரைகளை வழங்கினார் செய்ய வேண்டிய [illegible] எடுத்துரைத்தார்; பின்பு உறவினர் யாவரையும் [illegible] நகருக்குப் புறத்தே செல்லுமாறு பணித்தார்.

தந்தையின் கட்டளைக்கு எதிர் உரைக்காத அப்துல்லா தம [illegible] மந்திர வாளினை எடுத்து இடையிலே இனிதுறத் தரித்துக் கொண்டார் இந்திரவில் (வானவில்) எனத் தக்க வில்லைக் கையில் ஏந்தினார் எமது [illegible] கொண்டு [illegible] என்று ஏவலருக்கு [illegible]

அவ்வாறு வா[illegible] குதிரையில் ஏறி [illegible] அபதுல்லா [illegible] கூட்டம் என [illegible] இனிய [illegible]

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்புவதற்காக அலங்காரம் செய்து கொண்டு, இளைஞர் சூழ்ந்துவர வழிக்கொண்டு, மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடைப்பட்ட தபுவா என்ற சிற்றூரினை அடைந்தார்.

அங்குத் தங்கியிருந்த காலத்திலே இறைவன் விதித்த ஊழ் வினைப்பயன் அவரை அடைந்தது அதனால் போகவேண்டிய நாள்களும் நாழிகையும் கழிய நீதிசால் மன்னரான அப்துல்லா தம்மை அறியும் அறிவுடன் (நினைவுகெடாமல்) ஒளி பொருந்திய மென்மையான முகம் விளங்கும் வண்ணம், நித்திரை கொள்பவர் போல உயிர் நீத்து மறைந்தார்

அவரோடு கூடிவந்து சூழ்ந்து நின்றோர் இது விதியின் பயன் என நிலைகுலைத்து வாடினார் . பின்பு அப்துல்லாவாகிய மன்னரது சடலத்தை வாசனைத்திரவியங்களோடு அடக்கம் செயது தபுவா வினை அகன்று தம நாட்டை அடைந்தனர் ஆமினாவுக்கு நிகழ்ந்தன யாவும் உரைத்தனார்.

செய்தியைக கேட்ட, இளமையும் மயிற் சாயலும் பொருந்திய ஆமினா மனம உடைந்து அலறினார். மழையெனக்கண்ணீர் மழைசொரிந்தார் போற்றுதற்குரியதும் வைரம் பாய்நததுமான அகிற் புகையூட்டிய கூந்தலானது. நிலத்திலே புரளவும் வளையலணிநத காந்தட் கரங்கள் முகத்தினைப் பிசையவும் வருந்திக் தம்வசம கெட்டார் அந்நிலையில் திருந்திய ஆபரணங்களை அணிநத இளநங்கையர், திரண்ட மக்கக்கள் இழைத்த வலம்புரிச் சங்கினைச் சூழ்ந்த மறைச் சங்குகளைப் போல அவரைச் சூழ்ந்திருந்து அழலாயின் இவர்களின் அழுகை ஓலமே எங்கும நிறைந்தது.

பூமியின் புழுதியிலே புதையுண்டு கிடந்தமணி எண்ணுமாறு லானது ஒடுங்கி கண்ணீர் தரையில் ஒழுக இருநத அழகிய மயிலாகிய ஆமினாவை அடுத்து அப்துல முக்காலிப் அவரின் துன்பத்தை ஆற்றி அறிவுரை பல பகர்ந்தார்.

தேவர் ஒருவர் மாகத்தாலன கிண்ணத்திலே அமுதத்தினை அருந்த வதற்கு கொடுக்கத தேவலோக கன்னியர் அதனைக் கொடி போலும இடையுடைய இளமயிலாகிய ஆமினாவுக்கு வழங்கினர் அதனை ஆமினா கனது காமனை போலும் கரத்தால் பெற்றுப பருகினார் அதனால் அவரது பிரிவுச சோகமானது நீங்கப் பெறாது கற்கண்டு போலும் சுவை நிறைந்த செவ்விளமான அவர் கமது சுநபா நோய் அகன்று கெளிவுற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 120. முகம்மதுநபி அவர்கள்பிறந்ததனை உமறுப்புலவர் சித்திரிக்கின்றவகையினை விரிவாக விளக்குக.

குற்றமின்றிப் பழுத்துச் சுவையாற் கனிந்த கொவ்வை போலும் வாயினரான தேவப் பெண்கள் ஆமினாவை வாழ்த்தவும, தீமையின்றி நெருங்கிப் பணிவிடைகள் செய்யவும், செழுமையான தாமரை போலும் ஆசனத்திலிருந்த பெண்ணரசியான ஆமினாவின் வயிறாகிய இல்லத்திலிருந்து அன்பு பெருகுமாறு பெரிய பூமியின் கண்ணே நல்வழி காட்டும் நற்பொருளாய்ப் புகழுக்குரியவரான முகம்மது நபி தோன்றினார்

பூமியில் ஒளி பரப்பியவாறு தமது மேனியிலிருந்து வாசனை பொபபளித்து வெளியிடத்தே வீசிட, தமது தலையினைத் தொழும் திசையினை நோக்கி மேலே உயர்த்தி நெற்றியானது அழகுடன் பூமியைத் தொடும் வண்ணம் பணிந்திருந்தது. இரண்டு கால்களையும் வலிமை பெறும் வகையிலே மடித்து, குறித்த இடக்கையை இடத்தாளிலே சேர்த்து ஒளி விடும் வலக்கையினை காலின் மேல் வைத்து வலக்கைச் சுட்டுவிரலினை உயர்த்தியபடி முகமமது நபி உதிர்த்தார்.
(முஸ்லிம்கள் தொழுகையின்போது அமர்ந்திருக்கும் கோலம் இது)

தலைக்கு நெய் பூசி திருவிழிகளுக்கு கரியமை தீட்டிச் சிறக்கும் வண்ணம் கொப்பூழ் கொடியும் கொய்து. சுன்னத்துச் சடங்கும் இயற்றியதன் மூலம் தொடக்குக்குறி ஒன்று இல்லாது செய்யப்பரவும் கஸ்தூரியின் பரிமள சுகந்தமானது எங்கும் கமகமக்க. பொங்கிய ஒளியானது வானம் வரை சென்று உலாவ முகம்மது நபி பிறந்தார்.

நேரான தந்தத்தினையுடைய வலிய யானையின் போர் (முகம்மது நபியின் பிறப்புக்கு ஐம்பது நாள்களுக்கு முன்) தீர்க்கப்பட்டது . இஸ்லாமிய ஆண்டின் மூன்றாம் மாதமாகிய ரபீயுல் அவ்வல் பன்னிரண்டாந் தேதியன்று எந்த இல்லத்திற்கும் பெரும்பேறு எனத்தகும் திங்கள் இரவிலே விண்ணுலகம் மண்ணுலகம். பாதளம், எனக் கூறப்படும் மூவுலகங்களையுங் காப்பதற்கென முகம்மது பிறந்தார்.

பூமியிலே அரசபதி இதுவெப எனட புகழ் பெறத் தோன்றிய மக்கா நகரிலே, குளிர்ச்சி பொருந்தியதும் ஒளி நிறைநததுமான கஃபாவுக்குரிய திசையின் வடகிழக்கிலே குற்றம் எதுவும் அணுகாத ஜெம்றக் திலுஸ்தா என்ற தலத்தின் நடுவிலே பெருநதவத்தினரான அபுத்தாலிபுவின் சிறந்த இல்லத்திலே நபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது பிறந்தார்.

ஒழுக்க நெறிகள் மாறுபட்டும், மயக்கம் தரும் ஆணவம்மிகுதியாகிப் பெரிய உலகின் கண்ணே பரந்தும், துறவிகளுக்குரிய ஒழுக்கம் தவறியும் இல்வாழ்வுக்குரிய தருமம் மடிந்து போயும், ஒளியில்லாத வீடு போலக் குறைகள் நேருகின்ற காலத்திலே, அஞ்ஞானமாகிய இருளின் கூட்டத்தினை வேரறுத்து நல்ல தருமம் நெறியினை விளக்கவென்று மறுவின்றி எழுந்து பூரண சந்திரனைப் போல முகமது நபி பிறந்தார்.

சூரியனின் வெம்மையான கதிர்களினாலே இன்னலடையும் காலத்தில் படர்ந்த பெரிய மரம் தருகின்ற நிழல் என்னும் படி, ஈனத்தனமும், கொலையும் பிறவிநோயுமாகிய துன்பங்களைத் தீர்க்கின்ற அரிய மருந்தாகவும், சன்மார்க்கப் (இஸ்லாமிய) பயிருக்குச் செழிப்புத் தரும் மழையாகவும் குறைஷி குலத்தின் திலகமாகவும் பெரிய உலகிற்கு ஒப்பில்லாத தூண்டாமணி விளக்காகவும் முகம்மது நபி பிறந்தார்.

## *121. ஆமினா தம் புதல்வருக்குப் பால் அளித்தமை, அப்துல் முத்தலிபு அவருக்கு நாமம் சூட்டி ஆமினா கையில் அளித்துச் சென்றமை என்பவற்றை உமறுப்புலவர் எவ்வாறு வருணிக்கிறார் ? விளக்குக.*

வில் போன்ற நெற்றியும் கயல்போலும் கண்ணும் பெற்றுச செம்மையோடு பொன் போலும் நிறத்திலே பொலிந்த ஆமினா என்ற பெண்மணி, மலர்ந்து விளங்கும் உலகிலே இறைவனின் வேதத்தை விளக்கப் போகும் முகம்து நபியாகிய தலைவரை விளங்குகின்ற தாமரை போன்ற தமது கரங்களில் ஏந்தி , இரு விழிகளும் குளிரும் வண்ணம் அவரை நோக்கிப் பலவாகிய கலைகளையும் கொடுப்பவர் போல ஏழாம் நாளில் பால் அளித்தார்.

பலவாகிய கூட்டும் கஸ்தூரியும் மணக்கும் பெரிய ஒளியோடு திகழ்ந்த இடபம் போலும் வலிய குழந்தையைத் (முகம்மதுவை) தமது கரத்தில் எடுத்து அனைத்தவராய், மதம் பொழிகின்ற ஆண் யானையானது அசைந்து நடப்பது போல நடந்து கஃபாவினை வலம் வந்த அப்துல் முத்தலிபு அதனுள்ளே புகுந்திருந்து இறைவனைப் புகழ்ந்து வணங்கி குழந்தைக்கு முகம்மது எனப் பெயரிட்டு வீரத்தோடு திரும்பினார்.

தேன் சொரியும் பூஞ்சோலையால் சூழப்பெற்ற சுவர்க்க நாட்டின் அரசரை திசைகள் தோறும் அறநெறியை விளக்கப்போகும் தலைவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிய வேதத்தின் கொழுந்து போன்றவரை முகம்மது நபியாகிய மறுப்படாது பூத்த சிவந்த மாணிக்கத்தை பூ மலர்ந்து விளங்கும் கூந்தலராகிய ஆமினா என்னும் பூங்கொடி போன்றவரின் கரங்களில் அளித்து, அச்சந்தரும் கூரிய வேலைக் கரத்தில் தாங்கிய அப்துல் முத்தலிபு நடந்து சென்று, தமது இல்லத்தினை அடைந்தார்.

## 122. முகம்மது நபி பிறப்பதற்கு ஐம்பது நாட்களுக்கு முன் நடைபெற்று முடிந்த 'யானைப்போர்' பற்றி நீர் அறிந்தவற்றை தருக.

கி. பி. 570 இல் நடைபெற்ற இப்போர் பற்றி முஸ்லிம்களின் புனித மறையாம் அல்குர் ஆனில் செய்தி இது. (அல்குர் ஆன் 150ஆம் அத்தியாயம்)

அப்ரஹா எனபவன் யமன் தேசத்துக்கு அதிபர். அக்காலத்தில் இஸ்லாம அரேபியாவில் பரவத் தொடங்கவில்லை. மக்காவின் கிரக வணக்கக்காரரின் ஆலயமாயிருந்தது. அதன் தலைமை அர்ச்சகர் முகம்மது (ஸல்) அவர்களின் பாட்டனாரான அப்துல் முத்தலிபு.

எவ்வாறாயினும் மக்காவிலிருந்த கஃபா பள்ளிவாசலைக் கைப்பற்றிவிட அப்ரஹா மறைந்து நின்றான். அவன் தலைமையில் யானைப்படை ஒன்று மக்காவுக்கு விரைந்தது. அந்தப்படை மக்காவின் எல்லையில் இளைப்பாறிய வேளையில் அங்கு நின்ற அப்துல் முத்தலிபு அவர்களின் ஒட்டகங்களைக் கைப்பற்றியது.

அப்துல் முத்தலிபு தமது ஒட்டகங்களை அப்ரஹாவும் யானைப்படையும் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார். அப்ராஹா கஃபாவை இடித்துத் தரை மட்டமாக்கத்தான் வந்திருப்பதாக அப்துல் முத்தலிப்புக்குச் சொன்னான. அப்துல் முத்தலிபு ஒட்டகங்கள் என்னுடையவை. அவற்றை எனக்குத் தந்து விடும் கஃபா அல்லாவின் வீடு அதை அவனே பார்த்துக் கொள்வான் என்று அப்ரஹாவுக்குப் பதிலுறுத்தார்.

அடுத்தநாள் அப்ரஹா கஃபா இருந்த திசையை நோக்கித் தனது யானைப்படையைச் செலுத்தினான் யானைகள் கஃபா இருந்த பக்கம் செல்ல மறுத்தன. அவ்வேளையிலே சிறியதொரு பறவைக் கூட்டம் மண்ணனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்ட ... ை ... ளையும் சுற்றிவட மி ... வ று சிறு ... ... யைப் ... ப் போட்டது. அந்தக் கற்கள் அப்ரஹாவையும் அவன் வீரர்களையும் யானை ... படையையும் ஊடுருவின. படை சிதறிப்போயிற்று. யானைகள் மாண்ட ... அப்பொழுது பெய்த பெருமழையால் உண்டான வெள்ளம் இறந்த ச ... லங்களை இழுத்துச் சென்றது.

இவ்வற்புதத்தால் க.:பா காக்கப்பட்டது இச்சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு யானைப்போர் நிகழ்ந்த வருடத்தை அரபி ... க்கள் யானை வருடம் என அழைத்தனர்.

## அரும்பத விளக்கம

பிரகாசம் - ஒளி. கண்ணிணை - இருகணகள். புரம நகரம ... தி தலைவன். திங்கள் - மாதம். திண்புயம் - வலியதோள உதரம - வயிறு, வலுமை - வலிமை என்ற சொல்லின் திரிபு ஆதி முக ... ... கிய இறைவன ... ... தி ... காழ் - ... வைரம நிரைந்து - வரிசை ... யாய இருந்து. ... ஏதம் - குற்றம் ... ... ... ... ... ... ... வை - கூர்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. நீதிக்குப்பின் பாசம்

அல்ஹாஜ் ம. உ. உவைஸ்

***123. நூர்ஜஹான் என்பதன் பொருள் யாது? அந்தப்பொருள் நூர்ஜஹானுக்குப் பொருத்தமா ? விளக்குக.***

கிழக்கு நாட்டின் ஒளி விளக்கு, என்பது நூர்ஜஹான் எனற சொல்லின் பொருளாகும். அது அவளுக்குப் பொருந்துவதே, ஏனெனில், அவள் மிகவும் அழகானவள். அவளது அழகானது, முகலாய மன்னரான ஜஹாங்கீரை மிகுதியும் மயக்கியதை அவரின் வரலாற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இந்தியாவின் மாமன்னரான அக்பரின் புதல்வர் அவர் (முடிசூடமுன்)இளவரசராய் இருந்த காலத்தில். சலீம் என்ற பெயரால் அழைக்கப்பட்டவர். அக்பர் அரண்மனையில் வளர்ந்தவளும் ஈரானிய அமீரின் புதல்வியுமான நூர்ஜஹானின் பேரழகில் தம்மை இழந்து அவளை மணக்க விருப்பம் கொண்டிருந்தார் சலீம்.

ஆனால் அக்பர் தம் புதல்வரின் விருப்பத்திற்கு இடமளிக்கவில்லை. ஆப்கானிய உத்தியோகத்தர் ஒருவருக்கு, நூர்ஜஹான் விவாகம் செய்து வைக்கப்பட்டாள்.

சிறிது காலத்தில் நூர்ஜஹானின் கணவர் இறந்துபோனார், அப்பொழுது சலீம் ஜஹாங்கீர் என்ற பட்டப் பெயருடன் பேரரசராயிருந்தமையால் அவர் நூர்ஜஹானை மறுமணம் செய்வதற்குத் தடையேதும் இருக்கவில்லை ஆனால், நூர்ஜஹானோ தன் கணவரின் நினைவுகளிலேயே ஆழ்ந்திருந்தமையால் மாமன்னர் ஜஹாங்கீரது வேண்டுகோளை மறுத்துவிட்டாள். எனினும் ஜஹாங்கீர் மனச்சோர்வடையாது மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்தமையால் இறுதியில் அவள் அவரது வேண்டுகோளை ஏற்று அவருக்கு மனைவியாகிப் பட்டத்தரசியுமானாள்.

பாரத நாட்டின் மாமன்னராய் விளங்கிய ஒருவரே. விதவையான ஒருத்தியை மீணடும் மீண்டும் வேண்டுகோள் விடுத்துத்தம் மனைவியாக்கிக் கொள்வாரானால், நூர்ஜஹான். தனது பெயர்ப் பொருளுக்குப் பொருத்தமானவளாகவே இருந்திருப்பாள் என்பதற்கு ஐயம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 124. நூர்ஜஹான் கொலைகாரியான நிகழ்ச்சியைச் சுருக்கமாகத் தருக.

ஒரு நாள் நூர்ஜகான் தெருவோரமாக இருந்த தன் மாளிகையின் உட்புறத்தே பலகணியின பக்கத்திலே ஓர் ஆசனத்தில அமர்ந்து தெருவில் நிகழ்வனவற்றை உற்று நோக்கிய வண்ணம் இருந்தாள். அவ்வேளை தெருவிலே நின்று ஒருவன் அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான. நூர்ஜஹானுக்கு அவனது செயல் பெரும் வெறுப்பை ஏற்படுத்தியது. அவனை அவ்விடத்திலிருந்து அப்பாற்செல்லுமாறு அவள் சைகை காட்டியும் அவன் நகரவில்லை. பிடிவாதமாகத் தொடர்ந்து இமைகொட்டாது அரசியையே நோக்கியவாறிருந்தான்.

நூர்ஜஹான் அமர்ந்திருந்த ஆசனத்தருகில் மேசை ஒன்றில் கைத்துப்பாக்கி இருந்தது அவள் தன்னை நோக்கியவனைத் திகிலடையச் செய்து, அவ்விடத்திலிருந்து நகர்ந்து செல்ல வைக்கக் கைத்துப்பாக்கியை எடுத்து அவனைக் குறி பார்த்தாள் அவளை அறியாமலே அவள் கை அசைந்து கைத்துப்பாக்கியின் விசையிழுப்பைத் தட்டி விட்டது குண்டு இட்டு நிரம்பியிருந்தமையால் அது வெடித்து அங்கு நின்றவனின் உயிரைக் குடித்தது.

கைத்துப்பாக்கி குண்டு நிரப்பப்பட்டிருப்பதை அறியாதகாலும் தற்செயலகக் கையசைத்து விசையிழுப்பைத் தட்டியதால் இக் கொலை நிகழ்ந்தது, உண்மையில் நூர்ஜஹானை இக் கொலைக்கு முழுமையான குற்றவாளியாகக் கொள்ளல் இயலாது.

## 125 மாமன்னர் ஜஹாங்கீர் தமது நீதியை நிலைநாட்ட முற்பட்ட வகையினை விளக்குக.

கொலையுண்டவனின் சடலத்தைச் சுமந்து வந்து குடி மக்கள் முறையீட்டு மணியை அடித்த பொழுது மாமன்னர் ஜஹாங்கீர் தமது அறையில் அமைச்சரோடு முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார். தமது உடனடியான தலையீட்டினை எதிர்பார்க்கும் வேளையில் மட்டுமே அந்த மணி அடிக்கப்படுமாதலால் அவர் தமது ஆலோசனையை இடைநிறுத்திவிட்டு அரன்மனை வாயிலுக்கு வந்தார்.

சடலத்தைச் சுமந்து வந்தவர்களின் முறையீட்டைக் தமது கூறுக்கு விசாரணை மூலம் தெளிவாக்கிக் கொண்ட மாமன்னர், நீங்கள் அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசிக்கு எதிரான சாட்சியங்கள். அப்படித்தானே? இருந்தாலும் நான நீதி வழங்கத்தயங்க மாட்டேன் என்றார். அரசாங்க அமைச்சர்களை நூர்ஜஹானைக் கைதுசெய்து மறுநாள் நீதிமன்றத்தின் முன் கொண்டு வருமாறு கட்டளை பிறப்பித்தார். தம்மால் போன்பு செலுத்தப் பட்டவளாயினும் குற்றம் இழைத்தவள் தண்டனைக்குரியவளே என்பதால் மிகுந்த வேதனையுடன் இந்த நடவடிக்கையை அவர் மேற்கொள்ள நேரிட்டது.

இதனோடு அவர் நின்று விடவில்லை மறுநாள் வழக்கினை விசாரித்து நூர்ஜஹானும் தன் குற்றத்தை ஏற்றுக்கொண்டதால் அவளுக்கு மரண தண்டனை விதித்தார்.

### 126 பெரிய புராணத்தில் நகர்ச்சிறப்பு என்ற பகுதியிலும் இந்தப் பாடத்திலும்இடம் பெறும்இருவேறு மன்னவர்களதும் நீதிச்சிறப்புக்களை ஒப்பிடுக.

(அ) பெரிய புராணம் நகர்ச்சிறப்பில் இடம் பெறும் மன்னன் மனுநீதிகண்ட சோழன் அவன் ஒரே மகன ஓட்டிச்சென்ற தேர்க்காலில் அகப்பட்டு இளங்கன்று ஒன்று இறந்து விடுகின்றது வாயில்லாப் பிராணியான அதன தாய் அரண்மனை சென்று ஆராய்ச்சி மணியை அடித்துத தனக்கு ஏற்பட்ட இழப்பை முறையிட்டு நீதி கோருகிறது

நீதிக்குப் பின் பாசம் என்ற இப்பாடத்தில் மாமன்னரின் மனைவி, ஒருவனைக் கொலை புரிந்து விடுகின்றாள். அவள் செயலைப் பெரியபுராணத்தில் வரும் தாய்ப்பசு போலவே குடி மக்கள் அரண்மனை முறையீட்டு மணியை அடித்து அவருக்கு எடுத்துரைக்கின்றனர்.

இவ்வகையில் மன்னர் இருவரும் நீதிக்கு வழங்கும் மதிப்பும் மக்களுக்கு அளித்துள்ள உரிமையும் ஒற்றுமை உடையன.

(ஆ) மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொல்லத் தீர்ப்பு வழங்கிய மனுநீதி கண்ட சோழனும் மனைவிக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கிய ஜஹாங்கீரும் நீதிக்கு முதன்மையளித்துப் பாசத்துக்கு இரண்டாவது இடம் அளிப்பதில் ஒற்றுமை உடையர்

(இ) மனுநீதி கண்ட சோழனின் அமைச்சர். பிராயசித்த மூலம மகனுக்கு மன்னிப்பு வழங்க வேண்டியதை அவன் ஏற்காது தாய்ப் பசு அடைந்த துன்பத்தைத் தானும அடைய உறுகி பூண்டு. மகனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணதண்டனையை நிறைவேற்றுகின்றான் மாமன்னர் ஜஹாங்கீர் மக்களின் வேண்டுகோளினை ஏற்றுக் கொல்லப்பட்டவனின் உறவினருக்குப பெருந்தொகையான உயிரீட்டுக்கூலி அளித்து மனைவிக்கு மன்னிப்பு வழங்குகின்றார். இவ்வகையில் மனுநீதி கண்ட சோழனும் ஜஹாங்கீரும் வேறுபட்டு விளங்கினார்.

## அரும்பத விளக்கம்

பலகணி - யன்னல். அபாயக்குரல் அவலத்தை (அடைக்கலத் தேவையை) உணர்த்தும் குரல். மாட்சிமை - பெருமை, உயர்வு. உசாவு தோரணை - விசாரிக்கும் வகை. புதிர் - நொடி. அல்லலுறும - துன்பமடையும். அமீர் - தலைவர். உயிரீட்டுக்கூலி - உயிருக்கு ஈடாக வழங்கும் பணம். வழித்தோன்றல்கள் - பரம்பரையில் வந்தோர் (மக்கள், பேரர், பேர்த்தியர் முதலியோர்) அருமந்த உயிர் - அருமந்தது அன்ன உயிர் என்ற சொற்றொடர் இடையில் குறைந்து அருமந்த உயிர் என ஆயிற்று. இதனைத் தமிழ் இலக்கணகாரர் மரூஉ என்பர் அருமையான மருந்து (அமிர்தம்) போன்ற உயிர் என்பது பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. கங்கையில் விடுத்த ஓலை

சுவாமி விபுலாநந்தர்

### *127. 'கங்கையில் விடுத்த ஓலை' பாடிய சுவாமி விபுலாநந்தர் பற்றி யாது அறிவீர்?*

கிழக்கிலங்கையின் விடிவெள்ளி எனத் தோன்றிய சுவாமி விபுலாநந்கர் (1897–1942) அவர்களின் பிள்ளைத்திருநாமம் மயில்வாகனம் எனபது. விஞ்ஞானமானி(**B.Sc.** ப் பட்டமும் பண்டிதர்ப் பட்டமும் பெற்ற இவர் தமிழ் ஆங்கிலம் சமஸ்கிருதம், லத்தீன் ஆகிய மொழிகளிலும் வல்லுநராவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம். இலங்கைப் பல்கலைக்கழகம் என்பவற்றின முதலாவது தமிழ்ப் பேராசிரியராய் விளங்கிய சுவாமியவர்கள், இராமகிருஷ்ண மடத் துறவியுமாவார். யாழ் நூல் (தமிழ்,இசைப் பற்றிய ஆராய்ச்சி நூல்) மதங்க சூளாமணி (தமிழ சமஸ்கிருதம். ஆங்கிலம் ஆகிய மொழிகளிலுள்ள நாடகம் பற்றிய விளக்க நூல்) ஆகிய நூல்களினாலே பெரும் புகழடைந்த அப்பேராறிஞர். சிறந்த கவிஞராகவும். இலக்கிய சமய பண்பாட்டு கட்டுரையாளராகவும் விளங்கினார். இவரது கட்டுரைகளும், கவிதைகளும் தொகுக்கப்பட்டு அருள். செல்வநாயகம் என்பவரால் நூல்களாய் வெளியிடப்பட்டுள்ள.

### *128. விபுலாநந்தரின் நண்பர் கந்தசுவாமியர் தம் பண்பு நலன்களைக் 'கங்கையில்விடுத்த ஓலை' யிற் கூறியாங்கு விளக்குக.*

கந்தசுவாமியார் இலக்கணம், இலக்கியம் ஆகிய கலைகளை நன்கு பயின்று அறிந்து கொண்டவர். இயற்றமிழ் நூல்கள்யாவும் ஆழம் கண்டு உணர்ந்தவர் (தமிழிலே பழுத்த அறிவு மிக்க புலவர்களின் அவையிலே முதன்மை பெற்றுப் பணிவான் மொழியினைப் பேசுகின்ற பெரும் புலவர் . கனிவான குணநலங்கள் பொருந்தியவர்.

சொற்களின் வகையீடு, தொகுப்பு, (அவற்றைக் கையாள்வதால் அமையும் உரை, செய்யுள்) நடை என்பவற்றைக் கந்தசுவாமியார் நன்கு உணர்ந்தவர். உணர்ந்தவற்றைச் சொற்களில் வெளிப்படுத்தும் வல்லமை உடையவர்: சொற்சோர்வு அற்றவர்: தூயவழியில் நடப்பவர் : பலவாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் என்னும் கடலுள்ளே மூழ்கி அறிவு மணிகள் பலவற்றை முகந்து வைத்திருக்கும் களஞ்சியம் போன்றவர்.

சொற்களால் வெளிப்படுத்தும் கருத்துக்களிலே முட்டுப்பாடில்லாத இப்பேரறிஞர். வழி நூல்கள், சார்பு நூல்கள் மட்டுமன்றி அவற்றின் மூல நூலாகிய முதல் நூலையும் கற்றுணர்ந்தவர். சொல்வனவற்றை ஐயந் திரிபு இன்றிச் சரியாகச் சொல்லுதல் வேண்டும் என்ற முன்னோர் கூற்றினை அறிந்து தெளிவாகக் கூறவல்லவர் மனத்திலே குற்றங்களை நீக்கிய பரிசுத்தமான சிந்தனை. இரக்கமுடைமை, அடக்கம் என்பனவற்றையே ஆபரணங்களாகக் கொண்டவர்: தரும வழியிலே ஒழுகுபவர்.

உண்மையான பொருள் இவைதாம் என விளங்க வைத்து முன்னோர் விரிவாக எடுத்துரைத்த அகத்திணை ஏழுக்குமுரிய ஒழுக்கங்களையும் புறத்திணை ஏழுக்குமுரிய ஒழுக்கங்களையும் கற்றுத் தேர்ந்த சுந்தசுவாமியார் இவை தவிர்ந்த பொய்ப் பொருள்களை விரும்புவோரின் தலைவாயிலை நோக்கிச் செல்லாதவருமாவார் மலர் அணிந்த மங்கையரின் அழகு நலம் தீயது என அவர்கள் மீது பற்றிக்கொள்ளாது விட்டு அகன்றவருமாவார்.

தவநெறியிருக்க அவநெறியிற் செல்வோர் கரும்பு இருக்க இரும்பைக் கடித்துச் சுவைக்க முயலும் மூடர் என்பதை அறிந்து, இவர் உலக வாழ்வினைத் துறந்து. தவநெறியிலே முற்பட்டுச் செல்லும் ஞானிகளது பற்றின்மை என்னும் ஒப்பில்லாத செல்வத்தை தம்மிடத்தே திரட்டி வைத்துள்ள குற்றமில்லாத புகழினர்.

அன்பினைத் தமது ஆட்சியாகக் கொண்ட புலமையாளர். எல்லா நாடும் தம் நாடே எனக் கொண்டு அங்கெல்லாம் சென்று மகிழ்தலே முறைமை, எனினும் கந்தசுவாமியார். சிவபெருமான் ஆட்சி புரிந்த தென்பாண்டி நாட்டின் கண்ணுள்ள சோழவந்தான் என்னும் ஊரினை அடைந்து. அங்கு விளங்கும் சைவத் திருமடத்திலே வாழ்ந்தவராவார்.

### *129. சுவாமி விபுலாநந்தரின் செவியிலே தீப்பிழம்பாய் புகுந்து அவர் உள்ளத்தை வருத்திய செய்தி எதுவென விளக்குக.*

திருவேட்களம் என்ற இடத்திலே சுவாமியும் கந்தசுவாமியாரும் முதன் முதற் சந்தித்தனர், அந்தநாள் முதல கந்தசுவாமியார் அன்பு என்னும் கயிறு கொண்டு சுவாமியைக் கட்டிவிட்டார். இருவரும் நட்புரிமை பூண்டு ஒழுகலாயினர் சிறிதுகாலத்தின் பின்பு சுவாமி வடநாடு சென்றிருந்த காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது உள்ளத்தே ஊறிய அன்புரையினை எடுத்துரைக்கவோ தாம் ஆராய்ந்து கண்ட கலை முடிபுகளை மேலும் தெளிந்து கொள்ளவோ விரும்பிய கந்தசுவாமியார் சுவாமியின் விலாசத்தை நண்பர் வாயிலாகக் கேட்டறிந்து பெற்று அவருக்குக் கடிதம் எழுத எண்ணியிருந்தார். ஆனால் ஓரிரு நாட்களிலேயே கந்தசுவாமியார் மாரடைப்பால் தமது ஊன் உடலினை மண்ணில் விடுத்து வானுலகு புகுந்தார் என்ற செய்தி தீப்பிழம்பாயச் சுவாமியின் செவிகளுக்கு எட்டியது. அந்தச் செய்தி அவரது உள்ளத்தை உருக்கியது.

***130 ஆருயிர் நன்பரின் பிரிவினால் உள்ளத்தில் எழுந்த துயரத் தீயைப்போக்கிட, கங்கை என்னும் தெய்வநதியின் கரையினை அடைந்த சுவாமி தாம் கண்ட காட்சியை வருணிக்குமாற்றினை விளக்குக.***

மேற்கு வானம் பிணம் எரியும் தீப்போல காட்சி தந்தது. சூரியன் மெலிவடைந்து மறைந்து கொண்டிருந்தான். துன்பம் உற்றபோது இதயங்களின் பெருமூச்சு போல காற்று மெல்லிய இரைச்சலுடன் வீசியது. அதனை அசைவில் பனித்துளிகள் தூறின.

சிறிது பொழுதில் இருட்கூட்டம் மறைந்தது. வானவெளியில் பத்தாம்நாள் சந்திரன் தோன்றி ஒளியாகிய அன்பைச் சொரியலாயிற்று. உலகில் வாழும் உயிர்களின் வாழ்க்கைச் செய்தி பற்றி அறியலாம் என்று கருதிய சுவாமி, கங்கைக்கரையின் ஒருபால் அமர்ந்தார்.

கங்கைக்கு மறுகரையிலே காசிப்பூர் சுடுகாட்டுப் பக்கத்து நரிகள் ஊளையிடும் அவலக்குரல் அவர் செவியில் வீழ்ந்தது. கங்கையின் நல்ல நீரிலே உதிர்ந்த சருகுகளும் தடிக் குச்சிகளும் நீரலையால் ஏற்றப் பட்டுத் தம் செயலிழந்து எங்கணும் கிடந்தன.

நீரின் திவலைகள் [illegible] ஓரிடத்தில் ஒரு கணமும் நில்லாது எற்றுண்டு அலையில் மேலெழுந்தும் பின்பு கீழ் விழுந்தும் அலைந்து சென்று [illegible] அந்தக் காட்சி அடிகளுக்கு ஒரு உண்மையைப் புலப்படுத்தியது.

இந்தக் [illegible] [illegible] பூமியில் [illegible] [illegible] சமமானவர் [illegible] என்று [illegible] துன்பம் அவர்களை வந்து அடையப் பூமியில் வீழ்ந்து கண்ணீர் சொரியச் சோர்ந்து அழுவார்கள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையானது மயக்கமான சுழல் காற்றாய் வீசிட அதில் அகப்பட்டு அலைவார்கள்.

மரணம் என்ற வலிய கரையிலே அவர்கள் எற்றுண்டு கிடப்பார்கள். மீண்டும் பிறவி ஏற்படக் கருவி காரணங்கள் அவர்களைக் கூடும். அதனால் உடல் எடுத்து உலகத்திலே உழலத் தொடங்குவார்கள். காதலிப்பார்கள் காதலில் தோற்றதும் எண்ணவியலாத வேதனையிற் புகுந்து உழல்வார்கள்

இத்தகைய பல சிந்தனைகளை அக்காட்சியும் சிறப்பாகக் கங்கை நீரில் எற்றுண்டு அலைந்த தூச்சியும் அவர் உள்ளத்தில் எழுப்பின.

சுவாமி விபுலானந்தர் தூச்சியை உவமையாகக் கையாள்வது புறநானூற்றின் 192ஆவது பாடலை நினைவிற் கொண்ட தனாலாகும். யாதும் ஊரே யாவரும் கேளிர் எனத் தொடங்கும் அப்பாடல் கணியன் பூங்குன்றனார் என்ற புலவர்பெருந்தகை இயற்றியது. அப்பாடலின் சில அடிகள் பின்வருமாறு.

*வானந் தண்டுளி தலைஇ ஆனாது*
*கல்பொரு (து) இரங்கும் மல்லற் பேரியாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம்......... ............ ..........*

(புறநானூறு - 192. 7-10)

மின்னலோடு கூடிய மழையானது குளிர்ந்த துளியைப் பெய்வதால் அலைவுகள் அடங்காது கற்களை உருட்டிய வண்ணம் பாய்ந்து வரும் நீர் நிறைந்த பெரிய ஆற்றில் அகப்பட்டு மிதவை (தெப்பம்) போல அரிய உயிரானது. விதியின் வழியில் அகப்பட்டு (அகப்பட்டுப் பிறந்தும் இறந்தும் அலையும்)

## ***131. சுவாமிக்கும் சந்திரனுக்குமிடையே நடந்த (கற்பனை) உரையாடலைத் தருக.***

[illegible] புலவர்களின் [illegible] இ[illegible] [illegible] கவிகளின் பாடற் [illegible]களில் இ[illegible] தன்மை [illegible] [illegible] [illegible] [illegible] முறையில் வாழ்கின்ற [illegible] இந்த [illegible] [illegible] தாழ்ச்சியை அலை [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றமில்லாத புகழைப் பெருக்கிக் குளிர்ந்த அருள் உடையோராய் வாழ்வதும் எத்தன்மையால?

சந்திரன்: மானிடனே, கேட்பாயாக, இறத்தல் என்ற பெரிய உண்மையையும், மீண்டும் பிறத்தல் என்ற உண்மையையும், பிறந்தவர்கள் பழைமையான உலகில் மேன்மையடைதல் என்ற உண்மையையும், தேய்ந்து அழிதல் என்ற உண்மையை எவரும் தமது மனத்திலே கொள்வதற்காகவே நான் தேய்ந்தும் இறந்தும் மீண்டும் உதித்தும் வளர்ந்து காட்டுகின்றேன்.

மரணம் என்பது நித்திரை போன்றது. இனிமையாக நித்திரை செய்தபின் எழுந்திருப்பது போன்றதே பிறப்பு என்று இயற்றமிழ்ப் புலவராகிய திருவள்ளுவர் உரைத்ததை நீ நன்கு உணர்வாயாக.

(உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு- திருக்குறள் 309)

(சாக்காடு- மரணம்).

சுவர்க்க வாழ்வு என்பது நல்ல கனவு, நரக வாழ்வு என்பது வருத்தும் தீய கனவு, இவை முறையே ஒருவன செய்யும் நல்வினை தீவினை என்பவற்றின் விளைவுகளாகும்.

சுவாமி: (தம் நண்பரை நினைத்த வண்ணம்)ஒருவர் ஒரு பிறப்பிலே வருந்திக் கற்ற கல்வியானது அப்பிறவியுடன் மாய்ந்து போமோ? அன்றி மறுமைக்கும் அது உதவுமோ?

சந்திரன்: ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்(கு) எழுமையும் ஏமப் புடைத்து (திருக்குறள் 398) ஏமாப்பு- உதவுதல்) என்று திருவள்ளுவர் உரைத்த செம்மையான மொழியினைத் தெரிந்துகொள்.

**132. சந்திரன் கூறிய உண்மையிலிருந்து 'கந்தசுவாமியார் பாணினி, தொல்காப்பியன் முதலான இலக்கண ஆசிரியர்கள் வாழும் விண்ணுலகிலே தொடர்நது பிரமச்சாரியாய் இருந்து இலக்கணம் பயில்வார் என்பதை உணர்ந்த சுவாமி, அவருக்கு எழுதிய கடித வாசகங்களை தருக.**

1. அறிவு அழிவு வாராமல் காக்கும் கருவி.
2. அறநெறி ஒழுகலால் இன்பம் உண்டாகும்
3. உற்ற நட்பானது என்றும் நிலையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இவற்றுள் முதல் இரண்டும் திருக்குறட் கருத்துக்கள் (திருக்குறள் 421, 439) இத்திருக்குறள் பாடல்கள் தமிழ் இலக்கியம் நூலிலே விளக்கக் குறிப்புக்களில் தரப்பட்டுள்ளமை காண்க.

**133. செல்வம் நிறைந்த சுவர்க்க பூமியிலே கலைத் தெய்வம் வாழ்கின்ற தெருவில் ஒரு வீடு, அங்கு துன்பம் இல்லாது வாழும் பேரறிஞன் கந்தசுவாமி என்று முகவரியிட்டுச் சுவாமி தமது கற்பனைக் கடிதத்தை யார் மூலம் கந்தசுவாமியாரிடம் சேர்க்க எண்ணினார்? விளக்குக.**

தேவர் புகழும் கங்கை மூலம் தமது கடிதத்தைக் கந்தசுவாமியாரிடம் சேர்க்க எண்ணினார் ஏனெனில் கங்கா நதி மூவுலகும் செல்லவல்லது. எல்லா உயிர்களையும் தனது நீராகிய உணவை ஈந்து பாதுகாப்பது எனவே அதன் மூலம் கடிதம் அனுப்ப எண்ணிய சுவாமி அழகான மூன்று பாடல்களாலே கங்கையைப் போற்றி புகழ்ந்து பாடுகிறார்.

**மூன்று பாடல்களிலும் வரும் உவமைகள் வருமாறு**

| | உவமானம் | பொதுத்தன்மை | உவமேயம் |
|---|---|---|---|
| (1) | செம்பவளக் கொம்பு | செம்மை, அழகு | சிவபெருமானின் சிவந்தசடை |
| (2) | முத்து மாலை | வெண்மை ஒளி | கங்கை நதி |
| (3) | வெள்ளிக்கோல் | வெண்மைஒளி | கங்கை நதி |
| (4) | பொன்மலை | மஞ்சள் நிறம், ஒளி | பொன்னிறச் சடை |
| (5) | தூயவெண்முகில் | வெள்ளையோடு கூடல் | கங்கைநதி |
| (6) | சுடர்க்கதிர் | ஒளிக் கதிர் வீசல் | நீள்சடை |

இவ்வாறு உவமை மூலம் சிவனதும் கங்கையினதும் பெருமை, அழகு என்பவற்றை கூறிய சுவாமிகங்கையின் பயன்பாட்டினையும் சிறப்பாக எடுத்துரைக்கின்றார் அந்தப் பயன்பாடுகள் பின்வருவன.

(அ) சூரியனின் வெப்பத்தினை அகற்றி உலகிற்குக் குளிர்மை வழங்கல்.
(ஆ) மக்களின் பசியை ஆற்ற உணவு வழங்கல்
(இ) தனது புனிதத் தன்மையால் தன்னிடத்தே தீர்த்தமாடுவோரின் பிறவியை வேரறுத்தல்.

சுவாமியின் இப்பாடல்களிலே ஆற்றின் அழகும் இழுமென்று அது ஓடும் ஓசை நயமும் இணைந்த விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 134. சுவாமி கங்கையை வணங்கிக் கடிதத்தை வழங்க அது கடலை நோக்கிச் சென்ற வகையினைத் தொகுத்துத் தருக.

இவ்வாறு மூன்று முறை எண்ணி முறைமையாக வணங்க அவள் (கங்கா நதி) அழகிய சிலம்பு ஒன்று ஒலிக்கின்ற சிவந்த திருப்பாதங்கள் செந்தாமரை மலர்ப் போன்று திகழவும், அந்த மலரின் இலைகள் பட்டாடை போலத் துலங்கவும் தனது சிறிய இடைத்தளரவும், குற்றமற்ற ஒளி பொருந்திய சந்திரன் போல் தனது முகத்திலே புன்னகை தவழவும், மகரமாகிய மீனிலே அமர்ந்து மேகத்தினிடையே தோன்றும் மின்னற் கொடி போல் நீரிடத்தே தோன்றி மறைந்தனள் அவளைக் கண்டதும் நான் பூமியிலே மன்டியிட்டு வணங்கினேன் 'தேவர் உலகிலே வசிக்கின்ற என் நண்பனது கையிலே சேர்வதாகட்டும்' என்று சொல்லி எனது கடிதத்தினை தண்ணீரில் இட்டேன் இடவும் அதனை ஏந்திய ஆகாசக் கங்கை கடலை நோக்கி விரைந்து சென்றது.

### அரும்பத விளக்கம்

பேரவை–அறிஞசர் நிறைந்த பெரிய சபை, முதனூல் – முதல் நூல், நல்வினை ,தீவினை என்பவற்றினின்றும் நீங்கிய ஞானியே முதல் நூல் செய்ய வல்லவன் என்பது முன்னோர் முடிபு. அவநெறி– பயனில்லாத தீய வழி, தலைப்பட்டோர்– முற்பட்டோர், அமலன்– மலங்கள் அற்ற இறைவன், அகம் நெகுடும் – உள்ளத்தை– நெகிழவைக்கும், ஆருயிர் நேர் – அரியஉயிர் நேர்ந்த சமமான, பிழம்பு– சுடர், தரங்கம்– நீரலை, மன்பதை– நிலையான உயிரினம், வந்து இயையும்– வந்துகூடும், விதானம்– மேல் தட்டி, தாவில் (தா + இல்)– குற்றம் இல்லாத, எழுமை– ஏழுபிறப்புக்கள் மாணி பிரமசாரி, பாணினி–வடமொழியில் இலக்கண நூல் எழுதியவர், தொடர்–தொடர்பு, அற்றம்– அழிவு, அமைதி– இயல்பு. ஓலை– கடிதம், வேலை– சமுத்திரம்– செஞ்சடைவானவன்– சிவபெருமான் தண்ணளி– இரக்கம், ஏற்றியல்வோன்– இடபவாகனத்தமர்ந்த சிவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. ஒன்றுக்கு ஆயிரம் ஆயிரம்

அல்–ஹாஜ். ம. மு. உவைஸ்

***135. இப்பாடத்தில் வரும் கதையை எழுதிய அல்-ஹாஜ் ம.மு. உவைஸ் அவர்கள். பற்றி யாது அறிவீர் ?***

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய தமிழ் இலக்கியத் துறைத் தலைவராய் விளங்கும் பேராசிரியர் அல்ஹாஜ் ம.மு. உவைஸ் அவர்கள் இலங்கையில் பாணந்துரையைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவர், தமிழைச் சிறப்புப்பாடமாகக் கொண்டு கலைமாணிப்பட்டம் பெற்று இஸ்லாமியர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளை ஆராய்ந்து நூல் எழுதி முதுகலைமாணியாகிப் பின் கலாநிதிப் பட்டமும் அடைந்த உவைஸ் அவர்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் துறைபோன நிபுணர் அவை பற்றிய பெருந்தொகை யான கட்டுரைகள் எழுதியுள்ளார் பல இஸ்லாமிய இலக்கிய நூல்களைப் பதிப்பித்த பெருமையும் இவருக்கு உண்டு. சிங்களத்திலிருந்து தமிழுக்கும் ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கும் இவர் மொழி பெயர்த்த நூல்கள் பலவாகும்.

***136 நீதியும் நியாயமும் என்ற இவரின் நூலிலிருந்து ஏற்கெனவே 'நீதிக்குப் பின் பாசம்' எனற கதையைப் படித்த எமக்கு, 'ஒன்றுக்கு ஆயிரம் ஆயிரம் என்ற கதையை உணர்த்தும் படிப்பினை யாது ?***

இல்லறத்தில் இருப்போருக்கு விருந்தினரை உபசரித்தல் இன்றியமையாத கடமையாகும். பசி என்று வந்தவருக்கு மறுக்காது உனவளித்து அதனால் தமது வாழ்விற்குஆதாரமாயுள்ளதை இழப்பினும் அவ்வாறு இழக்கும் இழப்பே பின்னொரு காலத்தில் பல்லாயிரமடங்கு இலாபமாக மாறும் என்பதே ஒன்றுக்கு ஆயிரம் ஆயிரம் என்ற கதை உணர்த்தும் படிப்பினையாகும்.

***137. இவ்வாறு விருந்தோம்பிப் பெரும்பயன் அடைந்த கிழவியின் வரலாற்றைச் சுருக்கமாகத் தருக.***

பாலைவனத்திலே கூடாரம் அடித்துத் தன் முதிய கணவனோடு கிழவி ஒருத்தி வாழ்ந்து வந்தாள். ஒரு நாள் ஒட்டகத்திலே யாத்திரிகர் மூவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளிருந்த குடிசை வழியால் வந்தனர். குறைஷிக் குலத்தை சேர்ந்த அவர்களில் இருவர் ஹஸன் ஹீஸைன் எனும் பெயர்கள் பூண்டவர்கள். நபிகள் பெருமானாரின் பேரப்பிள்ளைகள், மற்றவர் அப்துல்லா மீர்ஜாபர் என்பவர்.

அவர்கள் கொடு வெயிலில் வந்து களைப்பு நீங்கக் கிழவி தனது கூடாரத்தின் குளிர்ந்த மணலிலே உட்கார இடமளித்தாள். முகம் கழுவிக் களைப்பாறியதும் அவர்களின் பசியினைப் போக்கத் தன்னிடம் இருந்த ஒரே ஆட்டின் பாலை அவர்களே கறந்து அருந்த விடுத்ததோடு., ஆட்டை அவர்களைக் கொண்டே வெட்டுவித்து இறைச்சி சமைத்து உணவும் வழங்கினாள்.

சிறிது பொழுதிலே அவர்கள் கிழவிக்கு நன்றிகூறி ஒரு சந்தர்ப்பம் வரும்பொழுது கைம்மாறு செய்வதாய் உறுதியளித்து அவ்விடம் விட்டு அகன்றனர். அவர்கள் சென்றபின் குடிசைக்கு அவள் கணவன் மாலைப்பொழுதில் வந்தான். அவனுக்குக் கிழவி செய்தது உடன்பாடில்லை, அவன் அவளை ஏசினான். கிழவியோ அவனைச் சமாதானம் செய்து, அங்கிருக்காது மதீனா சென்று உழைத்து வாழ ஆலோசனை கூறினாள். அவ்வாறே கூடாரத்தை அகற்றி, உடைமைகளையும் எடுத்துக் கொண்டு அவர்கள் மதீனா சென்றனர்.

சில காலத்தின் பின்பு முன்னர்த் தமக்கு உணவும், தங்குமிடமும் வழங்கிய கிழவியின் கூடாரத்தை நோக்கி அம்மூவரும் வந்த பொழுது கூடாரம் இருந்த இடம் வெறுமையாய் இருந்தது. அவர்கள் ஏமாற்றத்துடன் மதீனாவுக்குத் திரும்பினர்.

ஒரு நாள் காலை நேரத்தில் ஹஸன் பின் அலி (ரலி) அவர்கள் பணியாளரோடு தெருவிலே நடந்து செல்கையில், கிழவியைக் கண்டு தம்மை அறிமுகம் செய்து கொண்டார்கிழவி, அல்லாஹ் உங்களை ஆசிர்வதிப்பாராக என்றாள்.

முன்னர் அவர்கள் வாக்களித்தபடி ஹஸன் (ரலி) அவர்கள் ஆயிரம் திர்கங்களையும் ஆயிரம் ஆடுகளையும் கிழவிக்கு வழங்கினார். அவ்வாறே ஹுசைன் (ரலி) அவர்களும் அதேயளவு திர்கங்களும் ஆடுகளும் வழங்கினார். அப்துல்லா பின் ஜப்பர் அவர்களோ இரண்டாயிரம் திர்கங்களும் இரண்டாயிரம் ஆடுகளும் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***138. கிழவி தம்மை முதலிற் சந்தித்திருந்தால் தம் தோழர்கள் இருவரும் கொடுக்கமுடியாத அளவுக்குத் தாம் கொடுத்திருப்பார். என்று அப்துல்லாவின் ஜாபர் சொல்லியது எதற்காய் இருக்கலாம்?***

(அ) தம் நன்றிக்கடன் அத்துணைப் பெரியது என்பதைக் கிழவிக்கு உணர்த்த அவ்வாறு கூறியிருக்கலாம்.

(ஆ) நண்பர்கள் கொடுத்ததிலும் பன்மடங்கு அளிப்பது அவர்களது சுயகௌரவத்துக்குப் பங்கமாதல் கூடும் என்று எண்ணியதாலும் அவர் மிக அதிகமாகக் கொடாதிருக்கலாம்

(இ)நண்பர்கள் மீது தாம் கொண்ட அன்புணர்ச்சி கராணமாக அவர்கள் கொடுக்க வேண்டாத அளவிற்கு வழங்கி அவர்களின் செல்வத்தை அவர்களுக்குக் காத்துக் கொடுக்கலாமே, என்றும் அப்துல்லா பின் ஜாபர் எண்ணியிருக்கலாம்.

## அருமபத விளக்கம்

'அஸ்ஸலாமு அலைக்கும்' 'அலைக்கும் ஸலாம்' இஸ்லாமியர் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது வணக்க உரைகளாகக் கூறும் சொற்றொடர்கள். (அஸ்ஸலாமு அலைக்கும்-உங்களுக்கும் சாந்தி உண்டாகட்டும், வஅலைக்கும் ஸலாம் -உங்களுக்குச் சாந்தி உண்டாகட்டும்), பிரயத்தனம்-முயற்சி கைம்மாறு-பதில் உதவி, விருந்தோம்பல்-விருந்தினரை உபசரித்தல், புனிதஹஜ்-புனிதமான மக்கா யாத்திரை (இஸ்லாமியரின் ஐந்து சமயக் கடமைகளில் மக்காவிற்கு யாத்திரை செல்வதும் ஒன்று இந்த யாத்திரை ஹஜ் எனவும் ஹஜ் சென்று வந்தவரை ஹாஜியார் எனவும் பெண்மணியாயின் அவரை ஹாஜியாணி எனவும் மதிப்புடன் அழைப்பது இஸ்லாமியர்மரபு, அர்ப்பணித்தல்-மதிப்புடனோ வணக்கத்துடனோ ஒரு பொருளை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. செய்னம்பு நாச்சியார் மான்மியம்.

***139. 'செய்னம்பு நாச்சியார் மான்மியம்' என்ற நூல் பற்றி யாது அறிவீர்?***

இலங்கையின் கீழ்மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் கிராமப்புற நடைமுறைகளையும் பழக்கவழக்கங்களையும் எளிய தமிழில் ஆங்காங்கே பேச்சுவழக்குச் சொற்களும் அமையுமாறு ஆக்கப்பட்ட நூலே செய்னம்பு நாச்சியார்மான்மியம் ஆகும் மணம் சரிகாண் படலம் செப்பு அனுப்பும் படலம் நாச்சியார் படலம் முதலிய பல படலங்களைக் கொண்டது இந் நூல் பெரும்பாலும் நகைச்சுவையே இதில் மேலோங்கி நிற்பதைக் காணமுடிகின்றது.

***140. 'எல்லாம் அறிந்த எங்கள் ஆலிமு' எனச் 'செய்னம்பு நாச்சியார் மான்மிய' ஆசிரியர் குறிப்பிடும் ஆலிம் (மார்க்க அறிஞர்) அவர்களின் குணவியல்புகளை விளக்குக.***

'எங்கள்' என்பது கிராம மக்கள் தன்மை நவிற்சியாகத் தம்மையே குறிப்பதாகக் கொள்ளலாம். கிராமங்களின் போக்கினை எல்லாம் ஆலிம் அறிந்தவர். இஸ்லாமிய சமய நூல்களைக் கற்று மார்க்க அறிவு நிறைந்தவராய் மட்டுமன்றி உலக அனுபவம் முதலியவற்றிலும் நிறைந்தவராதலால் அவரை 'எல்லாம் அறிந்தவர்' என்றது பொருத்தமே அவர் சொல்வது எப்பொழுதும் நல்லதாகவே இருக்கும் என்பதும் கிராமத்தவர் நம்பிக்கை. ஆதலால் அவர் குறிப்பனவற்றையும் செய்வனவற்றையும் எவரும் தடுத்தல் கூடாது. என்பதை 'நாம் ஏன் தடுப்பான்?' என்ற கூற்றுப் பெறவைக்கின்றது. இக்கூற்று அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது.

இறந்தோருக்கு அளிக்கப்படும் கத்தம் எவரெவர் வீட்டில் எந்தஎந்த நாட்களில் நடக்கும் என்பதும் அவருக்கே தெரிந்த உண்மை ஊரை அளந்தவர் என்றால் ஊர் மக்களின் உள்ளங்களையும் அளந்தவர் என்பதுதானே பொருள்? ஆலிம் அவர்களின் பெயரைக் கேட்டாலே சுபகாரியங்கள் நடந்துவிடும் என்றால் அவரின் நல்ல மனமும் நற்செயலும் நன்கு புலப்படுகின்றதல்லவா? அவர் பார்வை பார்த்து ஊதிவிட்டால் எந்தத் தொற்றுநோயும் பறந்து விடுமாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்மக்களின் நம்பிக்கையிலும் அந்த நம்பிக்கைகளால் உண்டாகும் நன்மதிப்பிலும் ஆலிம் வாழ்ந்து கொண்டிருப்பவர் என்பதற்கு மேற்குறித்த விடயங்களே நல்ல சான்றுகள்.

தொழுகை நேரத்திலும் ஊராரின் சுபகாரியங்களை முடிப்பதிலேயே ஆலிமுக்கு எப்பொழுதும் குறியாய் இருந்தது இதனைப் புலப்படுத்த சுபகுத் தொழுகையைச் சுறுக்காய் முடித்த அவர் செயலை மான்மிய ஆசிரியர் எடுத்துக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

கணக்கப்பிள்ளை காசிம் பாவாவை வழியில் மறித்து 'நல்ல நாள் பார்த்து நாமும் வருவோம்' என்று அவர் சொன்ன செய்தியைப் பெற்ற ஆலிம், பெண்ணின் தந்தையான இசுமான் கண்டுவிற்கு உறவினரான இன்னின்னாரை அழைக்கச் சொல்வது அவரின் 'நாலும் அறிந்த' பண்பினை நன்கு புலப்படுத்துகின்றது இசுமான் கண்டுவுக்கு ஆலிம் கூறியதில் பூரண நம்பிக்கை இல்லை. கணக்குப்பிள்ளையின் மகனாவது தமக்கு மணாளனாக வருவதாவது: என்றதாழ்வுச் சிக்கல் அவருக்கு ஏற்பட்டதுபோலும்.

> அவர்களிடமும் அறியச் செய்து
> சம்மதம் கேட்டுச் சரிகண்டு வருவது
> சுபமாவாகிலும் நல்லது தானே?

என்ற இசுமான் கண்டுவின் சிந்தனைப் படர்ச்சியிலிருந்து இவ்வுண்மை வெளிப்படுகின்றது. எனினும் ஆலிமின் முன்பு மறுத்துப் பேசாது அவர் சொன்னதைச் செயற்படுத்த முற்படுவதிலிருந்தும் ஆலிமூக்கு இருந்த மதிப்பினை அறிந்து கொள்ளலாம்.

### *141. செப்பு அனுப்பும் படலம் மூலம் கிராம மக்களின் எவ்வெவ்வியல்புகள் புலப்படுகின்றன? விளக்குக.*

கிராமத்து வீடொன்றில் நல்லகாரியம் நடக்கப்போகிறது என்றதுமே ஊர்ப்பெண்கள் அந்த வீட்டில் ஒன்று கூடுவது பொது இயல்பாகும். அதற்கு செய்னம்பு நாச்சியார் மான்மியத்தில் வரும் கிராமப் பெண்கள் மட்டும் விலக்காவது எங்ஙனம்? மரியம் பீவியின் இளைய கிறுக்கன் (கடைக்குட்டி) சென்று தாய் அழைத்ததைக் கூற மறுபேச்சின்றி அவர்களும் வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் கூடினால் பேச்சுக்குக் கேட்க வேண்டுமா? வரப்போகும் ஆட்கள் மணமகன், அவன் குடும்பம் என்று பலவிடயங்களையும் தொட்டுக் கொண்டு அவர்கள் வம்பளப்பு நீள்கின்றது. கணக்குப்பிள்ளை காசீம் பாவா இணக்கம் உரைத்ததை இசைத்தாள் மரியம். இதனை வீட்டின் மண்டபக் கதவில் மறைந்து மகளும் ஆர்வத்தோடு கேட்டு நின்றாள். (மணமகளின் ஆர்வத்தை மிகவும் நாசுக்காக மண்டப பக்கலின் மறைந்தான் மகளும் என்ற அடிமூலம் மான்மிய ஆசிரியர் காட்டுகிறார்.)

அடுத்து, பலகாரம் செய்யும் வேலை தொடங்குகின்றது. என்னதான் போட்டி, புகைச்சல், பொறாமை, எரிச்சல் இருந்தாலும் இப்படியான சந்தர்ப்பங்களில் கிராமப் பெண்கள் இல்லத்தலைவியின் பேச்சுக்கு மறுப்பின்றித் தொட்டாட்டு வேலைகள் செய்வதை,

> *மாப்பலகாரம் மாலைக்கு முந்தியே*
> *சேர்த்திட வேண்டும் சிவந்த மாமி*
> *யாவரும் வருவீர் என்றனள் மாரியம்*
> *அப்படியே...................*

என்ற அடிகள் பெறவைக்கின்றன. மணவினைத்தரகரான ஆலிம் அவ்வேளையில் அங்குவருவதும், பலகாரம் செய்து முடிந்தது கேட்டு அவர், சிரிப்பதும், மணமகள் தந்தையான இசுமான் கண்டு எடுப்பாய் நிற்பதும் கிராமத்தவர் இயல்பை எதார்த்தமாகச் சித்திரிக்கின்றன.

### 142. மான்மியக் கதாநாயகியின் குணவியல்புகளை நூலிலே கூறியாங்கு விளக்குக. இறுதியிலே அவள்கணவன் அவளை இளகவைத்த வகையினையும் தருக.

செய்னம்பு நாச்சி ஒரு பெண்புலி. அதுவும் செங்காட்டுப் புலி இது இவளின் திறமை, வீரம், அதிகாரம் என்பவற்றால் இவளுக்குக் கிடைத்த பட்டம்: வாய்ப்பேச்சு இன்றியே எங்கும் சென்று எந்தக் கருமத்தையும் முடிக்கும் வல்லமை இவளுக்கு உண்டு, பாசாங்கு பண்ணுவதிலே ஆள்படு சூரி. நோய் இல்லாமலே நூறு நாள் படுக்கையிலே கிடப்பாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். சிக்கனம் செய்து சேமிப்பதிலும் புலிதான். சீட்டுப் பிடித்துப் பணம் சேர்த்துக் கூட்டுப்பெட்டிக்குள் குவித்து வைக்கும் திறமைசாலி. இவள்: ஏசத் தொடங்கினாலோ மனிதரிலிருந்து மரம்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே நடுங்கும். கணவரான காசிம் பாவாவோ கடுகாய்ச்சிறுத்துப்போவார் படுத்துக்கிடக்கிற பூனையும் பயத்தாலே பதைபதைத்துப் படி தாண்டி ஓடும், அழுகிறதே என்று அம்மா கையில் எடுத்த பிள்ளையும் அழுகையை மறந்து இம் என்று அடங்கிப் போய்விடும்.

இப்படிப்பட்ட ஒருத்தி, சம்பந்தியும் ஆகிவிட்டால் பெண் வீட்டாரைச் சும்மா விடுவளா? மரியம் பீவீ தனது குறிச்சிப் பெண்களைக் கூட்டிப் பயபத்தியோடு பலகாரம்செய்து பெட்டியில் வைத்து அனுப்பியதைப் பார்த்ததும் இவர்களுக்கு கடும் கோபம் மூண்டதற்குக் கேட்கவா வேண்டும்.

*நம்ம குடும்பம் நாடே அறியும்*
*கிள்ளிக் கொடுத்தாலும் கிடாரம் வேண்டும்*
*பேச்சுச் செப்பா? பிச்சைச் செப்பா?*

என்று இவள் முழங்கத் தொடங்கியபோது காசிம் பாவா பெட்டிப் பாம்பாக அடங்கினாலும் சந்தர்ப்பத்தை நோக்கிப் பின்வருமாறு கூறலானார்.

***வீடுங்க நாச்சி வேண்டா மேகுறை***
***முதல் முதல் வந்தது முனுமுனுக் காதே***
***பாட்டன் பூட்டன் பழக்கிய பழக்கம்***
***வீட்டுக்கு வந்ததை விரும்புதல்வேண்டும்***
***பள்ளிம் மாவீடம் பங்குவைக் கவீடு.***

இதைக் கேட்டதும் சந்தர்ப்பத்திற் கேற்பச் செய்னம்பு நாச்சியார் இளகிக் குளிர்ந்து போகிறாள் எவ்வளவுதான் முர்க்ககுணம் உடையவளானாலும் இவளுடைய சமயோகித புத்திக்கும் குறைவில்லை என்பது இதனால் புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. நன்றிப் பெருக்கு

கே. பி. எஸ். ஹமீத்

***143. காவியத்தில் வரும் நவரசங்கள் யாவை? இவற்றுள் அடங்காத 'இரசம்-சுவை'-என்று நன்றிப்பெருக்கு கட்டுரைஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்?***

காவியத்தில் வரும் நவரசங்களாவன,
(நவம் - ஒன்பது)

1. சிருங்காரம் – காதற்சுவை
2. ஹாஸ்யம் – நகைச்சுவை
3. சோகம் – துன்பச்சுவை
4. பயம் (பயாநகம்) – அச்சச்சுவை
5. பீபத்சம் – அருவருப்புச்சுவை (இழிவுரல்)
6. வீரம் – வீரச்சுவை
7. இரௌத்திரம் – கோபச்சுவை
8. அற்புதம் – வியப்புச்சுவை
9. கருணாரசம் – சாந்தச்சுவை

இவற்றுள் அடங்காததும் இவற்றிலும் நுணுக்கமானதுமான உணர்ச்சி பாவம் 'நன்றி உணர்ச்சி' என்பது 'நன்றிப் பெருக்கு' கட்டுரையாசிரியர் கொண்ட முடிபாகும்.

***144. உள்ளத்திலூறும் நன்றிப்பெருக்கை உலகாயதக் கண்கொண்டு நோக்குதல் என்பதன் பொருளை விளக்குக.***

ஒருவர் இன்னொருவருக்கு நன்மை ஒன்றைச் செய்வாரானால் அந்த நன்மையினாலே பயன் பெற்றவரின் உள்ளத்திலே தமக்கு நன்மை செய்தவர்மீது நன்றிப் பெருக்கு ஊறத் தொடங்கும்? இத்தகைய நன்றிப்பெருக்கினை உலகாயுதக் கண்கொண்டு நோக்குவதென்பது, உலக வாழ்க்கை நெறிகளில் வைத்துப் பயனை ஆராய்வது எனப் பொருள்படும். இவ்வாறு நன்றிப் பயனை அது இவ்வளவு என்று அளவிட்டுக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லில் உணர்த்துவது கடினமே. பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவரே,

> செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
> வானகமும் ஆற்றல் அரிது.

என்று கூறுவார் என்றால், நன்றிப்பயனை அளவிடுவது எவ்வளவு சிரமமானது என்பது நன்கு விளங்கும்.

***145. நன்றியறிதலை உளமாரச் செலுத்துவோர் இன்றும் இருக்கின்றனர் எனபதற்குக் கட்டுரை ஆசிரியர் காட்டும் உதாரணங்களைத் தருக.***

உயிருக்கே ஆபத்தான நோயினின்றும் குணப்பட்டுவிட்டால் அவ்வாறு குணப்படுத்திய மருத்துவருக்கு நன்றி செலுத்துவோர் இருக்கின்றனர். மரணம் முதலாகிய அவல வேளைகளிலே அது நிகழ்ந்த குடும்பத்தினருக்கு அனுதாபம் செலுத்துவோர்மீது நன்றி காட்டுவோரும் உள்ளனர். வீடு,மனை, சொத்து, சுகம் கிடைத்தால் அவைகிடைக்க உதவியோருக்கு, நன்றி பாராட்டுவோரும் உளர். குழந்தைப் பேற்றுக்கும், உத்தியோகம் பெறச் செய்த உதவிக்கும், விலங்குகள் முதலிய உயிரினங்கள் இயற்கையின் சத்திகளான சூரியன் முதலியன செய்யும் உதவிக்கும் நன்றி செலுத்துவோரும் பலராவர் காலத்தால் செய்த நன்றி பயன் கருதாது செய்த நன்றி என்று பல்வேறு சூழ்நிலைகளிலே செய்யப்படும் உபகாரங்களுக்கெல்லாம் நன்றியுடையோராய் நாம் இருக்கின்றோம்.

***146. இவ்வாறெல்லாம் நன்றி செலுத்தும் சமானிய மனிதரிலிருந்தும், புலவர்களிலிருந்தும் முஸ்லிம் தமிழ்ப் புலவராகிய பீர் முஹமது சஹீப் வேறுபடுவது எவ்வாறு?***

கட்டுரையாசிரியர் தமது நோக்கில் வேறுபடுத்திக் காட்டும் முஸ்லிம் தமிழ்ப்புலவர் சாமானிய கவிஞர் அல்லர், அவர் இறை பக்தர்: ஆன்மஞானி: சூ∴பி எனப்படும் தத்துவ ஞானக் கவிவல்லார் உலகாயத நன்றிகளைப் பொருட்படுத்தாது இறைவன் தமக்குச் செய்த நன்றியைப் பாராட்டுவதே இவரிற் காணத்தகும் சிறப்பாகும். 'பத்தி பரவசத்தின் எல்லையில் நின்று நன்றி தெரிவிப்பதென்பது, அதிலும் கவிதை வடிவத்திலே தம் நன்றியறிதலை உருவகப்படுத்துவதென்பது கவிஞனுக்கே இயலாத அத்துணைக் கடினமான காரியமாகும்' என்று இந்த ஆன்மீகக் கவிஞரின் முயற்சியைக் கட்டுரையாசிரியர் பாராட்டுகின்றார்.

***147. கவிஞரின் உள்ளத்தில் எழுந்த நன்றிப் பெருக்கின் அடிப்படை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***யாது? விளக்குக.***

கவிஞர் தாம் ஒரு முஸ்லிமாகப் பிறந்ததற்கும் வேதநபி அவர்களின் நெறி நின்று இஸ்லாம் மார்க்கத்தில் வாழும் பேறு பெற்றதற்கும் பெரிதும் மகிழ்கின்றார் இப்பேற்றினை ஆண்டவன் தமக்கு அருளியமையே கவிஞரின் நன்றிப் பெருக்குக்கான அடிப்படையாகும். இந்தப் பேரானது ஒருவித கர்வத்தையும் அவருக்கு ஏற்படுத்துகின்றது. 'செய்ந்நன்றி' கொன்ற மகளாகவன்றித் தாம் பிறப்பெடுத்துப் பயனடையச் செய்த இஸ்லாத்தைத் தமக்களித்த முழுமுதல் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

***148. 'இம் முஸ்லிம் புலவரின் நெஞ்சத்துள் ஓய்வு ஒழிவு இன்றி நிரந்தரமாக நின்று ஊறி வந்திருக்கின்ற அழியா உண்மை' எனக் கட்டுரையாசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்.***

'இன்று உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை நான்பூரணமாக்கி உங்கள் மீது என் அருளைப் பூர்த்தியாக்கி உங்களுக்கென்று இஸ்லாத்தை ஒரு மார்க்கம் ஆக்கினேன்' என்ற இறைவனின் திருமுறையில் வரும் அருள்வாக்கே முஸ்லிம் புலவரின் நெஞ்சத்துள் ஓய்வு ஒழிவு இன்றி நிரந்தரமாக நின்று ஊறி வந்திருக்கின்ற அழியா உண்மையாகும் என்பதே கட்டுரையாசிரியர் கொண்ட முடிபு.

***149. ஆதம்பெறும் மக்கள்...... எனத் தொடங்கும் பாடலின் பொருளினை உமது உரைநடையிலே தருக.***

ஆதம் நபி (அலை) அவர்கள் காலத்திலிருந்துவரும் மக்கள் யாவரிலும் மிகுதியான அன்பினை எம்மீது கொண்டு வேதநபியாகிய அண்ணல் இரசூல் எம்மை உம்மத்து ஆக்கினார். பாதங்கள் மேலாகவும் தலை கீழாகவுமாய் இருக்க, பத்துநூறாயிரமாகிய ஓர் இலட்சம் ஆண்டுகள் கடுமையான தவம் செய்தாலும் அப்பெருமான் எமக்கு உதவியளித்த இந்த நன்றிக்கு அது போதியதாகாது.

அரும்பத விளக்கம்

சிந்திரித்தல் – (சொல்லில் ஓவியம் போல்) வரைந்து காட்டல், விமர்சகர்கள் – இலக்கியம் கலை ஆகியவற்றின் தரம் தரமின்மையை மதிப்பீடு செய்வோர், பாயங்கள் – பாவனைகள், உலகாயதம் – உலகப் பொருள்களே நிலையானவை எனக்கொள்ளும் கொள்கை, அனுபவம் – இரக்கம் (இரங்கல்), இலட்சியம் – குறிக்கோள், மார்க்கம் – சமயம், வழி, நிரந்தரம் – நிலைபேறு, பூரணம் – முழுமை, அருட்கடாட்சம் – பெரிய கருணை., உம்மத்து – பின்பற்றுவோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் அச்சிட்டு விநியோகிப்போர்

லங்கா புத்தகசாலை,

G.L. 1. (1–2) டயஸ் பிளேஸ்,

கொழும்பு – 12.

Kall Kwick Print Ltd.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org